# தரம் - 4

## முதல் மொழி

# தமிழ்

## செயல் நூல்

விலை: 90/=

BRIGHT BOOK CENTRE

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD**
S - 27 FIRST FLOOR, P. O. BOX NO: 162,
COLOMBO CENTRAL SUPER MARKET
COMPLEX, COLOMBO-11. TELE : 434770

# தரம் 4

## மொழி விருத்தி

## தாய்மொழி – தமிழ்

## செயல் நூல்

**Rs: 75/=**

BRIGHT BOOK CENTRE
BRIGHT FUTURE IN YOUR HAND

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD**
S - 27, First Floor, P. O. Box - 162.
Colombo Central Super Market Complex
Colombo - 11 T. P. 434770

## முகவுரை

தமிழ்மொழி அடிப்படை மொழித்திறனை செயற்பாடுகள் ஊடாக வளர்த்துச் செல்லக் கூடிய முறையில் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து எனப் பாடப்பரப்பு பிரிக்கப்பட்டுள்ளது. செயற்பாடுகள் மூலம் மாணவரின் மொழிவிருத்தித் திறன் வளர்ச்சியடையக் கூடிய முறையில் செயற்பாடுகள் அமைக்கப்பட்டுள்ளன. பாடசாலைச் சூழல், பிரதேசம், வளம் என்பவற்றிற்கிணங்க பொருத்தமானதாக இப்பாடத்திட்டம் உள்ளது.

மாணவர்களின் தொடர்பாடல் திறன், கிரகிக்கும் ஆற்றல், அறிவு வளர்ச்சி, மனப்பாங்கு விருத்தி, திருத்தமான மொழிப்பிரயோகம், சிந்தனை விருத்தி, சமூகத்திறன் விருத்தி, கலாசாரப் பண்பாட்டு விருத்தி, கற்றலுக்கான கற்றல் எனும் குறிக்கோள்களை நிறைவு செய்யக்கூடிய முறையில் விடயங்கள் நான்கு பரப்புகளாக வகுக்கப்பட்டுள்ளன. இவற்றை நாம் முறையே கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து என வகுத்து செயல்நூலை உருவாக்கி உள்ளோம்.

தரம் 4 மாணவர்களிடம் சொற்களஞ்சிய விருத்தி, மொழி வளம், திருத்த மொழிப்பிரயோகம் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன. இதே ரீதியில் மாணவர்களின் வாசிப்பு, பேச்சு, கேட்டல், எழுத்து என்பன விருத்தி அடையக்கூடிய முறையில் – செயல் முறை நூலாக இதனை வகுத்துள்ளோம். இந்நூலை மாணவர்களும் ஆசிரியர்களும் பாவிப்பதன் மூலம் சிறந்த பலாபலன்களை அடைய முடியும்.

நன்றி

**பொன். சக்திவேல்**

# தரம் 4

## தாய் மொழி - தமிழ்

### பாடத்திட்டம்

1) கேட்டல்

1. இரசனையுடன் செவிமடுத்தல்
   - 1.1 எளிய கவிதைகள், பாடல்கள், நாட்டுப் பாடல்கள்
   - 1.2 விளையாட்டுப் பாடல்கள், குழுப் பாடல்கள்
   - 1.3 கதைகள், கட்டுரைகள், உரைநடைப் பகுதிகள்
   - 1.4 நாடகங்கள், பாத்திரப் படைப்புகள், உரையாடல்கள், பொம்மலாட்டங்கள்
   - 1.5 செய்யுள்கள், நீதிப்பாடல்கள்
   - 1.6 விடுகதைகள், புதிர்கள், பழமொழிகள்
   - 1.7 விளம்பரங்கள், அறிவித்தல்கள்
   - 1.8 வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

2) பேசுதல்

2. நாளாந்த தேவைக்களுக்கான பேச்சுத்திறனை விருத்தி செய்தல்.
   - 2.1 பல்வேறு தேவைகளுக்காக ஆசிரியர், மாணவர்களுடன் பேசுதல்
   - 2.2 வீட்டிலுள்ளோர், அயலவர், உறவினருடன் பேசுதல்
   - 2.3 குறித்த தேவைகளை நிறைவேற்றுவதற்காக கடை, சந்தை, தபால் நிலையம் முதலிய இடங்களில் பேசுதல்
   - 2.4 மனித நேய, சமூக, உறவு விருத்திக்காக பேசுதல்

3) வாசிப்பு

3. சரியான உச்சரிப்போடு உரத்து வாசித்தல்.
   - 3.1 உச்சரிப்பு, தெளிவு, விரைவு, விளக்கம் எண்பவற்றை பெறும் வகையில் வாசித்தல், உரைப்பகுதிகள் ~ பாடல்கள் முதலியன.
   - 3.2 பிறர் கேட்பதற்காகத் தெளிவாக வாசித்தல் ~ அறிக்கை, செய்தி, அறிவுறுத்தல், அழைப்பிதழ்.
   - 3.3. ஒலிவேறுபாடுகளை தெளிவு படுத்தி வாசித்தல்
     ண, ந, ன / ற, ர, ட / ல, ள, ழ
   - 3.4 உணர்ச்சி, மெய்ப்பாடு தோன்ற ஒலித்து வாசித்தல்
   - 3.5 உச்சரிப்பு இடர்ப்பாடுகளை நீக்கி வாசித்தல்

4) எழுத்து

4. எழுத்துப் பொறிமுறையை அனுசரித்து எழுதுதல்
   - 4.1 அளவு, அமைப்பு, திசை முகம்
   - 4.2 உறுப்பு, அழகு
   - 4.3 தெளிவு, புனிதம்
   - 4.4 எழுத்து, சொல், வாக்கியம், பந்தி என்பவற்றுக்கு சீரான இடைவெளி விட்டு எழுதுதல்

5) கேட்டல்

5. பண்புடனும் பணிவுடனும் செவிமடுத்தல்.
   - 5.1 சந்தர்ப்பம், சூழ்நிலைக்கேற்றவாறு பண்புடன் செவிமடுத்தல்.
   - 5.2 பொதுவான அறிவுறுத்தல், அறிவித்தல், செய்திகளை செவிமடுத்தல்.
   - 5.3 மெய்ப்பாடுகளை அவதானித்தலும் செவிமடுத்தலும்.
   - 5.4 பண்புடனும் பணிவுடனும் செவிமடுக்கும் திறனை விருத்தி செய்தல்.

6) பேசுதல்

6. கருத்துக்கள், உணர்ச்சிகள், செய்திகள் முதலியவற்றை விளக்கமாக, தெளிவாக, ஒழுங்குமுறையாக, திட்டவட்டமாக வெளிப்படுத்தும் திறனை விருத்தி செய்தல்.
   - 6.1 மற்றையவர்களுடன் பேசுதல்.
   - 6.2 உரையாடுதல்.
   - 6.3 மன்றங்களிலே குறித்த பொருள் பற்றிப் பேசுதல்.
   - 6.4 பாத்திரமேற்றும், நாடகங்களில் நடித்தும் பேசுதல்.
   - 6.5 தர்க்கித்து, விமர்சித்துப் பேசுதல்.
   - 6.6 செய்திகளைப் பரிமாறிப் பேசுதல்.
   - 6.7 அனுபவங்களை வெளிப்படுத்திப் பேசுதல்.

7) வாசிப்பு

7. குறியீடுகளை அனுசரித்து வாசித்தல்.
   - 7.1 முற்றுப்புள்ளி (.) காற்புள்ளி (,) அரைப்புள்ளி (;) முக்காற்புள்ளி (:) என்பவற்றை அனுசரித்து வாசித்தல்.
   - 7.2 வினாக்குறி (?) வியப்புக்குறி (!) மேற்கோட்டுக்குறி (“ ”) அடைப்புக்குறி ( ) என்பவற்றை அனுசரித்து வாசித்தல்.
   - 7.3 குறியீடுகளை அனுசரிப்பதன் மூலம் பொருட்தெளிவு பெற வாசித்தல்.

8) எழுத்து

8. உயிர்க்குறிகளைச் சரியாக இட்டு எழுதுதல்.

8.1 சீரான உயிர்க் குறிகள்.

கா, கி, கீ, கெ, கே, கை, கொ, கோ, கௌ

8.2 வேறுபாடான உயிர்க் குறிகள்.

கு, கூ, சு, சூ, டு, டூ, து, தூ, டி, டீ

8.3 உயிர்க்குறிகளுக்கும், குறில் நெடில் ஓசைகளுக்குமான தொடர்புகளை இனங்காணல்.

9) கேட்டல்

9. கிரகித்தலுக்காகச் செவிமடுத்தல்.

9.1 பல்வேறு வகையான மொழி வடிவங்களை செவிமடுத்தலும் கிரகித்தலும் ~ உரையாடல், நாடகம், விளம்பரம், அறிவித்தல், கதைகள், பாடல்கள், விடுகதைகள், புதிர்கள், பழமொழிகள் ஆகியவற்றைச் செவிமடுத்தல்

9.2 செவிமடுத்தவற்றை சொந்த நடையில் எழுதுதல்.

9.3 கிரகித்தவற்றுக்கு விடையளித்தல்.

9.4 கிரகித்தமைக்கேற்பத் துலங்குதல்.

9.5 செவிமடுத்த செய்திகளை தகவல்களுக்கு ஏற்ப பரிமாறுதல்.

9.6 கிரகித்தவற்றை ஞாபகப்படுத்தி ஒழுங்குபடுத்திக் கூறுதல்.

9.7 கிரகித்தவற்றை தேவைக்கும் சந்தர்ப்பத்திற்குமேற்ப மீண்டும் பயன்படுத்தல்.

10) பேசுதல்

10.கேட்போர் இயல்பறிந்து பொருத்தமாகப் பேசுந்திறனை விருத்தி செய்தல்.

10.1 மூத்தோர், சான்றோருடன் பேசும்போது.

10.2 நண்பர்கள், சகாபாடிகளுடன் பேசும்போது.

10.3 இளையோருடன் பேசும்போது.

10.4 வலது குறைந்தோர் / நோயாளருடன் பேசும்போது,

11) வாசிப்பு

11.மௌனமாக வாசித்துக் கிரகித்தல்.

11.1 மொழிவடிவங்கள், விடயங்களை வாசித்து கிரகித்தல்.

11.2 குறித்தவொரு விடயப்பகுதியை வாசித்து, வினாவுக்கு விடை கூறுதல் / எழுதுதல் ~ பந்தி, கதை, பாடல்.

11.3 எளிதான கதைகள், கவிதைகள் ~ மௌனமாக வாசித்து அவற்றின் சாரம்சத்தை சொந்த நடையில் கூறுதல்.

11.4 விளம்பரங்கள், அறிவுறுத்தல், அழைப்பிதழ்கள் வாசித்துக் கிரகித்தல்.

11.5 வாசித்துக் கிரகித்துத் துலங்குதல்.

11.6 அறிவுறுத்தல்களை வாசித்து அவற்றின்படி செயற்படுதல்.

12) எழுத்து

12.விரைவாக எழுதுந் திறனை விருத்தி செய்தல்.

12.1 பார்த்து எழுதுதல்.

12.2 சொல்வது எழுதுதல். (கேட்டு எழுதுதல்)

12.3 விரைவாக எழுதும் பயிற்சிகள்.

12.4 அளவு, அமைப்பு, உறுப்பு, தெளிவு சீரான இடைவெளி முதலானவற்றுடன் எழுதுதல்.

12.5 சுயமாக விரைவாக எழுதிப் பழகுதல்.

## 13) கேட்டல்

13.சிந்திப்பதற்காகச் செவிமடுத்தல்

13.1 செவிமடுத்து, விடைகூறுதல், தொடர்புகாணல், தர்க்கித்தல், விமர்சித்தல் போன்ற திறன் பெறல்

13.2 சிந்தித்தல் மூலம் அறிவு திறன் மனப்பாங்குகளை விருத்தி செய்தல்.

13.3 சிந்தித்தல் மூலம் அகக்காட்சி காணல், நல்ல மனப்பாங்குகள், விழுமியங்கள் உருவாக்குதல்.

13.4 சிந்தித்தல் மூலம் சூழலுடன் இயைபாக்கம் பெறல்.

13.5 சிந்தித்தல் மூலம் படைப்பாற்றலை விருத்தி செய்தல்.

## 14) பேசுதல்

14.திருத்தமான மொழியிற் பேசுதல்.

14.1 பேச்சு மொழியை செம்மையான மொழியாக்கிப் பேசுதல்.

14.2 வகுப்பறை / பாடசாலையிற் பேசுதல்.

14.3 மன்றங்களிற் பேசுதல்.

14.4 தொலைபேசியில் பேசுதல்.

14.5 பிற சந்தர்ப்பங்களிற் பேசுதல்.

## 15) வாசிப்பு

15.வாசிப்பதன் மூலம் சொற்களஞ்சியத்தை விருத்தி செய்தல்.

15.1 வாசிக்கும் புதிய சொற்களை இனங்கண்டு அட்டவணைப்படுத்தல்.

15.2 ஒத்த கருத்துச் சொற்கள், எதிர்க் கருத்துச் சொற்கள், எதிர்பாற் சொற்கள், எதிர்மறை சொற்கள் என்பவற்றை இனங்காணல்.

15.3 இணை மொழிகள், ஒலிக்குறிப்புச் சொற்கள் முதலியவற்றை இனங்காணல்.

15.4 சொற்றொடர்கள், உவமைத்தொடர்கள், பழமொழிகள் முதலியவற்றை இனங்காணல்.

15.5 சுருக்கக் குறியீடுகளை வாசித்து விரித்துக் கூறல்.

15.6 சொல்லாக்க விளையாட்டுகள், குறுக்கெழுத்துப் போட்டி ~ கட்டங்களை நிரப்புதல், புதிர்களை விடுவித்தல்.

16) எழுத்து

16.கருத்துக்களை பொருத்தமாக அமைத்து எழுதுதல்.

16.1 சொற்கள் / சொற்றொடர்களை வைத்து வாக்கியம் அமைத்தல்.

16.2 சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியங்கள் அமைத்து எழுதுதல்.

16.3 திணை, பால் எண், இடம் வேறுபாடுகளை அனுசரித்து எழுதுதல்.

16.4 முக்கால வேறுபாடுகளுக்கேற்ப வாக்கியம் அமைத்து எழுதுதல்.

16.5 எழுவாய் பயனிலை என்பவற்றை இனங்காணல்.

16.6 நாளாந்த தேவைகளை அனுசரித்து எழுதுதல்.

17) கேட்டல்

17.செவிமடுக்கும் தகவல்களுக்கேற்பத் துலங்குதல்.

17.1 வகுப்பறை அறிவுறுத்தல்கள், பணிப்புரைகள் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பத் துலங்குதல்.

17.2 கற்றல் தொடர்பான வினாக்கள், ஒப்படைகளுக்கு துலங்குதல்.

17.3 விசேட சந்தர்ப்பங்கள் தொடர்பான தேவை அறிவுறுத்தல்களுக்கேற்பத் துலங்குதல்.

17.4 பொது அறிவித்தல்கள், தகவல்களுக்குத் துலங்குதல்.

17.5 பாடசாலை, சமூகக் கட்டொழுங்கு தொடர்பான அறிவித்தல்களுக்கு துலங்குதல்.

18) பேசுதல்

18.பேச்சுப் பண்புகளை விருத்தி செய்து பேசுதல்.

18.1 ஒலி வேறுபாடுகளுக்கமையச் சரியான உச்சரிப்போடு பேசுதல்.

18.2 தொனி வேறுபாடுகளை அனுசரித்து பேசுதல்.

18.3 மெய்ப்பாடுகளுடன் உணர்வு வெளிப்படப் பேசுதல்.

18.4 பண்போடு இனிமையாக பேசுதல்.

19) வாசிப்பு

19.கற்றலுக்காக வாசிக்குந் திறனை விருத்தி செய்தல்.

19.1 மாணவர்கள் காண்பவற்றை தாமே வாசித்துக் கிரகித்தல் ~ விளம்பரங்கள், சுவரொட்டிகள், அறிவித்தல்கள்.

19.2 குறித்தவொரு தேவைக்காக வாசித்தல் ~ பாடநூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள்.

19.3 ஒரு விடயம் தொடர்பாக பலவற்றை வாசித்தல்.

19.4 தகவல்களை திரட்டுவதற்காக வாசித்தல்.

19.5 குறிப்பிட்ட விடயத்தின் குறைவு / நிறைவுகளை அறிவதற்காக வாசித்தல்.

19.6 அகராதியைப் பயன்படுத்தும் பழக்கத்தை ஏற்படுத்தல்.

20) எழுத்து

20.வினாக்களுக்கு விடை எழுதுந்திறனை பெறுதல்.

20.1 ஒத்த கருத்துச் சொற்கள், எதிர்க்கருத்துச் சொற்கள் முதலியன.

20.2 ஒரு சொல் பலமொழி, பலசொல் ஒருமொழி.

20.3 சொற்களைச் சேர்த்தும் தொடர்களைப் பிரித்தும் எழுதுதல்.

20.4 பந்தி, பாடல், கதை ஒன்றினை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுதல்.

21) கேட்டல்

21.தகவல்களை திரட்டுவதற்காக செவிமடுத்தல்.

21.1 செவிமடுக்கும் விடயக்கூறுகள் மூலம் பல்வேறு தகவல்கள் திரட்டுதல்.

* கவிதைகள், கதைகள், கட்டுரைகள்.
* வகுப்பறைக் கற்றல், கற்பித்தல், அறிவுறுத்தல்கள்.
* இணைப் பாடவிதானச் செயற்பாடுகள்.

21.2 தொடர்பாடல் மூலம் தகவல்களைக் திரட்டுதல். (ஆசிரியர், மாணவர், சமூகம்)

21.3 பொது நிகழ்ச்சிகளில் பங்குபற்றல் மூலம் தகவல் திரட்டுதல்.

21.4 மக்கள் தொடர்புச் சாதனங்கள் மூலம் தகவல் திரட்டுதல்.

22) பேசுதல்

22.சொற்களஞ்சிய விருத்திகளைப் புதிய சொற்களைக் கையாண்டு பேசுதல்.

22.1 பரீட்சயமான சொற்களை பயன்படுத்தி பேசுதல்.

22.2 அறிமுகமான சொற்களை பயன்படுத்தி பேசுதல்.

22.3 தேவைகளுக்கேற்ப புதிய சொற்களை பயன்படுத்தல்.

22.4 முதல், நடு, இறுதி எழுத்துக்களை முதலெழுத்தாகக் கொண்டு சொற்களை உருவாக்கி பேசுதல்.

22.5 புதிய சொற்களை அட்டவணைப் படுத்திப் பேசுதல்.

23) வாசிப்பு

23.வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துதல்.

23.1 பொதுத் தொடர்பு அறிவித்தல்களை சுயமாக வாசித்தல் ~ பெயர்ப் பலகைகள், விளம்பரங்கள், சுவரொட்டிகள்.

23.2 இரசணைக்காக வாசித்தல்.

23.3 பொழுது போக்கிற்காக வாசித்தல்.

24) எழுத்து

24.பொருத்தமான இடங்களில் குறியீடுகளை இட்டு எழுதுதல்

24.1 நிறுத்தற் குறியீடுகள் ~ முற்றுப்புள்ளி, முக்காற்புள்ளி, அரைப்புள்ளி, காற்புள்ளி

24.2 ஏனைய குறியீடுகள் ~ வினாக்குறி, வியப்புக்குறி, மேற்கோட்குறி, அடைப்புக்குறி

24.3 குறியீடுகளின் பயன்பாடு பற்றி அறிதல் ~ கருத்துத்தெளிவு, உணர்ச்சி வெளிப்பாடு, அவகாசம்

25) பேசுதல்

25.பல்வேறுவகையான பேச்சுத்திறன்களை விருத்தி செய்தல்.

25.1 பேச்சு வழக்கும் ~ மேடைப்பேச்சும்.

25.2 கலந்துரையாடலும் ~ நட்புறவுடனான நடித்துப் பேசுதலும்.

25.3 பாத்திரமேற்றுப் பேசுதலும், நாடகத்தில் நடித்துப் பேசுதலும்.

25.4 விவாதித்தல், விமர்சித்தல்.

25.5 அறிவித்தல், அறிவுறுத்தல், தகவல் தெரிவித்தல்.

25.6 கதை கூறுதல், பா ஓதுதல்.

26) எழுத்து

26.ஆக்கி எழுதுந்திறனை விருத்தி செய்தல்.

26.1 ஒரு பொருள் பற்றி விளக்கி எழுதல்.

26.2 அனுபவத்தை வெளிப்படுத்தி எழுதுதல்.

26.3 ஒரு பொருள், நிகழ்ச்சி, சம்பவம் பற்றி வர்ணித்து எழுதுதல்.

26.4 கடிதம், அழைப்பிதழ் எழுதுதல்.

26.5 கதை, கவிதை முதலியவற்றை ஆக்கி எழுதுதல்.

26.6 உரையாடல் எழுதுதல்.

## மரமும் மாடும்

'மரமே, மாடே' என்றெல்லாம்
மனிதர் திட்டிச் கொள்கின்றார்.
மரமும் மாடும் உதவுதல் போல்
மனிதர் எங்கே உதவுகிறார்?

நிழலைத் தந்து களைப்பெல்லாம்
நீக்குதல் அந்த மரமாகும்.
பழத்தைத் தந்து உடலுக்கே
பலத்தைத் தருவது மரமாகும்.


விறகைத் தந்து அரிசியினை
வேகச் செய்வது மரமாகும்.
பறவை கூடு கட்டி இனம்
பரவச் செய்வது மரமாகும்.

வயலை உழுது பயிர்களையே
வளரச் செய்வது மாடாகும்
வெயிலில், மழையில் வண்டிகளை
விரைந்து இழுப்பது மாடாகும்.

கழுத்து நோகத் தினந்தினமும்
சுமையை இழுப்பது மாடாகும்.
கொளுத்தும் வெயிலில் நடந்திடவே
கொடுப்பது மிதியடி மாடாகும்.

# இரசனையுடன் செவிமடுத்தல்

## 1.1 எளிய கவிதைகள், பாடல்கள், நாட்டுப்பாடல்கள்




எள்ளெடுத்தது வெள்ளெலி
கொள்ளெடுத்தது முள்ளெலி
நெல்லெடுத்தது சுள்ளெலி
நெற்றெடுத்தது புற்றெலி

எள்ளைக் கொடுத்தது வெள்ளெலி
கொள்ளைக் கொடுத்தது முள்ளெலி
நெல்லைக் கொடுத்தது கள்ளெலி
நெற்றைக் கொடுத்தது புற்றெலி

கத்தரித் தோட்டத்து மத்தியிலே நின்று
காவல் புரிகின்ற சேவகா! - நின்று
காவல் புரிகின்ற சேவகா!
மெத்தக் கவனமாக கூலியும் வாங்காமல்
வேலை புரிபவன் வேறுயார்! உன்னைப்போல்
வேலை புரிபவன் வேறுயார்!

கண்ணும் இமையாமல் நித்திரை கொள்ளாமல்
காவல் புரிகின்ற சேவகா! - என்றும்
காவல் புரிகின்ற சேவகா!
எண்ணில் உன்னைப்போல் இரவுபகலாக
ஏவல் புரிபவன் வேறு யார்? - என்றும்
ஏவல் புரிபவன் வேறு யார்?

வட்டமான பெரும்பூசினிக் காய்போல
மஞ்சள் நிற உறு மலைப்பார்! - தலையில்
மஞ்சள் நிற உறு மலைப்பார்!
கட்டி இறுக்கிய சட்டையைப் பாரங்கே
கைகளில் அம்போடு வில்லைப்பார்! இரு
கைகளில் அம்போடு வில்லைப்பார்!



## 1.2 விளையாட்டுப் பாடல்கள், குழுப்பாடல்கள்

**சிங்கத்தின் வீட்டிற் கொண்டாட்டம்**
**சிறுத்தைகள் எல்லாம் பெருங்கூட்டம்**

**சிலந்தி கட்டும் வெள்ளை**
**குரங்கு கட்டும் மாலை**



**ஒட்டகம் கொட்டகை ஆக்கும்**
**சிவிங்கி சரங்கள் தூக்கும்**

**கரடி கொட்டும் மேளம்**
**குதிரை தட்டும் தாளம்**

**பாட்டுப் பாடும் குயில்கள்**
**நாட்டியம் ஆடும் மயில்கள்**

**பன்னீர் தெளிக்கும் யானை**
**சந்தனம் கொடுக்கும் பூனை**

**மான்கள் பாயை விரிக்கும்**
**முயல்கள் அழைத்துச் சிரிக்கும்.**

## 1.3 கதைகள், கட்டுரைகள், உரைநடைப் பகுதிகள்

1. மாணவர்களே! கீழ்க்காணும் கதையை வாசித்து பூர்த்தி ஆக்குங்கள்.

### பொன் முட்டையிடும் வாத்து

ஒரு ஊரிலே ஒரு முட்டை வியாபாரி இருந்தான். அவன் வாத்து முட்டைகளையும், கோழி முட்டைகளையும் சந்தையில் விற்று வந்தான். அவனிடம் பொன்முட்டையிடும் வாத்து ஒன்று இருந்தது. அது ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பொன்முட்டை இட்டது. வியாபாரி பணக்காரன் ஆனான். அவனுக்கு விரைவில் பெரும் தனவந்தன் ஆகும் எண்ணம் வநதது. ..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................

2. மாணவர்களே! கீழ்க்காணும் தலையங்கங்களில் கட்டுரைகளை எழுதுங்கள்.

1. பாடசாலையில் எனது முதல் நாள்
2. நான் விரும்பும் பெரியார்
3. எமது பாடசாலை

3. கீழ்க்காணும் உரைநடையை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

கிருமிகள் பூச்சி, புழுக்களை விட மிகச் சிறியன. கண்ணுக்கு தெரியாதவை. இக்கிருமிகளால் பல நோய்கள் உண்டாகின்றன. இலையான்கள் மலத்தில் அல்லது எச்சிலில் இருக்கும்போது அவற்றின் கால்களில் நோய்க்கிருமிகள் ஒட்டிக்கொள்ளும். பின் அவை நமது உணவில் வந்து இருக்கும்போது அக்கிருமிகள் எமது உணவில் ஒட்டிக் கொள்ளும். அந்த உணவை நாம் உண்ணும் போது கிருமிகள் நமது உடம்பினுட் செல்லும். அதனால் நமக்கு நோய்கள் உண்டாகும்.

1. கிருமிகளால் எமக்கு என்ன ஏற்படுகிறது?

2. நோய்க்கிருமிகள் எதனால் பரவுகின்றன?

3. கிருமிகள் எவ்வாறான வடிவமுடையவை?

4. நோய்க்கிருமிகள் எமக்கு எவ்வாறு தீங்கிழைக்கின்றன?

5. கிருமிகளை இல்லாமலாக்குவதற்கு நீர் என்ன பாதுகாப்பு செய்வீர்?

## 1.4 நாடகங்கள், பாத்திரப் படைப்புகள், உரையாடல்கள், பொம்மலாட்டங்கள்.

### நாடகம் - ஒரு வழக்கு

சேவகன் : சாக்கடை ஈயார், சாக்கடை ஈயார், சாக்கடை ஈயார்
*(சாக்கடை ஈயார் வந்து கூண்டில் ஏறி நிற்றல்)*
அழுக்கடை நுளம்பார், அழுக்கடை நுளம்பார், அழுக்கடை நுளம்பார்
*(அழுக்கடை நுளம்பர் வந்து கூட்டில் நிற்றல்)*

நீதிபதி : என்ன குற்றம் செய்தார்கள் இவர்கள், தெளிவாகச் சொல்லுங்கள் பொலிசாரே...!

பொலிசார் : பிரபு! இருவரும் செய்தவை கொலை முயற்சிகள். 28 பேருக்கு வாந்திபேதி உண்டாக்கியுள்ளனர். ஒருவர் இறந்து விட்டார். ஏனையோர் சாகக் கிடக்கிறார்கள்.

நீதிபதி : நுளம்பாரின் குற்றம் என்ன?

பொலிசார் : ஐம்பத்திமூன்று பேருக்கு மலேரியாக் காய்ச்சலை ஏற்படுத்தியுள்ளார். எல்லோரும் ஆஸ்பத்திரியில் உள்ளார்கள்

நீதிபதி : என்ன சொல்லுகிறீர் ஈயாரே! நீர் குற்றவாளியா? சுத்தவாளியா?

ஈயார் : நான் சுத்தவாளி பிரபு!

நீதிபதி : நுளம்பாரே நீர் குற்றவாளியா? சுத்தவாளியா?

நுளம்பார் : நான் சுத்தவாளி பிரபு!

பொலிசார் : பிரபு! அவர்கள் இருவரும் பொய் சொல்லுகிறார்கள்.

நீதிபதி : சரி, சாட்சிகள் வரட்டும்....

சாட்சி 1 : பிரபு அவர்களே! இந்த ஈயார் எனது உணவில் கிருமிகளை தொற்ற வைத்ததால் எனக்கு வயிற்றுளைவு ஏற்பட்டு நான் ஆஸ்பத்திரிக்குச் சென்று மருந்தெடுத்தேன்.

நீதிபதி : சரி, மற்றைய சாட்சி வரட்டும்.

சாட்சி 2 : பிரபு அவர்களே! என்னை அழுக்கடை நுளம்பார் குத்தியதால் எனக்கு மலேரியாக் காய்ச்சல் வந்துள்ளது.

நீதிபதி : சரி, இருவரும் உண்மைதான் கூறுகிறீர்களா?

சாட்சி 2 : ஆம் பிரபு

நீதிபதி : அப்படியானால் வைத்தியரை விசாரித்து விட்டு இவர்கள் இருவருக்கும் தண்டனை வழங்குவோம். அதுவரை ஈயாரையும் நுளம்பாரையும் கூண்டில் அடைத்து வையுங்கள். நாளை விசாரணை தொடரும்.

கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக

1. குற்றம் புரிந்த இருவரும் யாரார்?

.............................................................................................................

2. குற்றம் உண்மையா, பொய்யா?

.............................................................................................................

3. நீதிபதி என்ன கூறினார்?

.............................................................................................................

4. பொலிசார் கூறியது யாது?

.............................................................................................................

## 1.5 செய்யுள்கள், நீதிப்பாடல்கள்

**வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்**
**நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு**
**துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்**
**தப்பாமற் சார்வார் தமக்கு.**

பொழிப்புரை: பவளம் போன்ற சிவந்த திருமேனியையும், தும்பிக்கையையுமுடைய விநாயகரின் திருவடிகளை ஒவ்வொரு நாளும் பூக்களினால் அர்ச்சிப்போர்க்கு, சொல் வன்மையுண்டாகும். தூய உள்ளம் உண்டாகும். சிவந்த தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமி தேவியின் அருள் உண்டாகும். அவர் மேனி நோயினால் வாடாது.

நன்றி ஒருவற்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கொ லெனவேண்டா - நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்.

பொழிப்புரை: நாம் ஒருவருக்கு ஒரு உபகாரத்தை செய்தால் அவ்வுபகாரத்திற்கான பிரதியுபகாரத்தை அவர் எப்போது நமக்குத் திருப்பிச் செய்வார் என எதிர்பார்க்க வேண்டாம். நிலைத்து நின்று வளரும் தென்னை மரமானது தனது வேர்களில் ஊற்றப்பட்ட தண்ணீரை தனது தலையின் மூலம் சுவை மிக்க இளநீராக எமக்குத் தருகின்றது.

கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக.

1. யாருக்கு நல்வாக்கு உண்டாகும்?

   ..............................................................................................................................

2. முதலாவது பாடலின் மூலம் அறியக்கூடியது யாது?

   ..............................................................................................................................

3. தென்னை எவ்வாறு நன்றியை தெரிவிக்கின்றது?

   ..............................................................................................................................

4. நன்றி எனப்படுவது யாது?

   ..............................................................................................................................

## 1.6 விடுகதைகள், புதிர்கள், பழமொழிகள்

1. கீழ்க்காணும் விடுகதைகளுக்கான விடைகளை எழுதவும்.
   1. தொப்பென விழுந்தான், தொப்பி கழன்றான். அவன் யார்? ..........................................
   2. எட்டுக்கால் ஊன்றி, இருகால் படமெடுத்து, வட்டக்குடை பிடித்து வாறாராம் வன்னியனார். அவன் யார்? ....................................
   3. வெள்ளைக் காரனுக்கு கறுப்புத் தொப்பி. அது என்ன? ....................................
   4. காய்ப்பார், பூப்பார், கலகலப்பார், காகம் இருக்க கொப்பில்லை. அது என்ன? ....................................
   5. எலும்பு இல்லாதவனுக்கு முப்பத்திரெண்டு பேர் காவல். அது என்ன? .......................
   6. ஒரு குப்பிக்குள் இரண்டு நிற எண்ணெய் அது என்ன? ....................................
   7. எல்லோரும் எதிர்பார்க்கும் பால், குடிக்க முடியாத பால். அது என்ன? ....................................
   8. வெட்டலாம், கட்டலாம், வீட்டுக்கு கொண்டு செல்லமுடியாது. அது எது? ....................................

2. கீழ்க்காணும் புதிர்களை விடுவியுங்கள்

1. நன்னுவார், தின்னமாட்டார், அவர் யார்? ..................................
2. ஓட ஓட நீண்டு செல்வான். அவன் யார்?..................................
3. ஒரு வட்டத்துக்குள் பன்னிரண்டு வீரர்கள் அரசிக்கும் அரசனுக்கும் காவல். ..................................
4. எண்ணெய் இல்லாமல் ஓடும் வண்டி எது? ..................................
5. காட்டுக்குள்ளே கறுப்பியும் சிவப்பியும் ஒரே இடத்தில் உள்ளனர். அவர்கள் யார்? ..................................
6. கால்கள் இருந்தும் ஓட முடியாமல் ஊர்வான். அவன் யார்? ..................................
7. பார்த்தால் முள், வெட்டினால் சக்கை, உரித்தால் முத்து. அது எது? ..................................
8. இரவிற்கு ஆயிரம் கண்கள், பகலுக்கு ஒருகண். அவை எவை? ..................................

3. கீழ்காணும் பழமொழிகளில் உள்ள கீறிட்ட இடங்களுக்கு சரியான சொல்லை தரப்பட்ட சொற்களில் இருந்து தெரிவு செய்து நிரப்புக.

திரண்டால், உப்பிட்டவரை, முகத்தில், காலை, அழுத, இக்கரை, பூனை, அமாவாசை, சுரைக்காய், சுடுகாடு

1. அகத்தின் அழகு .................................................. தெரியும்.
2. .................................................. பிள்ளை பால் குடிக்கும்.
3. அடம்பன் கொடியும் .................................................. மிடுக்கு.
4. ஆழம் அறியாமல் .................................................. விடாதே.
5. அக்கரைக்கு .................................................. பச்சை.
6. .................................................. உள்ளளவும் நினை.
7. ஏட்டுச் .................................................. கறிக்கு உதவுமா?
8. ஐயர் வருகிறவரை .................................................. காத்திருக்குமா?
9. சூடு கண்ட .................................................. அடுப்பங்கரை நாடாது.
10. தொட்டில் பழக்கம் .................................................. மட்டும்.

## 1.7 விளம்பரங்களும், அறிவித்தல்களும்

கீழ்க்காணும் விளம்பரங்களை பார்த்து கேட்கப்பட்ட கேள்விகட்கு விடை தருக.

நீங்கள் தொலைக்காட்சி, வானொலி, புதினப்பத்திரிகை ஆகியவற்றில் விளம்பரங்களை பார்த்தும் கேட்டும் இருப்பீர்கள். உதாரணமாக...

## கூட்ட அறிவித்தல்

எங்கள் பாடசாலையின் மாணவர் மன்றக் கூட்டம் 10.09.99 அன்று பிற்பகல் 1.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் மாணவர்களை கூட்டத்தில் கலந்த கொள்ளுமாறு கேட்கின்றோம்.

இப்படிக்கு
ஆ. அஸ்மின்
செயலாளர்

### நிகழ்ச்சி நிரல்

1. ஆராதனை
2. தலைமையுரை
3. செயலாளர் சென்ற கூட்ட அறிக்கையை வாசித்தல்.
4. அங்கத்தவர்களின் நிகழ்ச்சிகள்

## 1.8 வானொலி தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

**ரூபவாஹினி**

காலை

6.00 ஆயுபோவன்
8.00 ஒளிபரப்பு முடிவு

நண்பகல்

12.30 செய்திகள்
12.40 சி. என். என். செய்திகள்
12.50 கதிகா
1.00 செய்திகள்
1.10. கதிகா (தொடர்ச்சி)
2.00 கல்வி ஒளிபரப்பு
4.30 ரங்கன
4.55 விளையாட்டு
5.50 மும்மணிகளுக்கு அஞ்சலி

மாலை

6.00 உதார
6.30 செய்திகள்
6.55 கலையரங்கம்
7.25 கொவிபிம்மட்ட அருனலு
8.00 செய்திகள்
8.35 பிட்டகம்காரயோ
9.05 சம்பத் ரேகா
9.20 சிங்கள திரைப்படம் "விஸ்மய"
9.45 செய்திகள்
10.10 சிங்களத் திரைப்படம் (தொடர்ச்சி)
11.55 சி. என். என் செய்திகள்

*சிகனல பறபசைககுரிய விளமபரம*

| உங்கள் பற்கள் பிரகாசமாயிருக்க<br>உங்கள் வாய் நறுமணத்துடன் இருக்க<br>உங்கள் வாழ்வு வளமாயிருக்க<br>''சிக்னல்'' பற்பசையை பாவியுங்கள் |
|---|

*நகை மாளிகை விளமபரம*

| மங்கையின் அழகுக்கு<br>மேலும் அழகூட்டும் நகைகள்<br>உங்கள் மேனிக்கு அழகூட்டும்<br>22 கரட்டில் பெற்றிட நாடவேண்டிய இடம்<br>இரத்தின மஹால்<br>செட்டித்தெரு, கொழும்பு – 11. |
|---|

1. பறகள பிரகாசம அடைய எனன செயய வேணடும? ..................................
2. சிக்னல் பாவிப்பதன் பலன் யாது? ....................................
3. மங்கையர்க்கு அழகூட்டுவது எது? ....................................
4. நகை மாளிகை அமைந்துள்ள தெரு எது? ..................................
5. நகை எததனை கரடடில செயயபபடுகினறது? ..................................
6. உஙகளுககு விருபபமான விளமபரம ஒனறை எழுதவும்? ..................................

................................................................................................................................................

................................................................................................................................................

**அழைப்பிதழ் ஒன்றையும், கூட்டஅறிவித்தல் ஒன்றையும் பார்ப்போம்.**

## பிறந்த நாள் அழைப்பிதழ்

"வசந்த மாளிகை"
நகைக்கடைத் தெரு
பாணந்துறை
16-7-96

அன்புடையீர்,

எதிர் வரும் புதன்கிழமை 25.7.96ம் திகதி அன்று எமது ஏகபுதல்வன் செல்வன் ஆ. வசந்தன் அவர்களது ஒன்பதாவது பிறந்த நாள் கொண்டாட்டம் நிகழ இருப்பதால், அத்தருணம் தாங்களும் வருகை தந்து நடைபெறவிருக்கும் விருந்து உபசாரத்தில் பங்கு கொள்ளமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இப்படிக்கு
திரு. திருமதி. ஆறுமுகநாதன்

## எம். ரி. வி

காலை

| | |
|---|---|
| 6.00 | செய்திகள் |
| 6.30 | சீ. என். பீ. ஸி ஏசியா |
| 7.30 | சிறுவர் நிகழ்ச்சி |
| 8.00 | சிறுவர் நிகழ்ச்சி |
| 8.30 | மெடலின் |
| 9.00 | உலகைச் சுற்றி |
| 9.30 | தகவல் கல்வி நிகழ்ச்சி |
| 10.00 | ஓபன் லேனிங் |
| 11.00 | தகவல் கல்வி நிகழ்ச்சி |

நண்பகல்

| | |
|---|---|
| 12.30 | செய்திகள் |
| 1.00 | பேஜ் கிராஜுவேட் ஸ்டீஸ் |
| 2.00 | றூசர விந்தன |
| 2.30 | நிஹண்ட ரங்கன |
| 3.00 | சுப்பர் மார்க்கட் சுவீப் |
| 3.30 | அமெரிக்காஸ் பன்னிஸ்ட் ஹோம் வீடியோஸ் |
| 4.00 | என்சைக்லோபீடியா |
| 4.35 | கிஸ்ஸிபர் |
| 5.00 | மை டூ டட்ஸ் |
| 6.00 | கந்துயாயே |
| 6.30 | ஆலகமந்தாவ |
| 7.00 | செய்திகள் |
| 7.30 | சாந்தி |
| 8.00 | செய்திகள் |
| 8.30 | பேசொட்ச் |
| 9.30 | டூ குளோஸ் போ கொம்போட் |
| 10.00 | செய்திகள் |
| 10.30 | குறுந்தொடர் |

## ரி. என். எல்

மாலை

| | |
|---|---|
| 4.30 | மோஸ்ட் வோன்டட் |
| 5.00 | ஏரோபிக்ஸ் |
| 5.30 | செய்திகள் |
| 6.00 | அமெரிக்கன் ஸ்னப் ஷொப் |
| 6.30 | புஷ்சி ரூவான் தாரகா |
| 6.55 | செய்திகள் |
| 7.00 | சினிமா கீ திலின |
| 7.30 | லர்ன் டு டான்ஸ் |
| 7.55 | செய்திகள் |
| 8.00 | கலுவர அடவிய |
| 8.30 | நியு ஹிட்ஸ் |
| 8.55 | செய்திகள் |
| 9.05 | லொய்ஸ் அண்ட் கிளார்க் |
| 10.00 | இசை நிகழ்ச்சி |

## ஐ. ரீ. என்.

மாலை

| | |
|---|---|
| 5.40 | மும்மணிகளுக்கு அஞ்சலி |
| 5.45 | அதிகாரப் பரவலாக்கல் |
| 6.00 | மிஷன் டொப் சீக்ரட் |
| 6.30 | பாரத கீ விந்தன |
| 7.10 | வெத ஹாமுதுருவோ |
| 7.45 | செய்திகள் |
| 8.00 | பான் கிளப் |
| 8.30 | தஸ தெசின் |
| 9.00 | பெவெறி ஹில்ஸ் |
| 9.45 | ஹிந்தி திரைப்படம் |
| 10.15 | செய்திகள் |
| 10.31 | ஹிந்தி திரைப்படம் (தொடர்ச்சி) |
| 11.45 | செய்திகள் |

1) மேலே காணப்படும் நிகழ்ச்சிநிரலை அவதானித்து வினாக்களுக்கு விடை எழுதுக

1. ரூபவாஹினியில் கல்வி ஒளிபரப்பு நடைபெறும் நேரம் யாது?

.......................................................................................................................................

2. கலையரங்கம் எச்சேவையூடாக தொலைக்காட்சியில் காட்டப்படுகின்றது?

.......................................................................................................................................

3. இவ்வட்டவணையில் தொகுக்கப்பட்ட தொலைக்காட்சி சேவைகளின் பெயர்களை எழுதுக?

.......................................................................................................................................

4. எம். ரி. வி யில் செய்திகள் நடைபெறும் நேரம் யாது?

.......................................................................................................................................

5. 9.20 க்கு தொலைக்காட்சியில் காட்டப்படும் "விஸ்மய" சிங்களத் திரைப்படம் எச்சேவையூடாக வழங்கப்படுகின்றது?

.......................................................................................................................................

6. அதிகார பரவலாக்கல் பற்றிய கலந்துரையாடல் எத்தனை மணிக்கு எச்சேவையில் நடைபெறுகிறது?

.......................................................................................................................................

2. பேசுதல்

**நாளாந்த தேவைகளுக்கான பேச்சுத்திறனை விருத்தி செய்தல்.**

## 2.1 பல்வேறு தேவைகளுக்காக ஆசிரியர் மாணவர்களுடன் பேசுதல்

ஆசிரியர் : வணக்கம், மாணவர்களே!

மாணவர் : வணக்கம், ஆசிரியரே! (சேர்)

ஆசிரியர் : இன்று நாம் மாணவர்களின் பேச்சுத்திறனை விருத்தி செய்வது பற்றி பார்ப்போம். ராசா நீர் எழுந்து "எமது நாடு" என்ற தலைப்பில் பேசும்.

ராசா : எமது நாடு இலங்கை, இது மாங்காய் வடிவானது. இங்கு சிங்களவர், தமிழர் முஸ்லிம்கள், பறங்கியர் ஆகியோர் வாழ்கிறோம். எமது நாட்டில் சிங்களம்,

தமிழ், ஆங்கிலம் என்பன பாவிக்கப்படும் மொழிகளாகும். எமது நாட்டுத் தேசியக் கொடியில் சிங்கம் உள்ளது.

ஆசிரியர் : நல்லது மாணவர்களே, நீங்களும் ராசாவைப் போல் பேசப் பழகுதல் வேண்டும்.

## 2.2 வீட்டிலுள்ளோர் / அயலவர் / உறவினருடன் பேசுதல்.

நாம் வீட்டில் தாய் தந்தையருடனும், அக்கா, அண்ணா, தங்கை, தம்பி ஆகியோருடனும் பேசுகிறோம். இதே போன்று அயலவருடனும் உறவினருடனும் பல விடயங்களை பேசுகிறோம். பேசும் போது பிழையின்றி தெளிவாக பேசுவது முக்கியமானதாகும்.

## 2.3 கடை, சந்தை, தபால் நிலையங்களில் பேசுதல்.

ஒவ்வொருவருடைய பேச்சுக்கள் மூலமும் மற்றையவர்கள் அவர்களைப் பற்றி அறிந்து கொள்கின்றனர். சிறந்த பேச்சு நல்ல மதிப்பு பெறும். கடை, சந்தை, தபால் நிலையங்களில் பணிவாக பேசி, எமது தேவையை நிறைவேற்ற வேண்டும். அன்பாக பேசுவதன் மூலம் அன்பை பெறலாம்.

## 2.4 மனித நேய, சமூக உறவு விருத்திக்காக பேசுதல்.

ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ள உதவுவது பேச்சாகும். நல்ல பேச்சு வன்மை உள்ளவனுக்கு நண்பர்கள் அதிகமாக இருப்பர். அன்பு விருத்திக்கும் சமூக ஒற்றுமைக்கும் பேச்சு உற்ற துணையாகும். மக்கள் மக்களுடன் பேசுவதன் மூலம் கலை, கலாச்சாரம் என்பன விருத்தியாகின்றன.

பயிற்சி

1. கீழ்க்காணும் சொற்களை அவதானித்து கீறிட்ட இடங்களை நிரப்புக.

பேசுவதனால், அன்பு, பேச்சு, கடைக்காரருக்கும், விரும்பியவருடன், தமது, அன்பாகப் பேசி,

1. அயலவர்களுடன் ........................................................ பழக வேண்டும்.
2. ஆசிரியர், மாணவர்களது ........................................ த்திறனை வளர்க்க பாடுபடுவர்.
3. மாணவர்கள் மாணவ மன்ற கூட்டங்களில் ............................... பேச்சுத்திறனை வளர்க்கலாம்.
4. கடைகளில் பொருள் வாங்குவோருக்கும் ............................................ இடையே பேச்சு வார்த்தை நடைபெறும்.
5. தொலைபேசி மூலம் எமக்கு ........................................................ உரையாட முடியும்
6. ........................................................ மூலம் மனித நேயத்தை வளர்க்கலாம்.
7. கூட்டங்களில் ........................................................ எமக்கு மனக்கூச்சம் தெளிவடையும்.

2. கீழ்க்காணும் வாக்கியங்கள் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (×) எனவும் அடைப்புக்குள் எழுதுக.

1. ஆசிரியரும் மாணவரும் பாடசாலையில் உரையாடுவார்கள். (............................)
2. ஊமை தனது பேச்சுக்கலையை வளர்க்க வேண்டும். (............................)
3. அன்பாக பேசுவதனால் சண்டை, கோபம் உருவாகும். (............................)
4. மாணவர்கள் மாணவ மன்றக் கூட்டங்களில் பேசுவது கூடாது. (............................)
5. பாடசாலை அதிபர் மாணவர்களின் கூட்டங்களில் நல்ல அறிவுரைகளை கூறுவார். (............................)

3. பின்வருவனவற்றைச் சரியாகப் பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | அம்மா, அப்பா, அக்கா, தம்பி, | அயலவர் |
| 2. | அன்பாக பேசவேண்டிய இடம் | மனித நேயம் வளரும் |
| 3. | மாலா, மாமா, மாமி, கலா | கடை, தபால் நிலையம் |
| 4. | பக்கத்து வீட்டு மாமா, மாமி | வீட்டிலுள்ளோர் |
| 5. | பேச்சுக்கலை மூலம் | உறவினர் |

4. நீர் சந்தைக்கு சென்று வியாபாரியுடன் உரையாடி பொருட்களை பெற்றுக் கொண்டதைப் பற்றிய ஓர் உரையாடலின் பத்து வாக்கியங்களை எழுதுக.

1. ........................................................................................................
2. ........................................................................................................
3. ........................................................................................................
4. ........................................................................................................
5. ........................................................................................................
6. ........................................................................................................
7. ........................................................................................................
8. ........................................................................................................
9. ........................................................................................................
10. ........................................................................................................

3. வாசிப்பு

## சரியான உச்சரிப்போடு உரத்து வாசித்தல்.

### 3.1 உச்சரிப்பு, தெளிவு, விரைவு, விளக்கம் என்பவற்றை பெறும் வகையில் வாசித்தல்.

பிள்ளைகளே! நீங்கள் வாசிக்கும் போது, வாசிக்கும் நிலை, புத்தகத்தைப் படிக்கும் முறை, தொனி, குறியீடு, மெய்ப்பாடு என்பவற்றில் கவனம் செலுத்த வேண்டும். வாசிக்கும் போது பிழைகள் விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். திக்கித் திக்கிக் கூறக்கூடாது. திருத்தமான உச்சரிப்புக்களை திரும்பவும் கூறக்கூடாது. குறியீடுகளைக் கவனித்து வாசிக்க வேண்டும். உச்சரிப்பில் கவனம் செலுத்த வேண்டும்.

உதாரணமாக:-

1. இரைச்சல் என்ற சொல்லை இரைசல் என வாசிக்கக்கூடாது.
2. கூறி என்பதை குறி என்று வாசிக்கக்கூடாது.
3. பழப்புளி என்பதை பளப்புலி என உச்சரிக்கக்கூடாது.

இதே போலவே, அறம் என்பதை அரம் என்றும், நிறம் என்பதை நிரம் என்றும், புணம் என்பதை பனம் என்றும் வாசிக்கக் கூடாது. மாணவர்களே! நீங்கள் பல்விதமான சிறிய கதைகளை வாசிப்பதன் மூலம் சரியான உச்சரிப்புக்களை அறிந்து கொள்ளுங்கள்.

வானொலி, தொலைக்காட்சி என்பவற்றில் செய்தி அறிக்கைகள் பிழைகளில்லாமல், தெளிவாக, விளங்கக்கூடிய முறையில் வாசிக்கப்படுவதை மாணவர்கள் அவதானித்தல் வேண்டும்.

பின்வரும் உரைப்பகுதியைக் கவனமாக வாசியுங்கள்.

எங்கள் ஊரில் ஒரு நூல் நிலையம் இருக்கின்றது. அங்கே பல புதினப் பத்திரிகைகளும், நூல்கள் பலவும் இருக்கின்றன. எங்கள் ஊர் மக்கள் அங்கு சென்று பத்திரிகைகளை வாசித்துச் செய்திகளை அறிவார்கள். படிக்கும் மாணவர்கள் அங்கே சென்று புத்தகங்களை வாசிப்பார்கள்.

### 3.2 தெளிவாக வாசித்தல்.

மாணவர்கள் ஒவ்வொருவரும் பாடம் 1 இல் 7 ஆவதாக உள்ள பிறந்த நாள் அழைப்பிதழையும், கூட்ட அறிக்கையையும் ஏனைய மாணவர்கள் கேட்கக் கூடிய முறையில் தெளிவாக வாசித்து பழகுவதன் மூலம் பயிற்சி செய்தல் வேண்டும்.

கீழ்க்காணும் பந்தியை மாணவர்கள் உரத்து தெளிவாக வாசிக்கவும்.

## வான்கோழியும் கானமயிலும்

மாளிகையொன்றின் புறத்தே ஒரு குப்பை மேட்டிலே, ஒரு வான்கோழியின் நடனம் நிகழ்ந்தது. அதனைக் கோழிக்குலமும் காகக் கூட்டமும் கண்டு களித்தன. "ஆகா, இது அற்புதம், அற்புதம்!" என்று பாராட்டின. அணி பல அணிந்து, அலங்கரித்து வான் கோழியைப் பறவைச் சாதியின் அரசனாக்கி, அதற்கு முடி புனைய வேண்டுமென்று கூறின. இவ்வாறு வீட்டுப்பறவைகளாற் புகழப்பட்ட வான்கோழி காட்டுப் பறவைகளின் புகழையும் பெற விரும்பியது.

ஒரு நாள் அது செருக்குடன், கம்பீர நடை நடந்து, ஒரு கானகத்தையடைந்தது. அக்கானக மத்தியிலே பசும்புல்லரங்கிலே மயில் தன் வண்ணப் பசுந்தோகையை விரித்து ஆடியது. வாகை, வன்னி, முதலிய மரங்களிலே இருந்த கிளி, நாகணவாய், மரங்கொத்தி முதலிய பறவைகள் அதைக் கண்டு களித்தன. வான்கோழியும் கண்டது. கோலமயிலின் கூத்தைக் கண்ட வான்கோழி பொறாமையால் மனம் கொதித்தது. தானும் அரங்கிலே ஏறி ஆடவிரும்பி, என்னழகைப் பாரீர்; என் ஆட்டத்தையும் பாரீர்; என்று பறவைகளை நோக்கிக் கூறிக்கொண்டு சுழன்ற சுழன்று ஆடியது. அதனைக் கண்ட பறவைகள் கல்கலத்து இகழ்ந்தன.

இந்நிகழ்ச்சியை அவ்வழியால் வந்த ஔவையாரும் பார்த்தார். அவருக்குச் சிரிப்பு உண்டானது. மயில் ஆடியதைப் பார்த்து இந்த வான் கோழியும் ஆடுவதாக அவர் எண்ணினார். மயிலின் அழகும் ஆடலும் இப்பொல்லா வான்கோழிக் குளவாமோ? முட்டை எனத்தனக்குப் பெயரிட்டுப் பொய்யா மொழிப் புலவரிடம் பாடல் கொண்ட கோல்க்குமரன் மலைமகள், மைந்தன், முக்கணான் புதல்வன்: விரும்பி ஊர்ந்த மயிலுக்கு பறவைகளின் அரசனுக்கு வான்கோழி ஈடாக முடியுமா? ஆயினும், அறிவுடையவர்கள் போலப் பாவனை காட்டும் அறிவீனர்களுக்கு இந்நிகழ்ச்சி நல்லதோர் உவமையாகும் என்னும் எண்ணம் அவருள்ளத்திலே தோன்றிற்று. அப்போது அவர் பாடிய பாடல் பின்வருமாறு:-

**கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி**
**தானு மதுவாகப் பாவித்துத் - தானுந்தன்**
**பொல்லாச் சிறகை விரித்தாடினாற் போலுமே**
**கல்லாதான் கற்ற கவி.**

## 3.3 ஒலி வேறுபாடுகளைத் தெளிவு படுத்தி வாசித்தல்

நீங்கள் உச்சரிக்கும் போது ஒலி வேறுபாடுகளில் கூடிய கவனம் செலுத்துதல் அவசியமாகும். பின்வரும் ஒலி வேறுபாடுகளை அவதானியுங்கள்.

லகர, ளகர, ழகர, ரகர, றகர, னகர, ணகர, நகர

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பலம் | பழம் | 7. | மரம் | மறம் |
| 2. | குளம் | குலம் | 8. | பரவை | பறவை |
| 3. | குழம்பு | குளம்பு | 9. | மனம் | மணம் |
| 4. | அலகு | அழகு | 10 | அனல் | அணல் |
| 5. | தலம் | தளம் | 11. | கனம் | கணம் |
| 6. | அரம் | அறம் | 12. | நகரம் | நரகம் |

வாசிக்கும் போது எதனை வாசிக்கிறோம் என்பதற்கமைய உணர்ச்சி மெய்ப்பாடுகள் தோன்ற ஒலித்து வாசிக்க வேண்டும். ஆசிரியரும் மாணவரின் கண்நகர்வு, தலையசைவு, விரல் வைத்து வாசித்தல் என்பவற்றில் கவனம் செலுத்த வேண்டும். பல பந்திகளை வாசிப்பதன் மூலம் உச்சரிப்புக்களின் ஒலி வேறுபாடுகளை தெளிவுபடுத்த முடியும்.

> அகர வரிசைப்படுத்தப்பட்ட சொற்களஞ்சியத்தைக் கவனியுங்கள். இதனைப் பலமுறை உச்சரித்து வாசியுங்கள்

| | | |
|---|---|---|
| அழகு | கட்டுரை | மங்களம் |
| அபிவிருத்தி | கடமை | மலர் |
| ஆலய மணி | காயம் | மாணிக்கம் |
| இல்லாள் | கிரௌஞ்சம் | மும்முரம் |
| ஈயக் குண்டு | கீசகன் | மேம்பாடு |
| உழவன் | குயிலிசை | மௌனம் |
| ஊசிமுனை | கூற்றுவன் | வடிவேலன் |
| எலுமிச்சை | சந்தனம் | வாழை |
| ஏறுமயில் | சாயங்காலம் | விவசாயி |
| ஐயம் | சுபம் | வீர புருஷன் |
| ஒத்துழைப்பு | செந்தமிழ் | வெகுளி |
| ஒற்றுமை | பிரச்சினை | வேட்டை |
| ஓசை | புத்தகம் | தனயன் |
| ஔடதம் | பௌர்ணமி | தாயகம் |

## ஒலி வேறுபாடுகள்

### ரகர, றகர வேறுபாடுகள்

1. கரி - கரி பாரம் துக்கியது.
   கறி - அம்மா மீன் கறியுடன் உணவூட்டினாள்.

2. மரி - கிறிஸ்துநாதர் பாவிகளுக்காக மரித்தார்.
   மறி - செல்வந்தனைத் திருடர்கள் வழி மறித்தனர்.

3. குரை - நாய் குரைத்ததைக் கேட்டதும் திருடன் ஓடினான்.
   குறை - மற்றவர்களது குற்றம் குறைகளை நாம் மன்னித்தல் வேண்டும்.

4. அரை - அம்மா மிளகாய் அரைத்தாள்.
   அறை - எனது படுக்கை அறை என்றும் சுத்தமாக இருக்கும்.

### லகர, ளகர வேறுபாடுகள்.

1. வளி - வாகனக் கழிவுகளால் வளி மாசடைகிறது.
   வலி - அந்தக் காயம் ஏற்படுத்திய வலியால் அவள் மிகவும் துடித்தாள்.

2. விலா - விலா எலும்பு முறிந்து விட்டது.
   விளா - விளாம்பழம் சுவையாக இருக்கும்.

3. விலை - விலைவாசி உயர்வினால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்.
   விளை - வரட்சி காரணமாக நெல் விளைச்சல் பாதிக்கப்பட்டது.

4. இலை - இலை குழைகளால் வேயப்பட்டது எனது குடிசை.
   இளை - நோய் காரணமாக அவன் இளைத்திருந்தான்.

5. கிலி - யானை கிராமத்தினுள் புகுந்ததால் மக்கள் கிலி கொண்டு ஓடினர்.
   கிளி - கிளி பழம் உண்டது.

### ழகர, ளகர வேறுபாடுகள்

1. அழி - கலகக்காரர்கள் எனது வீட்டை அழித்து விட்டனர்
   அளி - பாரி முல்லைக்கு தனது தேரை அளித்தான்.

2. ஒழி - சண்டையின் போது தீயவன் ஒழிந்தான்
   ஒளி - சூரிய ஒளி மனிதனுக்கு இன்றியமையாததாகும்.

3. வழி - ஜனாதிபதி வரும் வழி எங்கும் அலங்கரிக்கப்பட்டிருந்தது
   வளி - வளி இன்றி மனிதனால் வாழ முடியாது.

4. கழி - ஐந்தில் இருந்து மூன்றைக் கழித்தால் இரண்டு மீதமாக வரும்.
களி - மக்கள் தேர்த் திருவிழாவைக் கண்டு களித்தனர்.

5. விழி - மயக்கமுற்று விழுந்தவன் மெல்ல தன் விழிகளைத் திறந்தான்
விளி - மகளே! என தந்தை விளித்தார்.

## ணகர, னகர வேறுபாடுகள்.

1. ஆணி - எனது காலில் ஆணி குத்திவிட்டது.
ஆனி - எனது பிறந்த நாள் ஆனி மாத்தில் வரும்.

2. கணம் - நீதிபதி நீதிமன்றத்துள் நுழைந்ததும் ஒரு கணம் அமைதி நிலவியது
கனம் - பெரியோரை நாம் கனம் பண்ண வேண்டும்.

3. பணி - நாம் நமது பணிகளை செவ்வனே செய்தல் வேண்டும்.
பனி - பனிக்காலம் ஆரம்பமாகி விட்டது.

4. வாணம் - தீபாவளிக்கு சிறுவர்கள் வாணம் விட்டு மகிழ்ந்தனர்.
வானம் - வானம் இன்று மப்பும் மந்தாரமுமாக இருக்கிறது.

5. மணம் - மல்லிகையின் மணம் மனதை கொள்ளை கொண்டது.
மனம் - இன்று எனது மனம் மகிழ்ச்சியில் துள்ளுகிறது.

பயிற்சி

1. பின்வருவனவற்றை வைத்து வசனம் எழுதுக.

1. பணம் ..............................
பனம் ..............................

2. அறம் ..............................
அரம் ..............................

3. கலை ..............................
களை ..............................

4. ஒலி ..............................
ஒளி ..............................

5. நிரை ..............................
நிறை ..............................

6. வலை ..............................
வளை ..............................

7. ஊண் ..............................................................................................................................
ஊன் ..............................................................................................................................

8. ஆழி ..............................................................................................................................
ஆளி ..............................................................................................................................

9. அரி ..............................................................................................................................
அறி ..............................................................................................................................

10. பரி ..............................................................................................................................
பறி ..............................................................................................................................

2. அடைப்புக்குறிக்குள் உள்ளவற்றில் மிகவும் பொருத்தமான சொல்லை தெரிவு செய்து வெற்றிடத்தை நிரப்புக.

1. மாணவர்கள் ஆசிரியர்களை ................................................. பண்ண வேண்டும். (கணம், கனம்)

2. அரிசியின் ............................. அதிகரித்ததால் மக்கள் கஷ்டப்பட்டனர். (விளை, விலை)

3. கர்ணன் இரக்க ............................................... படைத்தவன் (மணம், மனம்)

4. வேடனின் ............................................... யில் மான் சிக்கிக் கொண்டது. (வலை, வளை)

5. மக்கள் மன்னனை பல்லாண்டு ........................................ என வாழ்த்தினர். (வாழி, வாளி)

6. பெண்கள் ............................................... மிக்கவர்களாக வாழவேண்டும். (நாணம், நானம்)

7. தேவி ஓர் உயர் ............................................... ப் பிரிவாகும். (திணை, தினை)

8. சித்திரை வருஷப்பிறப்பிற்கு அம்மா ............................................ சுட்டாள். (முறுக்கு, முருக்கு)

9. வீடு தீப்பற்றியதால் கமலா ............................. காயங்களுக்கு உள்ளானாள், (எரி, எறி)

10. ............................................................ செய்ய விரும்பு, (அறம், அரம்)

3. பொருத்தமான சொல்லின் கீழ் கீறிடுக

1. எனது அம்மா அதி ............................................ (காளை, காலை) யில் விழித்தெழுவாள்

2. மணப்பெண்ணான எனது அக்கா மிகுந்த ............................................ (அளகு, அலகு, அழகு) டன் காணப்பட்டாள்.

3. வானொலி ..........................(ஒளி, ஒலி, ஒழி) பரப்பிய நாடகம் மனதைத் தொட்டது.

4. எனது ஆருயிர்த் ...................................... (தோளன், தோழன், தோலன்) மரணமடைந்தது என்னை மிகவும் பாதித்தது.

5. நளனின் ................................................... (கலி, களி, கழி) நீங்கியதும் தமயந்தியுடன் சேர்ந்தான்.

6. நோய் பரவுவதற்கு ............................................. (குழவி, குளவி, குலவி) யும் ஒரு காரணமாகும்.

7. கால் .................................................. யின் (வளி, வலி, வழி) காரணமாக நான் மிகவும் துன்பப்பட்டேன்.

8. எண்சாண் உடம்புக்கு ................................................... யே (தளை, தலை, தழை) பிரதானம்.

9. குழந்தை ......................................................... யில் (மூலை, மூளை, மூழை) இருந்து அழுதது.

10. சிறுவர்கள் கடல் .................................................. களில் (அளை, அலை, அழை) விளையாடினர்.

4. பின்வரும் சொற்களில் சரியாக எழுதப்பட்ட சொல்லை தெரிவு செய்து கோடிடுக

1. அரமணை, அரண்மனை, அரம்மனை
2. அந்தப்புரம், அந்தபுரம், அந்தப்புறம்
3. ஆபரணம், ஆபறணம், ஆபரனம்
4. ஆடையலங்காரம், ஆடயலங்காரம், ஆடையளங்காரம்
5. கர்சித்தல், கருசித்தல், கர்ச்சித்தல்

| |
|---|
| லகர, ளகர, ழகர சொற்கள் சிலவற்றை அவதானியுங்கள். உணர்ச்சி மெய்ப்பாடு தோன்ற ஒலித்து வாசியுங்கள். |

அலை - கடலில் அலை மேலே எழுந்து வந்தது.
அளை - நண்டு கடற்கரையிலுள்ள அளையுள் புகுந்தது.
அழை - ஆசிரியர் மாணவனை அழைத்தார்.

இலை - மரத்தில் இலைகள் இருக்கின்றன.
இளை - மாதவி ஓடிஓடி இளைத்து விட்டாள்
இழை - அம்மா பொன் இழை (நகை) அணிந்தாள்.

வாலை - நாய் வாலை ஆட்டியது.

வாளை - கண்ணன் வாளை ஓங்கினான்.

வாழை - வாழை குலை போட்டது.

தலை - தலையில் தொப்பி அணிந்தேன்.

தளை - கள்வனுக்கு கையில் தளை (விலங்கு) போட்டனர்.

தழை - ஆடு (இலை) தழை உண்ணும்.

ஒலி - இடிமுழக்கம் கடுமையாக ஒலித்தது.

ஒளி - சிறுவர்கள் ஒளிவிளக்கு ஏற்றி விளையாடினர்.

ஒழி - சிறுவர்கள் ஒழித்து விளையாடினர்.

கிலி - கமலா இருட்டைக் கண்டு கிலி கொண்டு நின்றாள்.

கிளி - கிளி பச்சை நிறமான பறவை.

கிழி - கண்ணன் துணியைக் கிழித்தான்.

**ரகர, றகர, சொற்கள் சிலவற்றை அவதானியுங்கள்**

பரி - வெள்ளைப்பரி (குதிரை) வேகமாக ஓடியது.

பறி - மேகலா பூ பறித்தாள்.

அரி - அரி (சிங்கம்) காட்டில் வாழும்.

அறி - அறிவை வளர்ப்பது நமது கடமையாகும்.

அரை - அரைக்கிலோ சீனி வாங்கினேன்.

அறை - எங்கள் வீட்டில் இரண்டு அறைகள் உண்டு.

மரை - மரை காட்டில் வாழும் மிருகம்.

மறை - கோவிலில் ஐயர் மறை (வேதம்) ஓதினார்.

நிரை - மாணவர்கள் நிரை (வரிசை) யாக நின்றனர்.

நிறை - எனது நிறை (பாரம்) 20 கிலோ ஆகும்.

குரை - நாய் குரைக்கும்.

குறை - ஆசிரியர் மாணவனைக் குறை கூறினார்.

**பின்வரும் னகர, ணகர சொற்களை வைத்து வசனம் எழுதும் முறைகளைப் பாருங்கள்.**

ஆனை - ஆனை காட்டில் வாழும் மிருகம்.

ஆணை - அரசன் சேவகனுக்கு ஆணை (கட்டளை) இட்டான்.

வானம் - வானம் நீல நிறமானது.
வர்ணம் - பிள்ளைகள் வாணம் விட்டு விளையாடினர்.

கனி - மாங்கனி (பழம்) மிக இனிமையானது.
கணி - நான் கணிதப் பாடம் கற்றேன்.

4. எழுத்து

## எழுத்துப் பொறிமுறையை அனுசரித்து எழுதுதல்

### 4.1 அளவு, அமைப்பு, திசைமுகம்

எழுத்து என்பது எழுதப்பட்டது, அல்லது சித்திரமாக வரையப்பட்டது என்று பொருள்படும். தமிழ் எழுத்துக்களை உயிரெழுத்துக்கள், மெய் எழுத்துக்கள், உயிர்மெய் எழுத்துக்கள், ஆய்தவெழுத்து என நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்.

உயிரெழுத்துக்கள் - அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்ற பன்னிரண்டு எழுத்துக்களாகும்.

மெய்யெழுத்துக்கள் - க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்ற பதினெட்டு எழுத்துக்களாகும்.

உயிர்மெய்யெழுத்துக்கள் - க, கா, கி, கீ முதலிய 216 ஆகும்.
ஆய்த எழுத்து - ∴ என்ற ஒன்றாகும்.

இவ்வெழுத்துக்களை நாம் சரியான அளவில் ஒழுங்காக எழுதப் பழக வேண்டும். எழுத்துக்களின் அமைப்பு ஒழுங்காக இருக்க வேண்டும். எழுத்து எழுதப்படும் திசையும் ஒரே மாதிரியாகவே இருக்க வேண்டும். இவற்றை மாணவர்கள் சிறுவயதிலிருந்தே எழுத்துப் பயிற்சிகள் மூலம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக :- ‘அ’ என்ற எழுத்தை ‘அ’ என்று எழுதக் கூடாது. ஒரே அளவினதாக அமையுமாறு அ என்ற எழுத வேண்டும்.
அ, ஆ, இ, என்றவாறு ஒரே சீராக எழுத்துக்களை எழுத வேண்டும்.
எழுத்துக்களின் திசைமுகம் மேற்கிலிருந்து கிழக்காக அமையுமாறு எழுத வேண்டும்.

உதாரணமாக :- அ, ஆ, இ, என்பதை இ, அ, ஆஎன்று எழுதுதல் கூடாது.
அளவு, அமைப்பு, திசைமுகம் போன்றவற்றை அனுசரித்து எழுத வேண்டும்

## 4.2 உறுப்பு, அழகு

எழுத்துக்களை அதன் உறுப்புக்கள் அழியாத முறையில் அழகாக எழுதப் பழக வேண்டும்.

உதாரணமாக "அ" என்றதை 'அ' என்று அரையும் குறையுமாக எழுதக்கூடாது. "உ" என்றதை 'உ' என எழுதக்கூடாது. மாணவர்களே, பின்வரும் கோடுகளில் அடங்கக் கூடியவாறு எழுத்துக்களை உறுப்பமைய எழுதுங்கள்.

1. நாங்கள் பாடம் படிப்போம்

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

2. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

3. ஔவையார் ஒரு சிறந்த புலவர்

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

## 4.3 தெளிவு, புனிதம்

மாணவர்கள் எழுதும் போது தெளிவாகவும் புனிதமாகவும் எழுத வேண்டும். அன்புள்ள என்ற சொல்லை அன்பு என எழுதினால் பலர் விளங்கிக் கொள்ள மாட்டார்கள்.

அதேபோல எழுத்துக்கு மேல் எழுத்தாக அதாவது எழுத்தின் மீது இரண்டு, மூன்று முறை திரும்பத் திரும்ப எழுதி அசுத்தப் படுத்தக்கூடாது. எழுத்துக்களை ஒரே தடவையில் அளவாக அமைப்பாக, உறுப்பாக, அழகாக, தெளிவாக, புனிதமாக எழுத வேண்டும். இதற்காக பின்வரும் பயிற்சிகள் சிலவற்றை செய்யுங்கள்.

அ

க

அம்மா

இப்படிக்கு

ஔவையார்

உண்மை

ஐந்து

எண்பது

ஏற்றம்

கோழி

## 4.4 எழுத்து, சொல், வாக்கியம், பந்தி என்பவற்றுக்கு சீரான இடைவெளி விட்டு எழுதுதல்

நாம் ஏதாவது ஒருவிடயத்தை எழுதும் போது ஒவ்வொரு எழுத்திற்குமிடையே ஒரே சீரான இடைவெளி விட்டு எழுத வேண்டும். இவ்வாறு எழுத்துகளுக்கிடையே இடைவெளி விட்டு எழுதுவதால் நாம் எழுதும் விடயத்தைப் படிப்பவர்கள் விரைவில் உணர்ந்து கொள்ளக்கூடியதாயிருக்கும். இவ்வாறே ஒவ்வொரு சொல்லுக்கும், வாக்கியத்திற்கும், பந்திக்குமிடையே சீரான இடைவெளி விடுதல் அவசியமாகும்.

கீழ்க்காணும் வசனங்களை உறுப்பாக கோட்டில் எழுதவும்.

1. கர்ணன் துரியோதனனின் உற்ற நண்பனாக இருந்தான்

..............................................................................................................

..............................................................................................................

2. அயல் வீட்டாருடன் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

..............................................................................................................

..............................................................................................................

3. பாடசாலையில் மாணவர்கள் பாடம் படிக்கிறார்கள்

..............................................................................................................

..............................................................................................................

4. அம்மா பனை ஓலையால் பெட்டி இழைத்தாள்

..............................................................................................................

..............................................................................................................

5. நாங்கள் கடற்கரைக்குப் போனோம்

.................................................................................................................................

.................................................................................................................................

2. பின்வருவனவற்றை சீரான இடைவெளி விட்டு எழுதுக.

1. ஔவையார் பாடல்கள் பல பாடினார்.

.................................................................................................................................

2. சித்தார்த்தர் உயிர்களிடத்தில் மிக அன்புள்ளவர்.

.................................................................................................................................

3. கந்தளாயில் சீனித் தொழிற்சாலை உண்டு.

.................................................................................................................................

4. நாங்கள் நேரத்துடன் பாடசாலைக்குச் செல்ல வேண்டும்.

.................................................................................................................................

5. நாங்கள் கோவிலுக்குச் சென்றோம்

.................................................................................................................................

## 5. கேட்டல்

### பண்புடனும் பணிவுடனும் செவிமடுத்தல்.

பாடசாலையில் அதிபர், ஆசிரியர்கள் ஆகியோர் காலைக் கூட்டத்தில் உரையாற்றுவதை அவதானத்தோடும், பணிவுடனும் செவிமடுத்தல் வேண்டும் என்பதை மாணவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். பிள்ளைகளே! பாடசாலையில் பரிசளிப்பு விழாக்கள், விளையாட்டு போட்டிகள் என்பவற்றின் போது ஆற்றப்படும் உரைகளையும், கோவில்களில் சமயத் தலைவர்கள், சான்றோர்கள் ஆகியோர் பேசுவதையும் பண்புடனும். பணிவுடனும் செவிமடுத்து திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

மாணவர் மன்ற நிகழ்ச்சிகளில் தலைவர் உரை, கூட்ட அறிக்கை, சொற்பொழிவுகள், உரையாடல்கள், கதை, நாடகம், விவாதங்கள், பரிசளிப்பு விழாக்களில் அதிபரின் உரை, பிரதம விருந்தினரின் சிறப்புரை, கலை நிகழ்ச்சிகள், தேசிய கீதம், பாடசாலைக் கீதம், விளையாட்டுக்கள் பற்றிய அறிவிப்புக்கள் என்பனவற்றை அவதானித்து செவிமடுத்து பின் வகுப்பறையில் அவை பற்றிக் கலந்துரையாடல் வேண்டும். இவை யாவற்றையும் வகுப்பறையில் மீட்டல் செய்வதற்கு ஆசிரியர் உதவ வேண்டும்.

பயிற்சி

1. முதல் நாள் மாலை 6.30 மணிக்கு ரூபவாஹினியில் வாசிக்கப்பட்ட செய்தி அறிக்கையை எழுதுமாறு உங்கள் ஆசிரியர் உங்களைக் கேட்டுள்ளார். உங்களை ஒரு செய்தி வாசிப்பாளராக கருதிக் கொண்ட அதனை எழுதுக.?

2. வானொலி அல்லது தொலைக்காட்சியில் கேட்ட, உங்களுக்கு விருப்பமான விளம்பரம் ஒன்றை எழுதுக?

3. நீர் பார்த்து பரவசம் அடைந்த கிரிக்கட் போட்டியின் முக்கிய காட்சியை விபரிக்க.

4. அதிகாலையில் வானொலிச் செய்தியை நீங்கள் செவிமடுத்துக் கொண்டு இருந்தபோது ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களின் பரீட்சை முடிவுகள் வெளிவந்து விட்டதாகவும். அநேக மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர் எனவும் அறிந்து கொண்டீர்கள். இச்செய்தியை செவிமடுத்த நீங்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தாருங்கள்.

1. இச்செய்தி மாணவராகிய உங்களை மிகவும் ஊன்றிக் கவனிக்க செய்தது. அதற்காக காரணம் யாது?

..........................................................................................

2. இச்செய்தி உங்களுக்கு மிகவும் துணிச்சலை தந்துள்ளது. இதற்கான காரணம் யாது?

..........................................................................................

3. நீங்கள் எந்த வருடத்தில் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ளீர்கள்?

..........................................................................................

4. இச்செய்தி ஒலிபரப்பப்பட்ட நேரம் யாது?

..........................................................................................

5. இச்செய்தியை மிகவும் உன்னிப்பாக அவதானித்த நீங்கள் இதைப் பற்றி பாடசாலையில் ஆசிரியருக்கு எவ்வாறு கூறினீர்கள்?

..........................................................................................

..........................................................................................

## 6.பேசுதல்

> கருத்துக்கள், உணர்ச்சிகள், செய்திகள் முதலியவற்றை விளக்கமாக, தெளிவாக, ஒழுங்கு முறையாக, திட்டவட்டமாக வெளிப்படுத்துந் திறனை விருத்தி செய்தல்.

### 6.1 மற்றையவர்களுடன் பேசுதல்.

மற்றையவர்களுடன் பேசும் போது, அவர்களிடத்தில் எம்மைப் பற்றிய நல்லெண்ணம் உருவாகுமாறு பண்புடன் பேச வேண்டும்.

உதாரணமாக:-

"கோபால் தயவு செய்து உம்முடைய சிவப்புநிறப் பென்சிலை தந்துதவ முடியுமா?"

### 6.2 உரையாடுதல்

மற்றவர்கள் பேசும் போது எவ்வாறு பண்புடன் செவிமடுக்க வேண்டுமெனக் கற்றோம். இனி உரையாடுதலைப் பற்றிப் பார்ப்போம்.

## உணவைப் பேணல் எனும் பாடத்தில் வரும் உரையாடல் ஒன்று

சந்திரன் :- ஏன் அக்கா இவ்வளவு பழங்கள்? நாலைந்து நாட்களில் அழுகிப் போய் விடுமே!

தமக்கை :- எங்களுக்கு அவற்றை அழுகாமல் பாதுகாக்கும் முறை தெரியும். ஒவ்வொரு பழத்தையும் நான்காக வெட்டி உப்புத் தடவுவோம். பின்னர் வெயிலில் நன்றாகக் காய விட்டு வற்றல் ஆக்குவோம். அதன் பின் அவை பழுதுபடாது.

தாய் :- தேவையான பொழுது அந்த வற்றலை எடுத்து எலுமிச்சம் புளி சேர்ப்போம். அதனுள் மஞ்சள், வெந்தயம், செத்தல் மிளகாய் ஆகியவற்றின் தூளை இட்டுச் சில நாட்களுக்கு ஊற வைப்போம். ஊறுவதற்குப் புளி போதாவிட்டால் மீண்டும் புளி சேர்ப்போம்.

சந்திரன் :- ஓ! அது தானே ஊறுகாய்? நினைக்கவே வாய் ஊறுகிறது. அது சரி! வெட்டிய பழத்திற்கு ஏன் உப்புத் தடவ வேண்டும்?

தந்தை :- உப்புச் சில பொருட்களைப் பழுதடையாமல் பாதுகாக்கும். எனவே உப்பிட்டு வெயிலிற் காய வைத்தால் அப்பொருள்கள் பழுதுபடா.

### உதாரணம்

கருத்து "நல்லதை நினைத்து நல்லதைப் பேசி, நல்லதைச் செய்தால் நன்மை கிடைக்கும்!

உணர்ச்சி "ஆகா! எத்தனை அழகு இந்த வெண்ணிலா"

செய்தி "மிருகக் காட்சிசாலையில் கங்காரு ஒன்று குட்டி ஈன்றிருக்கிறது.

## 6.3 மன்றங்களில் குறித்த பொருள் பற்றிப் பேசுதல்.

நான் வாழை மரத்தைப் பற்றி சிறிது பேச விரும்புகிறேன். பல வகையான வாழை மரங்கள் இருக்கின்றன. அவையாவன கப்பல், மொந்தன், இதரை, கதலி, செவ்வாழை, ஆனை வாழை என்பனவாகும். வாழை மரத்திற்கு நீரும் பசளையும் இட்டால் அது செழித்து வளர்ந்து நல்ல பலனைத் தரும். வாழை மரத்திலிருந்து இலை, பூ காய், கனி, மடல் போன்ற பலவிதமான பயன்களை நாம் அடைகிறோம், வாழை மரம் குலை ஈன்ற பின் பயனற்றுப் போய் விடுவதாகக் கருதி அதை வெட்டி அழித்து விடுகிறார்கள்.
(இந்த உரையை தொடர்ந்து ஆற்றுவதற்கு மாணவர்கள் முயற்சி செய்க.)

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

## 6.3 பாத்திரமேற்றும், நாடகங்களில் நடித்தும் பேசுதல்

பரதன், குகன், நளன், சீதை, தமயந்தி, திரௌபதி முதலிய கதாபாத்திரங்களை உதாரணங்களாகக் கொள்ளலாம்.

குகன்: **"என் பெயர் குகன்"**

"நான் தோணியோட்டுபவன். நேற்று இந்தக் கங்கைக் கரைக்குத் தசரதனால் காட்டுக்குத் துரத்தப்பட்ட ஸ்ரீ ராமபெருமான் அவர்கள் வந்தார்கள். அவர்களைத் தோணியேற்றி கங்கைக்கரைக்கு அப்பால் கொண்டு சென்று விட்டேன். மனம் நெகிழ்ந்த ஸ்ரீ ராமபிரான் "குக, நீயும் என் சகோதரன். நாங்கள் நால்வர், உன்னோடு இன்று ஐவரானோம்'' என்று இழிந்தவனாயிருந்த என்னையும் தன் சகோதரனாக ஏற்றுக்கொண்டார்கள். அதை என்னால் மறக்க முடியுமா? அதோ! பரதன் ஸ்ரீ ராமபிரானைக் கொல்லப் படை கொண்டு வருகிறான். என் உயிர் உள்ளவரை அவன் இக்கங்கைக் கரையைக் கடந்து போக முடியுமா, என்பதைப் பார்க்கிறேன்!

'குகன்' பேசியது போல மாணவர்கள் பேசி நடித்துக் காட்ட வேண்டும். இதேபோல் ஏனைய பல கதாபாத்திரங்களைப் போலவும் நடித்துக் காட்ட வேண்டும்.

## 6.5 தர்க்கித்தும், விமர்சித்தும் பேசுதல்.

ஏதாவது ஒரு விடயத்தை ஆதரித்து, அல்லது எதிர்த்து தக்க சான்றுகளுடன் தர்க்கித்து பேசப் பழகுதல் வேண்டும். அந்த விடயத்தின் குறைவு நிறைவுகளைச் சுட்டிக்காட்டி விமர்சித்துப் பேசுவதற்கும் ஆசிரியரின் உதவியுடன் மாணவர்கள் பயிற்சி பெற வேண்டும்.

## 66 செய்திகளை பரிமாறிப் பேசுதல்

வகுப்பறைக்கு வெளியே நீங்கள் அறிந்து கொள்ளும் விடயங்களில் உகந்தவற்றை மற்றையோருக்கும் அறிவித்தல் நல்லது. உங்கள் ஊரில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகளைப் பற்றிய விபரங்களை உங்கள் நண்பர்களுக்கும் கூறுங்கள். இந்தப் பழக்கம் வளர்ந்த பின்னர் உங்களது கடிதத் தொடர்புகளுக்கும் ஏனைய தொடர்புகளுக்கும் மிகவும் உதவும்.

## 6.7 தங்கள் அனுபவங்களை வெளிப்படுத்திப் பேசுதல்.

உதாரணமாக சாத்திரக்காரி ஒருத்தி தெருவில் கூவிக்கொண்டு செல்வது போல........

சாத்திரக்காரி: சாஸ்திரம்.........சாஸ்திரம்.........சாஸ்திரம் பார்க்கலையா! அம்மா வாங்க, ஐயா வாங்க! உங்களுக்கு நல்ல காலம் வரப் போகுது, ஐயாவுக்கு அதிஷ்டம் வரப் போகுது! கையைக் காட்டுங்க, ஐயா............கையைக் காட்டுங்க!

பயிற்சி

1. நீர் ஒரு புதிய இடத்திற்கு செல்லும் போது, அவ்விடத்துக்குச் செல்லும் பாதையைப் பற்றி ஒருவரிடம் எவ்வாறு கேட்பீர் என்பதைக் கீழ்காணும் கோட்டில் எழுதுக.

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

2. இரண்டு மாணவர்கள் தங்களை ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்யும் முறையினை உமது சொந்த நடையில் எழுதுக.

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

3. மாணவர்களுக்கு இளமையில் கல்வி அவசியம் என்பதைப் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுக.

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

# குறியீடுகளை அனுசரித்து வாசித்தல்

## 7.1, 7.2 முற்றுப்புள்ளி, முக்காற்புள்ளி, அரைப்புள்ளி, காற்புள்ளி என்பவற்றை அனுசரித்து வாசித்தல்.

பின்வரும் பந்தியை வாசியுங்கள். அதில் எவ்வெவ்விடங்களில் நிறுத்தக் குறி, முற்றுப் புள்ளி, முக்காற் புள்ளி, அரைப் புள்ளி, காற் புள்ளி, வினாக் குறி என்பவை இடப் பட்டிருக்கின்றன என்பதைக் கவனியுங்கள்.

ஒரு வியாபாரி குறைகளுள்ள புடைவைகளை பொய் சொல்லி விற்றுவிட்டு அப்பணத்தை புடைவையை கொடுத்த பெரியாரிடம் கொடுத்தான். உடனே அப்பெரியார் "புடைவையிலுள்ள குறைபாட்டை வாங்கியவரிடம் காட்டினாயா" என்ற கேட்டார். அந்த வியாபாரி "அவ்வாறு செய்ய மறந்து விட்டேன்" என்று கவலையுடன் கூறினான். அதனைக் கேட்ட அப்பெரியார் "அப்படியானால் அப்புடைவைகளை விற்ற பணத்தை நான் பயன் படுத்த முடியாது. அதனை இறைவன் விலக்கியுள்ளான். அப்புடைவையை வாங்கியவர் யார்? அவரைக் கண்டு பிடிக்க முடியுமா?" என்று கேட்டார். அதற்கு அவ்வியாபாரி "அப்புடவையை வாங்கியவரை எனக்குத் தெரியாது" என்று விடை கூறினான். அப்பொழுது அந்தப் பெரியார் "அப்படியானால் அந்தப் புடைவைகள் விற்ற பணம் முழுவதையுமே தானஞ் செய்துவிடு; அவ்வாறு செய்தால் குறைபாடுடைய அந்தப் புடைவையை வாங்கியவரின் பணத்தால் செய்யுந் தானத்தின் பயன் அவருக்கே கிடைக்கும்" என்று கூறி, அந்த வியாபாரியிடம் அப்பணம் முழுவதையும் திருப்பிக் கொடுத்தார்.

இப்பந்தியைப் போன்ற பல பந்திகளை வாசித்து அவற்றின் குறியீடுகளைக் கவனத்தில் எடுங்கள். சத்தமாக பொருட் தெளிவு பெற வாசியுங்கள்.

## 7.3 குறியீடுகளை அனுசரிப்பதன் மூலம் பொருட் தெளிவு பெற வாசித்தல்

பின்வருவனவற்றை வாசிக்கவும்

1. என்ன சொல்லுகிறீர்? ஈயரே, நீர் குற்றவாளியா? சுத்தவாளியா?
2. நீரோ முதலாம் சாட்சி? உமது பெயர் என்ன?
3. என்ன குற்றம் செய்தார்கள், இவர்கள்? தெளிவாகச் சொல்லும், பொலிசாரே!
4. "ஓ, மகாராசாவே, என் மனைவி இறந்து விட்டாள்!"

5. பின் அரசன் அரசியிடம் சென்றான். அரசனைக் கண்ட அரசி, "கேட்டீர்களா செய்தியை? நாம் அபூநவாஸ் இறந்து விட்டானாம்" என்றாள்.

6. இது சிறு பிள்ளைகள் செய்யுந் தோட்டந்தானே, என்று நாங்கள் நினைத்து வந்தோம். அருமையான தோட்டமாக இருக்கிறதே! இவற்றை விளக்கமாகக் கூறியதற்கு நன்றி. நாங்கள் போய் வருகிறோம்" என்று கந்தப்பர் விடை பெற்றார்.

7. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

8. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.

9. எண்ணுமெழுத்துங் கண்ணெனத் தகும்.

10. ஓதலி னன்றே வேதியர்க் கொழுக்கம்

7) அம்மையே வருக, குந்தி தேவியாரே, வருக. என்ன, என்றுமில்லாதவாறு இன்று மகன் முறை கொண்டாடி வருகிறீர்கள்!

8) வடையைக் கண்ட சந்திரன், "அப்பா வடை வாங்கித் தாருங்கள்" என்றான்." இந்த வடை கூடாது; வீட்டிலே சுட்டுச் சாப்பிடுவோம்."

9) "ஏன் அப்பா இந்த வடை கூடாது? அதோ அந்தப் பையன் வாங்குகிறானே?

10) "கிருமிகள் என்றால் என்ன அப்பா? பூச்சியா, புழுவா?"

## பயிற்சி

பொருத்தமான இடத்தில் பொருத்தமான குறிகளை வைத்து நிரப்புங்கள்.

1. நாதனுக்கு ஆச்சரியமாயிருந்தது என்ன இசைத்தட்டையா இல்லை வேண்டாம்.

.................................................................................................

2. மறுக்காதே நீ அதை எடுத்துக் கொள்ளத்தான் வேண்டும்

.................................................................................................

3. அப்படியானால் நன்றி இசைத்தட்டை நான் எடுக்கிறேன்

.................................................................................................

4. நாதன் நீ இதைச் செய்தாயா நம்ப முடியவில்லையே

.................................................................................................

5. ஓம் நானே செய்தேன் நண்பன் சிரித்தான்

.................................................................................................

6. மகனே கண்ணா குந்திதேவி கதறினாள்

................................................................................................................................

7. அம்மையே தாங்கள் என் தாயா உண்மை கூறுங்கள்

................................................................................................................................

8. மகனே வேடிக்கையா செய்கிறாய் நான் உன் தாய்தான் என்னை மூடியிருந்த மாயத்திரை இன்று அகன்றது நான் உன்னை அறிந்தேன் கண்ணா நான் உன் தாய்.

................................................................................................................................

................................................................................................................................

................................................................................................................................

9. கண்ணை இமை காப்பது போல வாய்மை உண்மையை நாம் காப்பது கடமை.

................................................................................................................................

10. யார் நீர் பழக்க வழக்கம் தெரியாதவர் நீதி மன்றத்தை அவமதிக்கிறீர்

................................................................................................................................

11. சரி இனி வைத்தியர் வரட்டும் சரவணன் இறந்தது எதனால்

................................................................................................................................

12. நான் பார்த்தேன் பிரபு நேரிலே பார்த்தேன் இப்பொழுது என்ன சொல்லுகிறீர் ஈயாரே

................................................................................................................................

**8. எழுத்து**

## உயிர்க்குறிகளைச் சரியாக இட்டு எழுதுதல்

### 8.1 சீரான உயிர்க் குறிகள்

கா, கி, கீ, கெ, கே, கை, கொ, கோ, கௌ

சில எழுத்துக்களுடன் சில உயிர்க் குறிகளை சேர்ப்பதால் வேறு சில எழுத்துக்கள் பெறப்படுகின்றன.

ா, ே, ெ, ை, ள, ி, ீ ஆகியன உயிர்க்குறிகளாகும்.

உதாரணமாக ‘க’ என்ற எழுத்தோடு ‘ா’ (அரவைச்) சேர்ப்பதன் மூலம் ‘கா’ என்ற எழுத்தைப் பெறுகிறோம்.

## 8.2 வேறுபடும் உயிர்க்குறிகள்

'கா' என்ற எழுத்தை க-ா- என்று பிரிக்க முடியும். ஆனால் சில எழுத்துக்களோடு உயிர்க்குறிகளை பிரிக்க முடியாது. உதாரணமாக

கு, கூ, சு, சூ, டு, டூ, து, தூ, டி, டீ

## 8.3 உயிர்க்குறிகளுக்கும் குறில், நெடில் ஓசைக்களுக்குமான தொடர்புகளை இனங்காணல்

அ, இ, உ, எ, ஒ எனும் உயிரெழுத்துக்கள் ஐந்தும் குற்றெழுத்துக்களாகும். இவற்றை குறில் எனவும் கூறலாம். குற்றெழுத்துக்களுக்கு மாத்திரை ஒன்றாகும்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எனும் ஏழு உயிரெழுத்துக்களும் நெட்டெழுத்துக்களாகும். இதனை நெடில் எனவும் கூறலாம். நெட்டெழுத்துக்கு மாத்திரை இரண்டாகும். மாத்திரை என்பது கண்இமைப்பொழுது அல்லது கைநொடிப்பொழுது ஆகும்.

உயிர்க்குறிகளுக்கும், குறில் நெடில் ஓசைகளுக்குமான தொடர்புகளை இனங்காணல்

| **குறில்** | **நெடில்** |
|---|---|
| அடி | ஆடி |
| இடி | ஈட்டி |
| உறி | ஊசி |
| எறி | ஏறி |
| ஒடி | ஓடி |

பயிற்சி

உச்சரித்து வாசியுங்கள்.

1. கண்ணன் பந்தை அடித்தான்
   மாலதி நடனம் ஆடினாள்.

2. இன்று படீர் என இடி முழங்கியது.
   வேடன் ஈட்டியால் எறிந்தான்.

3. உறியில் பானை தொங்குகிறது.
   ஊரி கடற்கரையில் காணப்படும்.

4. அஸ்மின் பந்தை எறிந்தான்.
   அமீன் படிகளில் ஏறினான்

5. ராஜி ஒடியல் கூழ் குடித்தாள்.
   ஷஜா வேகமாக ஓடினான்.

## 9. கேட்டல்

### கிரகித்தலுக்காகச் செவிமடுத்தல்

**9.1 பல்வேறு வகையான மொழிவடிவங்களை செவிமடுத்தலும், கிரகித்தலும் - உரையாடல், நாடகம், விளம்பரம், அறிவித்தல், கதைகள், பாடல்கள், விடுகதைகள், புதிர்கள், பழமொழிகள் ஆகியவற்றைச் செவிமடுத்தல்.**

பல்வேறு வகையான மொழிவடிவங்களைச் செவிமடுத்து கிரகிக்கும் திறனை வளர்ப்பதற்கு மாணவர்கள் தாம் கேட்ட, வாசித்த, பார்த்த நிகழ்ச்சிகளில் ஒன்றை வகுப்பறையில் கூற மற்றவர்கள் அதனைக் கேட்டு அதனால் ஏற்படும் அனுபவத்தைப் பெற வழிகாட்ட வேண்டும்.

திரைப்படம், தொலைக்காட்சி, வானொலி, புதினப் பத்திரிகை, சிறுவர் கதைநூல்கள், நாடகங்கள், சமயப் பண்பாட்டு நிகழ்ச்சிகள் போன்றவற்றில் எல்லா மாணவர்களும் தமக்கேற்பட்ட அனுபவத்தை கூற ஏனையோர் செவிமடுத்துக் கிரகித்தல் வேண்டும்.

பிள்ளைகளே, விளையாட்டு முறையில் கேட்டலைச் சுவையான நிகழ்ச்சியாக மாற்றலாம். இதற்கு ஆசிரியரின் ஒத்துழைப்பு அவசியம்.

ஆசிரியர் ஆண்டு 4ல் படிக்கும் மாணவரை வட்டமாக இருத்தி தான் நடுவில் நின்று கொண்டு குறிப்பிட்ட மாணவன் ஒருவனை அழைத்து ஒரு செய்தியை இரகசியமாக அவன் காதில் கூறி அதனை பக்கத்திலுள்ள மாணவனுக்கு சொல்லச் சொன்னார். இவ்வாறு அச்செய்தி வகுப்பிலுள்ள மாணவர்கள் ஒவ்வொருவர் காதிலும் இரகசியமாகக் கூறப்பட்டு பரப்பப்பட, இறுதியாக செய்தியைக் கேட்ட மாணவன் அச்செய்தியை ஆசிரியரிடம் கூறினான். ஆனால் அச்செய்தி திரிபடைந்திருந்தது. காரணம் ஒவ்வொருவரும் தங்களுக்கேற்ற முறையில் அச்செய்தியை கூறியதே ஆகும். செய்தி திரிபடையாதிருப்பதற்காக செய்திகளை அவதானித்துக் கேட்க வேண்டுமென ஆசிரியர் மாணவர்களுக்கு அறிவுறுத்தினார்.

மாணவர்களாகிய நாம் நாளாந்தம் பல வகையான செய்திகள், கட்டுரைகள், கடிதங்கள், வானொலி நிகழ்ச்சிகள் ஆகியவற்றை செவிமடுக்கின்றோம். இச்செய்திகளை கிரகித்து மற்றொருவருக்கு கூறுகிறோம். சில விளம்பரங்களை தொடர்ந்து வானொலி, தொலைக்காட்சி என்பவற்றின் மூலம் கேட்பதனால் அவை எமக்கு மனப்பாடமாகி கிரகிக்க இலகுவாக இருக்கும்.

இந்த வகையில் கோபால் பல்பொடி, சிக்னல், அங்கர் பால்மா, சுவர்ணமஹால், பனடோல், அஸ்ரா மாஜரின் போன்ற பல பொருட்களின் விளம்பரங்கள் எமக்கு மானப்பாடமாக உள்ளன. இதற்கு காரணம் எமது கிரகிப்புத் தன்மையே.

பின்வரும் மொழிவடிவங்களை, விடயங்களை வாசித்துக் கிரகித்து கொள்ளுங்கள.

கடிகாரம், கல்விமான், புதல்வி, ஆதரவு, ஆயுதம், வணிகர், வறுமை, புத்திமதி, வல்லவன், விறகுவெட்டி

1. கடிகாரத்தில் நேரம் பார்க்கலாம்.
2. கல்விமான்கள் ஒழுக்கத்தில் சிறந்தவர்களாய் இருப்பார்கள்.
3. தாய் தன் புதல்வியை அன்புடன் அணைத்தாள்.
4. ஏழைகளுக்கு நாம் ஆதரவு காட்ட வேண்டும்.
5. ஆயுதம் தாங்கிய வீரர்கள் போருக்குச் சென்றார்கள்.
6. வாணிபம் செய்பவர் வணிகர் எனப்படுவர்.
7. நம்நாட்டில் பலர் வறுமையால் வாடுகின்றனர்.
8. நாம் தாய் தந்தையரின் புத்திமதியைக் கேட்டு நடக்க வேண்டும்
9. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
10. விறகுவெட்டி கோடரியால் விறகு வெட்டுவான்.

## 9.2 செவிமடுத்தவற்றை சொந்த நடையில் எழுதுதல்

பின்வருவனவற்றை மௌனமாக வாசித்து அவற்றின் சாரம்சத்தை சொந்த நடையில் எழுதுக.

**அம்மா நான் விளையாடப்போறேன் - கையில்**
**அன்புடன் பட்சணம் தந்தனுப்பென்னை**
**சும்மா நான் உட்காரமாட்டேன் - நல்ல**
**தோழர் அழைக்கின்றார் நாழிகையாச்சு - அம்மா**

பூப்பறித்தாடுவோம் கொஞ்சம் - சுவாமி
பூசை செய்தாடுவோம் பூரதங்கட்டி
வேப்ப மரத்தடி மண்ணில் - சிறு
வீடுகள் கட்டி விருந்துகள் செய்வோம்

வட்டக் குளத்திற்குச் செல்வோம் - களி
மண்ணையுருட்டித் திரட்டி வருவோம்
சட்டிகள் பொம்மைகள் செய்வோம் - பின்பு
சாதஞ் சமைத்தொன்றாய் சாப்பிடலாம் - அம்மா

பாட்டுக் கச்சேரிகள் செய்வோம் - நான்
பாடுவேன் மத்தளம் போடுவான் கிட்டு
கேட்டுச் சபாஸ் எனச் சொல்வார் - நல்ல
கிண்கிணி கட்டி நடனங்கள் செய்வோம்

வேட்டிகளால் திரை கட்டி - பல
வேடங்கள் போட்டொரு நாடகமாடி
காட்டுவோம் பாரதக் காட்சி - நான்
கண்ணனின் சொற்படி காண்டீபனாவேன்.

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

## 9.3 கிரகித்தவற்றிற்கு விடையளித்தல்.

பின்வரும் பந்தியை வாசித்துக் கிரகித்து கீழேயுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

கந்தளாய்க் குளத்தை குளக்கோட்டன் என்ற அரசன் கட்டினான் என்று கூறுங்கதை ஒன்று உண்டு. ''குளக்கோட்ட மன்னன் கோணேசர் கோயிலைக் கட்டினான்; தம்பலகாமத்திலே கோயிலுக்கு வேண்டிய வயல் நிலங்களை வழங்கினான். அந்த

வயல்களுக்கு நீரைப் பாய்ச்சக் குளம் ஒன்று தேவைப்பட்டது. எனவே பூதங்களைக் கொண்டு கந்தளாய்க் குளத்தைக் கட்டுவித்தான்'' என்று அக்கதை கூறுகின்றது. ஆயினும் கி.பி.608 முதல் கி.பி. 618 வரை இலங்கையில் ஆட்சி செய்த இரண்டாம் அக்கபோதி மன்னனே இதனைக் கட்டுவித்தான் என்பது வரலாற்று ஆசிரியர் கூற்று.'' என்றான் கணேசன்.

1. குளக்கோட்ட மன்னன் கட்டிய கோவிலின் பெயர் என்ன?

.......................................................................................................................................

2. குளத்தை எதனைக் கொண்டு கட்டுவித்தான்?

.......................................................................................................................................

3. அக்கபோதி மன்னன் ஆட்சி செய்த ஆண்டு யாது?

.......................................................................................................................................

4. இக்கதைகளைக் கூறியவனின் பெயர் யாது?

.......................................................................................................................................

5. வரலாற்று ஆசிரியர் யார் குளத்தைக் கட்டியது எனக் கூறுகிறார்?

.......................................................................................................................................

## 9 . 4 கிரகித்தமைக்கேற்ப துலங்குதல்

பின்வரும் கதையைப் படித்து கிரகித்து வினாக்களுக்கு விடை தருக.

ஒரு நாள் ஒரு பூனை எலியைப் பிடித்தது. அந்த எலியை உடனே தின்னாமல் அதனுடன் சிறிது விளையாட விரும்பி எலியை முன்னங்காலால் பிடித்துக் கொண்டு சீறியது. விளையாட்டாகக் கடித்தது. எலி அஞ்சி நடுங்கியது. 'கீச், கீச்' எனக் கத்தியது. அது பூனையைப் பார்த்து "பூனையாரே, நீங்கள் பெரியவர், நான் சிறியவன்; தயவு செய்து என்னை விட்டு விடுங்கள்'' என்று கெஞ்சியது.

எலி பயந்து நடுங்குவதைப் பார்த்து பூனை சிரித்து. "எலிப்பிள்ளையே, அஞ்சாதே'' என்று சொல்லி எலியை விடுவித்து "நீ போகலாம்'' என்ற கூறியது. எலி தப்பித்தேன் பிழைத்தேன் என ஓடியது. சிறிது தூரம் ஓடிய எலியை மறுபடியும் பூனை பிடித்துக்கொண்டது. இவ்வாறு விடுவதும் பிடிப்பதுமாய் எலியோடு விளையாடியது. எலி வேதனையால் துடிதுடித்தது.

அப்போது ஒரு நாய் வந்தது. நாயைக் கண்ட பூனை எலியை விட்டுவிட்டு ஓடப் பார்த்தது. நாய் பூனையைப் பிடித்துக்கொண்டது. எலி ஓடி ஒளித்தது. நாய் பூனையைக் கடித்தது. அதனை உதறி எறிந்தது. பூனை தன்னை விட்டு விடுமாறு நாயிடம் கெஞ்சியது.

நாய் பூனையை விட்டு விட்டுப் பிடித்துப் பிடித்து காலால் மிதித்தது. பூனை துடிதுடித்தது.

ஒளித்திருந்து இதனைப் பார்த்த எலி, ''பூனையாருக்கு நான் பட்ட துன்பம் இப்போதாவது தெரிந்திருக்கும்'' என்று சொல்லி அப்பால் சென்றது.

1. எலி ஏன் வேதனைப்பட்டது?

.....................................................................................................................

2. எலி தப்புவதற்கு பூனைக்கு என்ன சொன்னது?

.....................................................................................................................

3. பூனை எலியை எவ்வாறு வேதனைப்படுத்தியது?

.....................................................................................................................

4. நாயைக் கண்ட பூனை என்ன செய்தது?

.....................................................................................................................

5. எலி முடிவில் என்ன சொல்லி அப்பால் சென்றது?

.....................................................................................................................

பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

**சின்னஞ் சிறு கிளியே கண்ணம்மா**
**செல்வக் களஞ்சியமே**
**என்னைக் கலி தீர்த்தே - உலகில்**
**ஏற்றம் புரிய வந்தாய்**

**ஓடி வருகையிலே - கண்ணம்மா**
**உள்ளங் குளிருதடி**
**அடித் திரிதல் கண்டால் - உன்னைப்போய்**
**ஆவி தழுவுதடி**

1. இப்படால் யாருக்காகப் பாடப்படுகிறது?

.....................................................................................................................

2. கிளி எனக் கூறப்படுவது யார்?

.....................................................................................................................

3. ஆவி என்ற சொல்லிற்கு ஒத்த சொல் யாது?

.....................................................................................................................

4. குழந்தைக்கு எப்பெயர் சூட்டப்பட்டுள்ளது?

.....................................................................................................................

5. ஏற்றம் என்ற சொல்லின் எதிர்க்கருத்து யாது?

.....................................................................................................................

## 9 . 6 கிரகித்தவற்றை ஞாபகப்படுத்தி ஒழுங்குபடுத்திக் கூறுதல்.

மாணவர்களே! வானொலி, தொலைக்காட்சி, புதினப் பத்திரிகை என்பவற்றினூடாக நீங்கள் அறிந்த பிரயோசனமுள்ள விடயங்களை உங்களது நண்பர்களுக்கும் அறியும் வண்ணம் ஒழுங்குபடுத்திக் கூறுவதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். இதனால் உங்களது பொது அறிவு விருத்தியாகும். நண்பர்களும் ஆசிரியர்களும் உங்களை மிகவும் விரும்புவார்கள்.

வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் ஆகியவற்றில் சிறவர்களுக்கான பகுதிகள் பிரத்தியேகமாக உள்ளதை நீங்கள் அறிவீர்களல்லவா? அவற்றின் மீது உங்கள் கவனத்தை வைத்திருங்கள்.

## 9 . 7 கிரகித்தவற்றை தேவைக்கும் சந்தர்ப்பத்திற்குமேற்ப மீண்டும் பயன்படுத்தல்

இவ்வாறு நீங்கள் அறியும் விடயங்கள் நாட்கள் செல்லச் செல்ல மறக்கப்பட்டு விடலாம். எனவே அவற்றைக் குறித்து வையுங்கள். வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நாடாக்களில் பதிவு செய்து வைக்கலாம். பத்திரிகைச் செய்திகளாயின் அவற்றைக் கத்தரித்து வைத்திருக்கலாம்.

அல்லது ஒரு குறிப்புப் புத்தகத்தை கையாளும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். இந்தப் பழக்கங்கள் உங்களது பிற்கால வாழ்க்கைக்கு மிகவும் உதவியாக இருக்கும். உயர் வகுப்புக்களில் ஆய்வுகள் செய்பவர்கள் இவ்வாறே செயல்படுகிறார்கள். எனவே நீங்கள் சிறுவயதிலிருந்தே இவ்வாறு பழக்கப்படுத்தி கொள்வது உங்களது உயர்கல்விக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும்.

10. பேசுதல்.

## கேட்போர் இயல்பு அறிந்து பொருத்தமாகப் பேசுந்திறனை விருத்தி செய்தல்

### 10 . 1 மூத்தோர், சான்றோருடன் பேசும்போது.



மாணவர்களாகிய நாம் எமது வீட்டிலும், பாடசாலையிலும் பாதையிலும் பலருடன் பேசிப் பழகுகிறோம். பேசும்போது அன்பாக பேசுதல் வேண்டும். நாம் முதியவர்களுடன் பேசும் போது அவர்களுக்கு வணக்கம் கூறி பேசத் தொடங்குதல் வேண்டும். முதியவர்களுடன் அவர்களுக்கு ஏற்ற முறையில் பேசிப் பழகுதல் வேண்டும்.

### 10 . 2 நண்பர்கள், சகபாடிகளுடன் பேசும்போது.

நண்பர்களுடன் நட்பு முறையில் அன்னியோன்யமாக பேசலாம். நண்பர்களுடன் பேசும் போது நட்பின் இயல்புகள் நமக்குத் தெரியவரும். நண்பர்கள் தமக்குள் பலதரப்பட்ட விடயங்களையும் பேசுவார்கள்.

### 10 . 3 இளையோருடன் பேசும்போது

எமக்கு இளையவர்களான தம்பி, தங்கைகளுடனும், எமது அயலவருடனும் அன்பாகவும் இனிமையாகவும் பேசி அவர்களின் அன்பைப் பெறலாம்.

சிறுவராகிய நாம் எல்லோருடனும் ஒற்றுமையுடனும் அன்பாகவும் பழகுதல் வேண்டும். நாம் நட்புக் கொள்ளும் நண்பர்களும் நல்லவர்களாக இருக்க வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இ∴து பற்றி ஔவையார் மூதுரையில்,

**நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க**
**நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்**
**குணங்க ளுரைப்பதுவும் நன்றே அவரோ**
**டிணங்கி யிருப்பதுவும் நன்று**

எனப் பாடியுள்ளார். எனவே நாமும் நல்லவருடன் பேசிப் பழகுவது சிறப்பானதாகும்.

நாம் நம்மிலும் சிறியவர்களுடன் அன்பாகவும் பாசமாகவும் பழுகுதல் வேண்டும். சிறுவர்களை அவர்களின் பெயரைக் கூறாது தம்பி, தங்கையென அழைக்க வேண்டும். அவர்களுக்கு அறிவூட்டக்கூடிய புத்திமதிகள் வழங்க வேண்டும்.



கீழே காணும் கொன்றை வேந்தன் முதுமொழியை சொல்லிக் கொடுப்பது நல்லது. இதனை ஒளவையார் பாடியுள்ளார்:

**அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்**
**ஆலயம் தொழுவது சாலவும் நன்று**
**இல்லறம் அல்லது நல்லறம் அன்று**
**ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்**
**உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு**
**ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்**
**எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்**

**ஏவா மக்கள் மூவா மருந்து**
**ஐயம் புகினும் செய்வன செய்**
**ஒருவரைப்பற்றி ஓரகத்திரு**
**ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்**
**ஒளவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு**

## 10.4 வலது குறைந்தோர் / நோயாளருடன் பேசும்போது

வலது குறைந்தோருடன் பேசும் போது அன்பாக அவர்களின் குறைபாட்டை சுட்டிக்காட்டாது பேசுதல் வேண்டும். அதேபோல் நோயாளருடன் பேசும் போதும்

அவர்களின் நோய் விரைவாக குணமாகும் எனும் துணிவை வழங்கக்கூடிய முறையில் பேச வேண்டும். நோயாளிக்கு நாம் பேசும் ஒவ்வொரு பேச்சும் மகிழ்ச்சியை எற்படுத்த வேண்டும்.

பயிற்சி

1) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக?

1. பேசத் தொடங்கும் போது என்ன கூறவேண்டும்?
.................................................................................................................................

2. எம்முடன் வசிப்பவர்கள் யார்?
.................................................................................................................................

3. நல்லாரைக் காண்பது எப்படியானது?
.................................................................................................................................

4. நோயாளருடன் எவ்வாறு பேச வேண்டும்?
.................................................................................................................................

5. குறைபாடு உள்ளவர்களுடன் எவ்வாறு பழக வேண்டும்?
.................................................................................................................................

2) இடைவெளிகளில் ஏற்ற சொல்லை வைத்து நிரப்புக

1. ...................................................... இணங்கி இருப்பதும் நன்றே
2. உண்டி ...................................................... பெண்டிர்க்கு அழகு.
3. ஏவாமக்கள் ...................................................... மருந்து.
4. ஆலயம் ...................................................... சாலவும் நன்று
5. ஐயம் புகினும் ...................................................... செய்.
6. அன்னையும் பிதாவும் ...................................................... தெய்வம்.
7. ஆலயம் தொழுவது ...................................................... நன்று.

11. வாசிப்பு

# மௌனமாக வாசித்துக் கிரகித்தல்

## 11.1 மொழிவடிவங்கள், விடயங்களை வாசித்து கிரகித்தல்.

பின்வரும் கதையையும், பாடலையும் வாசிக்கவும்.

### தற்புகழ்ச்சி

ஓர் ஊரில் விநாயகம் என்ற பணக்காரன் ஒருவன் இருந்தான். அவன் மிகவும் தற்பெருமை கொண்டவன். அவனது முன்னோர்கள் சேர்த்து வைத்த சொத்தில் வசதியாக வாழ்பவன்.

விநாயகம் தனது தற்பெருமைக்காகவும், தற்புகழ்ச்சிக்காகவும் தினமும் பெரும் பணம் செலவு செய்வான். அவனைப் புகழ்வதற்காக எப்போதும் அவனைச் சுற்றி ஒரு கூட்டமே. இருக்கும்.

ஒரு நாள் விநாயகம் தெருவில் தனியாக நடந்து சென்று கொண்டிருந்தான்.

அப்போழுது ஏழ்மையான மனிதன் ஒருவன் எதிரில் வந்து கொண்டிருப்பதைப் பார்த்த விநாயகம் கை நீட்டி அவனை நிறுத்தினான்.

“யாரப்பா நீ? ஊருக்குப் புதுசா?” என்று கேட்டான் விநாயகம்.

“ஆமாம் ஐயா, வேலை தேடி பக்கத்து ஊரிலிருந்து வருகிறேன்.” என்றான் அந்த மனிதன்.

“இதோ பார்! நான் தான் இந்த ஊரிலே பெரிய பணக்காரன். என்னிடம் இப்போது இருநூறு ரூபாய் இருக்கிறது. என்னை ஒரு முறை ஏதாவது புகழ்ந்து பேசு, உனக்கு ஐம்பது ரூபாய் தருகிறேன்.” என்றான் விநாயகம்.

அதைக் கேட்ட அந்த மனிதனுக்கு விநாயகத்தின் மனநிலையும் தற்பெருமையும் நன்றாகப் புரிந்தது. உடனே அவன்,

“ஐயா! தங்களைத் தாராளமாகப் புகழ்கிறேன். அதேசமயம் பணத்தை விட, புகழ்ச்சிச் சொல்லுக்கு மதிப்பு அதிகம் என்பதையும் தங்கள் உணர வேண்டும் தாங்கள் முதலில் பணத்தைக் கொடுங்கள்” என்றான்.

உடனே விநாயகம் ஐம்பது ரூபாயை எடுத்து அந்த மனிதனிடம் கொடுத்தான். அதைப் பெற்றுக் கொண்ட அம்மனிதன், “ஐயா! நான் புகழப் போகும் புகழ்ச்சிச் சொற்களின் மதிப்பை விட இந்த ஐம்பது ரூபாயின் மதிப்பு மிகவும் குறைவாக உள்ளது. நல்ல தரமான புகழ்ச்சி வேண்டுமென்றால் நீங்கள் இன்னும் தர வேண்டியிருக்கும்!” என்றான்.

"அப்படியா? இந்தா பிடி, இன்னுமொரு ஐம்பது!'' என்று சொல்லி, மேலும் ஐம்பது ரூபாயை எடுத்து அந்த மனிதனிடம் கொடுத்தான் விநாயகம்.

"இருநூறில் நூறை உனக்குக் கொடுத்து விட்டேன். கெதியாகப் புகழ்த்து பேசு,'' என்றான் விநாயகம்.

அதைக்கேட்டு மெல்லப் புன்னகைத்த அந்த மனிதன்,

"என்ன ஐயா நீங்கள்! எதுவுமே புரியவில்லையே. உங்களிடம் நூறு ரூபாய் உள்ளது போல் இப்பொழுது என்னிடமும் நூறு ரூபாய் உள்ளது. பொருளாதார ரீதியில் இப்பொழுது நாம் இருவரும் சரிசமமானவர்கள். இப்படி சரிசமமாக உள்ளவர்கள். ஒருவரை ஒருவர் புகழ்ந்து கொள்வதில்லையே!'' என்றான்.

"ஓ, அது உண்மைதான். இதோ மீதமுள்ள நூறு ரூபாவையும் நீயே வைத்துக்கொள். இப்போது நீ என்னைப் புகழ எந்தத் தடையும் இருக்காது என்று நினைக்கிறேன், ''என்று சொன்ன விநாயகம் மீதியிருந்த நூறு ரூபாவையும் யோசிக்காமல் அவனிடம் கொடுத்தான்.

அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்ட அம்மனிதன், "இதோ பாருங்கள், இப்பொழுது நான் உங்களைப் புகழ்ந்து பேச வேண்டிய அவசியமே இல்லை. ஒன்றுமே இல்லாதவனை, இருக்கிறவன் எங்கேயாவது புகழ்வானா?'' என்ற கேட்டான்.

வெறும் புகழ்ச்சிக்காக பணத்தை இழந்ததோடு, பணம் இல்லாவிட்டால் சுற்றியிருக்கும் கூட்டமும்கூட விலகி விடும் என்று அப்போது தான் விநாயகத்திற்கு உறைத்தது.

பெருமை, புகழ் என்பன செய்யக்கூடிய நற்காரியங்களுக்காகத் தேடி வர வேண்டும். அதை விலை கொடுத்து வாங்க முடியாது. இந்தாருங்கள் ஐயா உங்கள் பணம்,'' என்று கூறி அவனது பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டுச் சென்றான் அந்த மனிதன். புகழ் என்ற போதையில் இருந்து முற்றிலும் விடுபட்டு, ஒரு புதிய மனிதனாக வீடு திரும்பினான் விநாயகம்.

## கற்றுக் கொள்

**நன்மை செய்ய கற்றுக் கொள்!**
**நலமாய் வாழக் கற்றுக் கொள்!**
**உண்மை பேசக் கற்றுக் கொள்!**
**உயர்வாய் வாழக் கற்றுக் கொள்!**

**துயரைப் போக்கக் கற்றுக் கொள்!**
**துணிந்து செயற்படக் கற்றுக் கொள்!**
**உழைத்து வாழக் கற்றுக் கொள்!**
**உலகை ஆளக் கற்றுக் கொள்!**

இனிதாய் பேசக் கற்றுக் கொள்!
இன்பம் பயக்கக் கற்றுக் கொள்!
வறுமை வந்தால் வாழ்வினில்,
தாங்கி ஏற்கக் கற்றுக் கொள்!

அன்பாய் வாழக் கற்றுக் கொள்!
பண்பாய்ப் பழகக் கற்றுக் கொள்!
அழியாக் கலையை வாழ்வினில்,
அறிந்து பயின்றிடக் கற்றுக் கொள்!

## 11.2 குறித்தவொரு விடயப்பகுதியை வாசித்து வினாவுக்கு விடை கூறுதல்.

மயூரி படம் வரைவதில் மிகவும் ஆர்வம் உள்ளவள். ஒரு நாள் அவளுடைய ஆசிரியர் படம் வரையும்போட்டியில் பங்கு பற்றுமாறு கூறினார். மயூரி தனது பாடசாலையின் சார்பில் தான் வரைதல் போட்டியில் பங்கு பற்றுவதை எண்ணி உளம் மகிழ்ந்தாள். இப்போட்டிக்காக மயூரி ஒவ்வொரு நாளும் வரைதலில் பயிற்சி பெற மூன்று மணி நேரம் செலவிட்டாள்.

கடைசியாக போட்டிக்கான தினமும் வந்தது. போட்டி இலங்கைத் தேசிய கலாபவனத்தில் நடைபெற்றது. அங்கு பல பாடசாலை மாணவ, மாணவிகள் பல்வேறு பாடசாலைச் சீருடைகளுடன் இருந்தனர். சிலர் மயூரியை நட்புடன் பார்த்தனர்.

போட்டி ஆரம்பமானது. மாணவர்கள் படம் வரைவதில் மும்முரமாக ஈடுபட்டனர். மயூரி கடற்கரைக் காட்சியினை சிறப்பாக வரைந்தாள். தனது படத்தை தீட்டி முடிந்தவுடன் மற்றும் போட்டியாளர் வரைந்த படங்களையும் பார்த்தாள்.

போட்டியிள் முடிவுகள் அறிவிக்கப்பட்ட போது, மயூரியின் படம் முதலாம் இடத்தை பெற்றுள்ளதாக அறிவித்தனர். மயூரி தனது கடின முயற்சியால் வெற்றி பெற்றதை எண்ணி அக மகிழ்ந்தாள்.

1. மயூரியின் ஆசிரியர் ஏன் வரைதற் போட்டியில் பங்குபெறுமாறு மயூரியை அழைத்தார்?
   1. மயூரி ஆசிரியரால் நேசிக்கப்பட்ட மாணவி.
   2. மயூரி விடா முயற்சி உடைவள்.
   3. மயூரி நன்றாக சித்திரம் தீட்டக் கூடியவள்.
   4. மயூரி போட்டியில் வெற்றி பெறுவாள் என்பது அவளுக்குத் தெரியும்.

(.......................................)

2. வரைதல் போட்டி எங்கு நடைபெற்றது?
   1. இலங்கை தேசிய கலா பவனத்தில்.

2. விகாரமகாதேவி பூங்காவில்.
3. பாடசாலை விளையாட்டு மைதானத்தில்.
4. பூந்தோட்டத்தில் (.......................................)

3. ஏன் பாடசாலை மாணவர்கள் வித்தியாசமான சீருடைகளுடன் இருந்தனர்?
1. அவர்கள் கவர்ச்சியாக இருக்க வேண்டுமென்று விரும்பினர்.
2. அவர்கள் வேறு வேறு பாடசாலைகளை சேர்ந்தவர்களாக இருந்தனர்.
3. அவர்கள் வேறுபட்ட வகுப்புகளில் படித்தனர்.
4. அவர்கள் வித்தியாசமான வயதுடையவர்கள். (.......................................)

4. மயூரி என்ன காட்சியை வரைந்தாள்?
1. மலர்க் கண்காட்சி.
2. வண்ணத்துப்பூச்சி.
3. அழகான பறவை.
4. கடற்கரைக் காட்சி. (.......................................)

5. மயூரி போட்டியில் வெற்றி பெற்றாள். ஏனெனில்,
1. மூன்று மாதங்களுக்குப் பயிற்சி செய்தாள்.
2. அவளை எல்லோரும் அன்புடன் நேசித்தனர்.
3. மற்றவர்களின் படத்தை பார்த்து வரைந்தாள்.
4. அவள் பாவித்த கலர்கள் வெளிநாட்டினது. (.......................................)

## 11.3 எளிதான கதைகள், கவிதைகளை மௌனமாக வாசித்து அவற்றின் சாரம்சத்தை சொந்த உரைநடையில் எழுதுதல்

### சட்டி குட்டி போடும் என்றால்...

மத்திய ஆசியாவில் நஸ்ருதீன் முல்லா என்னும் விகடகவி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருடைய விகடப்பேச்சு எல்லோரையுஞ் சிரிக்கச் செய்ததோடு சிந்திக்கவும் செய்தது.

முல்லாவின் அயல்வீட்டுக்காரர் ஒருநாள் அவருடைய வீட்டுக்கு வந்தார். அவர் “எங்கள் வீட்டுக்கு விருந்தினர் வந்திருக்கின்றனர்; உணவு சமைக்க உங்கள் சட்டிகளைத் தாருங்கள்'' என்ற கேட்டார். அவர் கேட்ட சட்டிகள் எல்லாவற்றையும் முல்லா கொடுத்தார்.

சில நாள்கள் கழிந்தன. அயல்வீட்டுக்காரர் முல்லாவிடம் வந்தார். அவர் தாம் எடுத்துச் சென்ற சட்டிகளுடன் ஒரு சிறிய சட்டியையுங் கொண்டு வந்திருந்தார். அப்பொழுது முல்லா அந்தச் சிறிய சட்டியை வியப்புடன் பார்த்தார். “இந்தச் சிறிய சட்டி என்னுடைய தன்று; இதனை ஏன் கொண்டுவந்தீர்'' என்று அவர் அயல்வீட்டுக்காரரைக் கேட்டார். “நீங்கள் தந்த சட்டிகள் போட்ட குட்டி இது. சட்டப்படி இது உங்களுக்கே உரியது” என்று அயல்வீட்டுக்காரர்

வேடிக்கையாக விடை கூறினர். முல்லா இயற்கையாகவே விகடமாகப் பேசுபவர். அவர் அயல்விட்டுக்காரரின் விகடப் பேச்சைக் கேட்டுத் திணறி விடுவாரா?

சில நாள்கள் கழிந்த பின்னர் முல்லா அயல்வீட்டுக்காரியிடஞ் சென்றார். "எங்கள் வீட்டுக்கு விருந்தினர் வந்திருக்கின்றனர்; உணவு சமைக்க உங்கள் சட்டிகளைத் தாருங்கள்" என்று அவர் கேட்டார். அயல்வீட்டுக்காரர் முல்லா கேட்ட சட்டிகள் எல்லாவற்றையுங் கொடுத்தார். முல்லா அவற்றை எடுத்துக் கொண்டு தம் வீட்டுக்குச் சென்றார்.

பல நாள்களாகியும் முல்லா அச்சட்டிகளைத் திருப்பிக் கொடுக்கவில்லை. எனவே அயல்வீட்டுக்காரர் முல்லாவின் வீட்டுக்குச் சென்றார். முல்லா அவரைக் கண்டவுடன், "என்ன இன்று திடீரென்று வந்திருக்கிறீர்" என்று கேட்டார். அப்பொழுது அயல்வீட்டுக்காரர் "ஒன்றுமில்லை நீங்கள் என்னிடம் எடுத்து வந்த சட்டிகளை இன்னமும் திருப்பித் தரவில்லையே. அவற்றை எடுத்துச் செல்வதற்காக வந்தேன்" என்று கூறினார். "ஐயையோ, அவற்றைத் திருப்பிக்கொண்டு செல்லவா வந்தீர்கள்? அவை இறந்து மூன்று நாள்கள் கழிந்து விட்டனவே" என்று முல்லா பதிலளித்தார். "என்ன! சட்டிகளுமா இறக்கும்?" என்று அயல்வீட்டுக்காரர் வியப்புடன் முல்லாவைக் கேட்டார். "சட்டி குட்டி போடும் என்றால், அவை இறப்பதில் என்ன அதிசயம்" என்று முல்லா விடை கூறினார். அப்பொழுது தான் அயல்வீட்டுக்காரர் தாம் முல்லாவுக்குச் செய்த குறும்பின் விளைவு இது என்பதனை உணர்ந்தார். அவர் வெட்கத்தினால் தலை குனிந்தார்.

இக்கதையினை உமது வசனநடையில் எழுதுக.

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

## இன்பப் பொங்கல்

தைத்திருநாள் இல்லமெலாம்
தளிர்த்திடும் தைப் பொங்கல்
இத்தனைநாள் காத்திருந்தோம்
இனிய தமிழ்ப் பொங்கல்

கோலமிட்டு விளக்கேற்றிக்
கும்பிடுவார் அம்மா
பாலெடுத்து பொங்கலுக்கு
பானை வைப்பார் அப்பா

விரும்பிய மா, வாழை, பலா
விதவிதமாய்க் கனிகள்
கரும்பிளநீர் படைத்து மனம்
களித்திடுவோம் நாங்கள்

வெண்ணிறப்பால் பொங்கிவர
வெடி சுடுவோம் நாங்கள்
இன்னமுதப் பொங்கலுண்ண
இணைந்து நிற்போம் நாங்கள்

"அம்பி"

பயிற்சி

1) மேற்காணும் கவிதையின் சாரம்சத்தை சொந்த நடையில் எழுதுக

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

..............................................................................................................................................................................................

..............................................................................................................................................................................................

..............................................................................................................................................................................................

2) பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்.

1. பொங்கலுக்கு பால் எடுத்து பானை வைப்பவர் யார்?

..............................................................................................................................................................................................

2. வீட்டில் கோலமிடுபவர் யார்?

..............................................................................................................................................................................................

3. இன்பப் பொங்கல் எந்த மாதத்தில் நடைபெறுகிறது?

..............................................................................................................................................................................................

4. முக்கனிகள் எவை?

..............................................................................................................................................................................................

5. எவ்வாறு மனம் களிப்பு அடைவதாக கூறப்பட்டுள்ளது?

..............................................................................................................................................................................................

## 11.4 விளம்பரங்கள், அறிவுறுத்தல், அழைப்பிதழ்கள் வாசித்து கிரகித்தல்

**அழைப்பிதழ்**

**நாவற்குழியூர் நடராஜன் நினைவுக் கவிதைப் போட்டி**
**பரிசளிப்பு விழா**

திரு/திருமதி/செல்வி.........................................................................................................................

அன்புடையீர்,

"பிறைட் புக் சென்டர்" (பிறைவேட்) லிமிடட் நிறுவனத்தின் அனுசரணையுடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் தேசிய சேவை. அமரர் நாவற்குழியூர் நடராஜன் நினைவாக நடத்திய கவிதைப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும்

2.6.1996 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு
வெள்ளவத்தை 57ம் ஒழுங்கை தமிழ்ச்சங்க மண்டபத்தில்
நடைபெறவுள்ளது. இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை
அன்புடன் அழைக்கின்றோம்
நன்றி

திரு. பொன். சக்திவேல்
பிறைட் புக் சென்டர் (பிறைவேட்) லிமிடெட்
எஸ். 27, முதலாம் மாடி,
கொழும்பு மத்திய சந்தைத் தொகுதி
கொழும்பு 11.

பணிப்பாளர்
தமிழ் தேசிய சேவை,
இ. ஒ. கூ. தாபனம்
கொழும்பு 7.

எண்ணம் போல்
வண்ண நகைகளை
மங்கையர் மனங் குளிர
செய்திட என்றுமே
நாடுவீர்
சுசீலா நகை மாளிகை
177/9 செட்டியார் தெரு
கொழும்பு – 11. தொ. பே.: 439090

**வகுப்பு**

25 வகையான சிகைய லங்காரம். இயற்கை முறையிலான Facial சுய அலங்காரம். மணப்பெண் அலங்கார வகுப்புக்கள் ஆரம்பம் 07-08-96 காலை 10.00 மணி, அருள் கல்வி வட்டம

111, பொனடஜீன் வீதி
கொட்டாஞ்சேனை.
தொ.பே: 331495

**ஜோதிடம்**

அம்மன் அருள்வாக்குப் பெற்ற கைரேகை நிபுணர் R.N. ராஜா மீண்டும் வருகை தந்துள்ளார். திரகாஷ மஹிஷ அஷ்ட பந்தன வாயிலாக நிவர்த்திகள் செய்யப் படும். R.N. ராஜா மிலாகிரிய அவனியூ, பம்பலப்பிட்டி.
போன்: 585237

**ஜோதிடம்**

இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் 25 வருடம் அனுபவம் பெற்ற ஜோதிடர் திரு. விஜயகுமார் மீண்டும் வருகை தந்துள்ளார். சந்திக்க வேண்டிய முகவரி

இல. 67, பாங்க்சால் வீதி
கொழும்பு - 11
தொ. பே: 071-31016

பயிற்சி

மேற்கண்ட விளம்பரங்கள், அழைப்பிதழ் ஆகியவற்றை கிரகித்து கீழ்க்காணும் வினாக்கட்கு விடை தருக.

1. மங்கையர் மனங் குளிர எங்கு நகை செய்ய வேண்டும்?
   ..................................................................................................................................

2. மணப்பெண் அலங்கார வகுப்பு எங்கு நடைபெறுகின்றது?
   ..................................................................................................................................

3. கைரேகை நிபுணரின் பெயர் என்ன?
   ..................................................................................................................................

4. 25 வருட அனுபவம் வாய்ந்த சோதிடர் யார்?
   ..................................................................................................................................

5. யார் நினைவாக கவிதைப் போட்டி நடைபெற்றது?
   ..................................................................................................................................

6. தமிழ்ச்சங்கம் எங்கு உள்ளது?
   ..................................................................................................................................

7. யாருடைய அனுசரணையுடன் கவிதைப்போட்டி நடைபெற்றது?
   ..................................................................................................................................

2) கீழ்க்காணும் வினாக்களில் கீறிட்ட இடங்களை நிரப்புக.

இருபத்தைந்து அருள்வாக்கு, விகடகவி, வாழை, நினைவுக்கவிதை, இறந்துவிட்டதாக, தை மாதத்தில்

1. நஸ்ருதீன் முல்லா என்ற ...................................................... ஒருவர் வாழ்ந்தார்.
2. முல்லா சட்டிகள் யாவும் ...................................................... கூறினார்.
3. ...................................................... தைப் பொங்கல் நடைபெறும்.

4. முக்கனிகள் மா, ............................................................ பலா என்பனவாகும்.
5. நாவற்குழியூர் நடராசன் ............................................................ ப் போட்டி பரிசளிப்பு விழா.
6. ............................................................ வகையான சிகையலங்கார வகுப்பு நடைபெற்றது.
7. அம்மன் ............................................................ பெற்ற கைரேகை நிபுணர் வந்துள்ளார்.

## 11.5 வாசித்துக் கிரகித்துத் துலங்குதல்.

உ+ம் சவர்க்காரம் பற்றிய விளம்பரம்

1. சுத்தமான சலவைக்கு யானை மார்க் சவர்க்காரம்
2. சுகந்தமான வாசனைக்கு யானைமார்க் சவர்க்காரம்
3. சுத்தம் சுகம் தர யானை மார்க் சவர்க்காரம் பாவியுங்கள்

### பிறந்த நாள் அழைப்பிதழ்

அன்புடையீர்,

எதிர்வரும் திங்கட்கிழமை 25.7.95 ந் திகதி அன்று எனது பிறந்த நாள் கொண்டாட்டம் நிகழவிருப்பதால் அத்தருணம் வருகை தந்து விருந்துபசார வைபவத்தில் பங்கு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறேன்

இப்படிக்கு
அன்புள்ள
ஏ. அஸ்மின்

பிள்ளைகளே, இவ்வாறான பல விளம்பரங்கள், அறிவித்தல்கள், அழைப்பிதழ்கள் என்பவற்றை வாசித்துக் கிரகித்து தெளிவு பெறுங்கள்.

## 11.6 அறிவித்தல்களை வாசித்து அதன்படி செயற்படுதல்

கூட்ட அறிவித்தல்

எங்கள் பாடசாலை மாணவர் மன்றக் கூட்டம் 3-5-95 அன்று பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெறவிருப்பதால் சகல அங்கத்தவர்களும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இப்படிக்கு
எம். ராஜன்
செயலாளர்.

## நிகழ்ச்சி நிரல்

1. ஆராதனை
2. தலைவர் உரை
3. செயலாளர் சென்ற கூட்ட அறிக்கை வாசித்தல்
4. அங்கத்தவர்களின் நிகழ்ச்சிகள்

## 12. எழுத்து

### விரைவாக எழுதுந்திறனை விருத்தி செய்தல்

### 12.1 பார்த்து எழுதுதல்.

பின்வரும் பந்தியைப் பார்த்து உறுப்பமைய எழுதுங்கள்.

"இலையான் ஓர் அசுத்தப்பிராணி. அது எச்சிலிலும் இருக்கும்; எருவிலும் இருக்கும்; மலத்திலும் இருக்கும்; மாமிசத்திலும் இருக்கும்; பின் நாம் உண்ணும் உணவிலும் இருக்கும்."

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

### 12.2 சொல்வது எழுதுதல்

### 12.3 விரைவாக எழுதும் பயிற்சிகள்.

பின்வரும் பந்தியைப் பார்த்து மிக விரைவாக உறுப்பமைய எழுதுங்கள்.

| | |
|---|---|
| எங்கள் நாடு இன்ப வீடு | .......................................... |
| என்றே உணர்ந்திடுவோம் - இதனை | .......................................... |
| நன்றே உணர்ந்திடுவோம் - இந்த | .......................................... |
| இன்ப வீட்டில் வாழும் சோதரர் | .......................................... |
| இனியார் நாம் அறிவோம் - இந்த | .......................................... |
| எண்ணத்தைப் பெறுவோம்! | .......................................... |

## 12.4 அளவு, அமைப்பு, உறுப்பு, தெளிவு, சீரான இடைவெளி முதலியவற்றுடன் எழுதுதல்.

பின்வரும் பந்தியை அளவு, அமைப்பு, உறுப்பு, தெளிவு சீரான இடைவெளி முதலானவற்றுடன் எழுதுங்கள்.

அரேபியா நாட்டிலே கூபா எனும் ஓர் ஊர் உண்டு. முற்காலத்தில் அங்கே நு.'.மான் என்னும் பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் மிகுந்த நேர்மை உடையவர். நல்ல கல்விமான்; சிறந்த பேச்சாளர்; அவர் கௌரவம், பதவி, செல்வம் முதலியவற்றில் ஆசை இலலாதவர்.

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

கீழ்க்காணும் வாக்கியங்களை உறுப்பமைய எழுதுக.

1. அறம் செய்ய விரும்பு.

....................................................................................................

2. ஆறுவது சினம்.

....................................................................................................

3. இயல்வது கரவேல்.

....................................................................................................

4. ஈவது விலக்கேல்.

....................................................................................................

5. உடையது விளம்பேல்.

....................................................................................................

6. ஊக்கமது கைவிடேல்.

....................................................................................................

7. எண்ணெழுத் திகழேல்.

....................................................................................................

8. ஏற்பது இகழ்ச்சி.

....................................................................................................

9. ஜயம் இட்டு உண்.

..............................................................................................................................

11. ஒப்புரவு ஒழுகு.

..............................................................................................................................

12. ஓதுவது ஒழியேல்.

..............................................................................................................................

13. ஆசை வெட்கம் அறியாது.

..............................................................................................................................

14. இரக்கப் போனாலும் சிறக்கப் போ.

..............................................................................................................................

15. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

..............................................................................................................................

### 12.5 சுயமாக விரைவாக எழுதிப் பழகுதல்.

மாணவர்களே, உங்களது கற்பனையாற்றலை உபயோகித்து ஏதாவது ஒரு விடயததைப் பற்றி உங்கள் சிந்தையில் உதிப்பவற்றை எழுதிப் பாருங்கள். பின்னர் அவற்றை உங்கள் ஆசிரியரிடம் காட்டி அவரது வழிகாட்டுதலையும, ஆலோசனைகளையும் பெறுங்கள். உதாரணமாக எனது சைக்கிள் என்னும் தலைப்பில் எழுதப் பயிற்சி பெறுங்கள்.

## 13. கேட்டல்

## சிந்திப்பதற்காகச் செவிமடுத்தல்.

### 13.1 செவிமடுக்கும் தகவல்கள், அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப துலங்குதல்

#### சேர். பொன். இராமநாதன்

ஈழ நாட்டின் தவப்புதல்வர்களுள் சேர். பொன். இராம்நாதன் அவர்களும் ஒருவர் ஆவர். இவர்கல்வி அறிவு, மதிநுட்பம், பேச்சுத்திறன், சைவப்பற்று ஆகிய உயர்ந்த குணங்களை கொண்டிருந்தார். பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த படித்த பிரமுகர்களுள் ஒருவராக இவர் விளங்கினார். இவரது பெருமைகளை எம்மால் விபரித்துச் சொல்ல முடியாது. இவர்

யாழ்ப்பாணத்திலுள்ள மானிப்பாயில் பிறந்தார். கொழும்பில் கல்வி கற்றார். இலங்கையின் சுதந்திரத்துக்காக பாடுபட்டவர்களுள் சேர். பொன். இராமநாதன் அவர்களுக்குத் தனியிடமுண்டு. இவர் நாட்டு மக்களின் முன்னேற்றத்துக்காக பல சேவைகள் செய்துள்ளார்.

மேலேயுள்ள கட்டுரையை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

1. ஈழநாட்டுப் பெரியார் ஒருவரின் பெயர் என்ன?

........................................................................................................................

2. இவர் எங்கு பிறந்தார் ?

........................................................................................................................

3. இவர் எங்கு கல்வி கற்றார் ?

........................................................................................................................

4. இவரின் பண்புகள் மூன்று கூறுக ?

........................................................................................................................

5. இவர் நாட்டு மக்களுக்காக யாது செய்தார் ?

........................................................................................................................

### புரிந்து கொண்டால்

**எங்கள் நாடு இன்ப வீடு**
**என்றே உணர்ந்திடுவோம் - இதனை**
**நன்றே உணர்ந்திடுவோம் - இந்த**
**இன்ப வீட்டில் வாழும் சோதரர்**
**இனியார் நாம் அறிவோம் - இந்த**
**எண்ணத்தைப் பெறுவோம்!**

**இனமும், ஏற்கும் சமயமும், மொழியும்**
**ஏற்றந் தருவனவாம் - ஏற்போர்க்**
**கேற்றந் தருவனவாம் - இவற்றின்**
**பெயரைச் செர்லலிப் பிளவைப் பெருக்கல்**
**பேதையர் செயலாம் - உதவாப்**
**பேதையர் செயலாம்!**

**கருத்து மோதல் காணும் போது**
**கனிவாய் ஆய்ந்திடுவோம் - நுணுகிக்**
**கனிவாய் ஆய்ந்திடுவோம் - நியாயப்**
**பொருத்த மெங்குண்டோ அங்கு**
**விட்டுக் கொடுத்திடுவோம் - பேதம்**
**விரட்டி யோட்டிடுவோம்!**

எம். ஸி. எம். ஸுபைர்
காலத்தின் குரல்கள்

மேலே உள்ள கவிதையை வாசித்து கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக.

1. கவிதையின் தலையங்கம் யாது?

.................................................................................................................

2. நாம் அனைவரும் எத்தகையவர் எனக் கூறப்பட்டுள்ளது?

.................................................................................................................

3. பேதையரின் செயல் யாது?

.................................................................................................................

4. நுணிகிக் கனிவாய் ஆய்ந்திடப்படுவது எது?

.................................................................................................................

5. எதற்காக விட்டுக் கொடுக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது?

.................................................................................................................

**14. பேசுதல்**

## திருத்தமான மொழியில் பேசுதல்

பேச்சு மொழியைச் செம்மையான மொழியாக்கிப் பேசுவதற்கு ஆசிரியர் மாணவர்களுக்கு உதவி புரிய வேண்டும். வகுப்பறைக்கு வெளியே பேச்சுக்களைக் கேட்கவும், பலதரப்பட்ட மக்களோடு உரையாடவும், வாய்ப்புக்களை ஏற்படுத்தலாம்.

உதாரணமாக, சந்தைக்கு அழைத்துச் சென்று அங்கு நிகழும் உரையாடல்களை அவதானிக்கச் செய்து, பின்பு வகுப்பறையில் அவர்கள் செவிமடுத்த விடயங்களை நல்ல தமிழிலே கூறச் செய்யலாம். திருத்தமற்ற சொற்களைக் கையாளும் வேளைகளில் அவற்றைத் திருத்திச் செம்மையாகப் பேசுவதற்குப் பயிற்சியளிக்கலாம். பேசும் ஆற்றலை வளர்ப்பதற்கு நாடகங்கள், உரையாடல்கள் என்பன உதவி புரியும்.

மேலும் ஒரு பொருளை மையமாக வைத்து அதனைப் பற்றி ஒவ்வொரு மாணவரிடையேயும் ஒவ்வொரு வினாவை ஆசிரியர் வினாவலாம். பலரும் பலவிதமான கருத்துக்களைக் கூற பேசுதல் திருத்தமடையும்.

சில சொற்களின் சரியான வடிவங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| அகப்பை | கத்தரி | தலைமை | பொய்ம்மை |
| அடமானம் | கலாச்சாரம் | தாழ்வாரம் | மண்ணெண்ணெய் |

| | | | |
|---|---|---|---|
| அரிவாள் | கார்த்திகை | நாகரிகம் | முகூர்த்தம் |
| ஆட்சி | குளிகை | நிலைமை | முயற்சி |
| இயற்கை | சம்பந்தம் | நோன்பு | முற்றம் |
| இளநீர் | சமையல் | பரீட்சை | வயது |
| உபவாசம் | சுதந்திரம் | பலாப்பழம | வியர்வை |
| உயிர் | செய்தி | பாகற்காய் | விரதம் |
| உறசவம | தணணீர | பிரயாணம் | வெங்காயம் |
| உடைமை | சொப்பனம் | புடைவை | வெட்கம் |

பொதுவான பிழைகள்.

பிழைகளைப் பொதுவாக, எழுத்துப் பிழை, சொற் பிழை, இலக்கணப் பிழை எனனும் மூன்று வகைகளாக பிரிக்கலாம்.

| பிழை | திருத்தம் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1. என்றை | - என்னுடைய | 18. தோர்வி | - தோல்வி |
| 2. துறப்பு | - திறப்பு | 19. ஆயிதம் | - ஆயுதம் |
| 3. வேணும் | - வேண்டும் | 20. உருமை | - உரிமை |
| 4. போறேன் | - போகிறேன் | 21. சுகயீனம | - சுகவீனம் |
| 5 தண்ணி | - தண்ணீர் | 22. பண்டி | - பன்றி |
| 6. பொடியன் | - பையன் | 23 முளகாய் | - மிளகாய |
| 7. கதிரை | - நாற்காலி | 24. வேரவை | - வியர்வை |
| 8. கந்தோர் | - அலுவலகம் | 25. காலமை | - காலை |
| 9. முசுப்பாத்தி | - வேடிக்கை | 26. கிடாய் | - கடா |
| 10. இப்ப | - இப்போது | 27. சிவர் | - சுவர |
| 11. அப்ப | - அப்போது | 28 சிகப்பு | - சிவப்பு |
| 12. சிலவு | - செலவு | 29. புட்டு | - பிட்டு |
| 13. நாத்தம் | - நாற்றம் | 30. பெரிசு | - பெரிது |
| 14. ஒணடு | - ஒன்று | 31 போட்டுவாறன் | - போய் வருகிறேன் |
| 15. பத்தை | - பற்றை | 32. இஞ்சாருங்கோ | - இங்கே பாருங்கள் |
| 16. ஒம்பது | - ஒன்பது | 33. அவனு | - அவன் |
| 17. வெத்திலை | - வெற்றிலை | 34. சொல்லுறன் | - சொல்கிறேன் |

1) பின்வரும் வாக்கியங்களிலுள்ள பிழைகளை திருத்தி அமைக்க.

1. தெருவில் செல்லும்போது பிராக்குப் பார்த்தல் ஆகாது.

..................................................................................................................

2 வரவுக்கேற்ற சிலவு செய்தல் அவசியம

..........................................................................................................

3. தலகணி உறையில் எண்ணெய் ஊறியதால் அதில் அழுக்கு படிந்திருக்கின்றது.

..........................................................................................................

4. அவர்கள் என்ன சொன்னார்

..........................................................................................................

5. ஒருத்தியும் ஒருவனும் வந்தினம்.

..........................................................................................................

6. நாங்கள் பாட்டு பாடினம்.

..........................................................................................................

7. அருச்சந்திரன் உண்மை பேசினான்.

..........................................................................................................

8. அவன் காச்சலால வருந்தினான.

..........................................................................................................

9. கிளிகள் பறந்தது.

..........................................................................................................

10 காத்து வேகமாக அடித்தது.

..........................................................................................................

11. நாங்கள உசக்க போவோம்.

..........................................................................................................

12. இன்டைக்கு வெள்ளிக் கிழமை.

..........................................................................................................

13. காலமை தேத்தண்ணி குடித்தனான்.

..........................................................................................................

14. இஞ்சாருங்கோ எழும்புங்கோவன்

..........................................................................................................

15 விடிஞ்சு போச்சு.

..........................................................................................................

16 என்றை காலம் கூடாது.

..........................................................................................................

15. வாசிப்பு

## வாசிப்பதன் மூலம் சொற்களஞ்சியத்தை விருத்தி செய்தல்.

### 15.1 வாசிக்கும் புதிய சொற்களை இனங்கண்டு அட்டவணைப் படுத்துதல்.

மாணவர்களே, நீங்கள் குறிப்புப் புத்தகத்தை உபயோகிக்கும் பழக்கமுள்ளவராக இருந்தால், நீங்கள் அறிந்து கொள்ளும் புதிய சொற்களை அதில் குறித்து வாருங்கள். இதனால் உங்களது சொல் வளம் விருத்தியாகும். மொழியை தங்கு தடையின்றி கையாள சொல்வளம் அவசியமானது.

### 15.2 ஒத்த கருத்துள்ள சொற்கள், எதிர்க் கருத்துச் சொற்கள், எதிர்ப் பாற் சொற்கள், எதிர்மறைச் சொற்கள் என்பவற்றை இனங்காணல்.

ஒத்த கருத்துச் சொற்கள்.

ஒரு சொல்லின் அதே கருத்தைத் தரும் இன்னொரு சொல் ஒத்த கருத்துச் சொல் ஆகும்.

உதாரணம்:- 1. அன்பு = நேயம் 2. தூய்மை = சுத்தம்
3. பழமை = தொன்மை 4. இன்பம் = மகிழ்ச்சி

1. கீழ்க்காணும் பயிற்சியை செய்யவும்.

| | | | |
|---|---|---|---|
| 1. அகம் | = ...................................... | 16. விரைவாக | = ...................................... |
| 2. முதுமை | = ...................................... | 17. வெந்நீர் | = ...................................... |
| 3. இறப்பு | = ...................................... | 18. புகழ்தல் | = ...................................... |
| 4. வனம் | = ...................................... | 19. பகைவன் | = ...................................... |
| 5. காலை | = ...................................... | 20. சுறுசுறுப்பு | = ...................................... |
| 6. ஆகாயம் | = ...................................... | 21. வறுமை | = ...................................... |
| 7. ஒளி | = ...................................... | 22. பழமை | = ...................................... |
| 8. அமைதி | = ...................................... | 23. அன்பு | = ...................................... |
| 9. கனவு | = ...................................... | 24. வள்ளல் | = ...................................... |
| 10. ஏற்றம் | = ...................................... | 25. தூய்மை | = ...................................... |
| 11. இன்பம் | = ...................................... | 26. இரவு | = ...................................... |
| 12. கனிவு | = ...................................... | 27. சண்டை | = ...................................... |

13. வெப்பம் = ..................................

14. நட்பு = ..................................

15. ஆரம்பம் = ..................................

28. அழகு = ..................................

29. ஐயம் = ..................................

30 பணிவு = ..................................

## எதிர்க் கருத்துள்ள சொற்கள்

ஒரு சொல்லுக்கு எதிர்க் கருத்தை தரும் சொல் எதிர்க் கருத்துச் சொல் ஆகும்.

உதாரணம் 1. ஆசை - வெறுப்பு

2. பயம் - துணிவு

3. நட்பு - பகை

4. உண்மை - பொய்

1. கீழ்க்காணும் பயிற்சியை செய்யவும்.

1. காடு = ..................................
2. பசுமை = ..................................
3. அகலமான = ..................................
4. நவீன = ..................................
5. அறிவு = ..................................
6. சிறப்பு = ..................................
7. ஆதரவு = ..................................
8. விருத்தி = ..................................
9. ஆதி = ..................................
10. இரவு = ..................................
11. இல்லை = ..................................
12. இம்மை = ..................................
13. உண்மை = ..................................
14. உறவு = ..................................
15. ஏழை = ..................................
16. ஒற்றுமை = ..................................
17. கடினம் = ..................................
18. கருமை = ..................................
19. காலை = ..................................
20. குளிர் = ..................................
21. குனி = ..................................
22. அண்மை = ..................................
23. முடிவு = ..................................
24. நன்மை = ..................................
25. மானம் = ..................................
26. பொய் = ..................................
27. முதல் = ..................................
28. மேல் = ..................................
29. வறுமை = ..................................
30. வீரன் = ..................................

## எதிர்ப்பாற் சொற்கள்

தாய் என்னும் பெண்பாற் சொல்லுக்கு தந்தை என்பது ஆண்பாற் சொல்லாகும். பிதா என்னும் ஆண்பாற் சொல்லுக்கு மாதா என்பது பெண்பாற் சொல்லாகும்

1. கீழ்க்காணும் சொற்களுக்கு எதிர்ப்பாற் சொற்களைத் தருக.

| | ஆண்பால் | | பெண்பால் |
|---|---|---|---|
| 1. | அரசன் | = | .................................. |
| 2. | ஆண்டான் | = | .................................. |
| 3. | ஆயன் | = | .................................. |
| 16. | .................................. | = | அரக்கி |
| 17. | .................................. | = | தேவி |
| 18. | .................................. | = | தோழி |

4. இடையன் = ........................................
5. உழவன் = ........................................
6. உத்தமன் = ........................................
7. ஆசிரியர் = ........................................
8. குறவன் = ........................................
9. கணவன் = ........................................
10. புதல்வன் = ........................................
11. புருசன் = ........................................
12. மகன் = ........................................
13. முடவன் = ........................................
14. வேலைக்காரன் = ........................................
15. காவற்காரன் = ........................................

19. ........................................ = குருடி
20. ........................................ = குமரி
21. ........................................ = சீமாட்டி
22. ........................................ = சேவகி
23. ........................................ = மகள்
24. ........................................ = மைத்துனி
25. ........................................ = மாதா
26. ........................................ = புதல்வி
27. ........................................ = அழகி
28. ........................................ = சகோதரி
29. ........................................ = நல்லவன்
30. ........................................ = தாசி

## 15.3 இணைமொழிகள், ஒலிக்குறிப்புச் சொற்கள் ஆகியவற்றை இனங்காணல்

**இணைமொழிகள்:** ஒரு சொல்லோடு ஒத்துப்போகும் வேறொரு சொல் அச்சொல்லுடன் இணைந்து வந்தால் அவற்றை இணைமொழிகள் என்பர்.

உதாரணம்:-

1. ஊண் உறக்கம்
2. ஆய்ந்தோய்ந்து
3. கல்லும் முள்ளும்
4. அடிமுடி
5. வாடி வதங்கி
6. கண்ணுங்கருத்தும்
7. இன்ப துன்பம்
8. பகல் இரவு
9. கள்ளங்கபடம்
10. கையும் மெய்யும்
11. சுற்றிச் சுழன்று
12. இனசனம்
13. சேறும் சகதியும்
14. பச்சைப்பசேல்
15. பென்னம் பெரிய
16. கணக்கு வழக்கு
17. திட்டவட்டம்
18. கொடுக்கல் வாங்கல்
19. ஒளிப்பு மறைப்பு
20. உயர்வு தாழ்வு

உதாரணங்களை அவதானித்த பின்னர் பயிற்சியைச் செய்யுங்கள்

வரவுசெலவு, விம்மிவிம்மி, ஓடிஆடி, நீந்திநீந்தி, உயர்வுதாழ்வு, விதிவிலக்கு, ஆடிப்பாடி, அடிக்கடி.

உதாரணம்:-

1. தாய் ஊண் உறக்கமின்றி பிள்ளையைப் பார்த்தாள்.
2. எக்காரியத்தையும் ஆய்ந்தோய்ந்து பார்க்கவேண்டும்.
3. அந்தப் பாதை கல்லும் முள்ளும் நிறைந்த இடம்.

1. ........................................................................................................................

2. ........................................................................................................................

3. ........................................................................................................................

4. ........................................................................................................................

5. ........................................................................................................................

6. ........................................................................................................................

7. ........................................................................................................................

8. ........................................................................................................................

கீழ்க்காணும் இணைமொழிகளை தகுந்த இடைவெளிகளில் நிரப்பி எழுதுக.

நெல்லும் புல்லும், ஆடிப்பாடி, ஓடியாடி, ஒளிந்துமறைந்து, வாடிவதங்கி, ஓய்வு ஒழிச்சலின்றி, ஏற்றமும் இறக்கமும், கண்ணீரும் கம்பலையுமாக, வேண்டாவெறுப்பாக, அங்கும் இங்கும்

1. பிள்ளைகள் ........................................................ நின்றனர்.
2. கந்தன் ........................................................ கார் ஒன்று வாங்கினான்.
3. கள்வன் ........................................................ வீட்டினுள் புகுந்தான்.
4. வயல்வெளி ........................................................ என காணப்பட்டது.
5. நாய் ........................................................ அடிபட்டு செத்தது.
6. வயலில் ........................................................ வேலை செய்தான்.
7. எல்லோருக்கும் ........................................................ உண்டு.
8. கண்ணகி ........................................................ வந்தாள்.
9. எலி ........................................................ ஓடித்திரிந்தது.
10. வேலைகளை ........................................................ செய்யக்கூடாது.

ஒலிக்குறிப்பு: குடு குடு, மட மட, போன்ற சொற்களை இரட்டைமொழி அல்லது ஒலிக்குறிப்பு எனக் கூறுவார்கள், சில ஒலிக்குறிப்புச் சொற்களைப் பாருங்கள்

| | | |
|---|---|---|
| பகபக | தகதக | கிணுகிணு |
| சலசல | குடுகுடு | வெடுவெடு |
| சரசர | மளமள | விறுவிறு |
| நெருநெரு | தணதண | சொரசொர |

| | | |
|---|---|---|
| புறுபுறு | கிசுகிசு | மொறமொற |
| கணகண | சடசட | சுறுசுறுப்பு |
| குபுகுபு | கடுகடு | வழவழப்பு |
| வளவள | பலபல | கலகல |

சில ஒலிக்குறிப்புச் சொற்களை வைத்து வசனம் அமைக்கும் முறைகளைப் பாருங்கள்.

1. தாகத்தால் கன்னன் நீரை **மளமள**வெனக் குடித்தான்.
2. மரம் **சடசட**வென முறிந்து விழுந்தது.
3. **தணதண**வென நெருப்ப எரிந்தது.
4. காயத்திலிருந்து **குபுகுபு**வென இரத்தம் வடிந்தது.
5. ஆற்று நீர் **சலசல**வென ஓடியது.

பின்வரும் ஒலிக்குறிப்புச் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்குக.

சல சல - ........................................................................................................

கிணு கிணு - ........................................................................................................

புறுபுறு - ........................................................................................................

மினுமினு - ........................................................................................................

வரவர - ........................................................................................................

வளவள - ........................................................................................................

குடுகுடு - ........................................................................................................

விறுவிறு - ........................................................................................................

கடு கடு - ........................................................................................................

நெரு நெரு - ........................................................................................................

## 15.4 சொற்றொடர்கள், உவமைத்தொடர்கள், பழமொழிகள் ஆகியவற்றை இனங்காணல்.

### சொற்றொடர்கள்

அடி முதல் முடி வரை

அடி தலை மாறி

அடியற்ற மரம் போல

அமிழ்தினு மினிய தமிழ் போல
அருமை பெருமை அறியாது
ஆசை காட்டி மோசஞ் செய்து
ஆண்டி முதல் அரசன் வரை
ஆலமுண்ட நீலகண்டன்
இரு தோணியில் கால் வைத்து
இலவு காத்த கிளி போல ஏமாற்று
இமைமறை காய் போல் மறைந்து கிடந்த
இறைவனுக்கே வெளிச்சம்
ஊண் உறக்கம் ஒழிந்து
எச்சிக் கையால் காக்கை விரட்டாதே
எல்லோருக்கும் நல்லவனாய்
எல்லாம் வல்ல இறைவன்
ஏனோ தானோ என்றிராமல்
ஐயந் திரிபுறக் கற்று
கண் கண்ட தெய்வம்
கண்டதே காட்சி கொண்டதே கோலம்
கண் கண்டதை கை செய்யும்
கைகட்டி வாய் புதைத்து
தவித்த முயலை அடித்து
நடையுடை பாவனை
பட்ட பாடும் கெட்ட கேடும்
மனம் போன போக்கு

அடுக்குமொழிகளை வைத்து வாக்கியம் அமைக்கும் முறைகளைப் பார்ப்போம்

1. கமலா அழுது அழுது மயங்கிச் சரிந்தாள்.
2. விடிய விடிய குழந்தை தூக்கமில்லாமல் அழுதது,
3. சிறுவர்கள் பாம்பைக் கண்டு பாம்பு பாம்பு எனக் கத்தினார்கள்.
4. குழந்தை தவழ்ந்து தவழ்ந்து வந்தது.
5. ரகு ஊர் ஊராய் சென்று வியாபாரம் செய்தான்.

## பழமொழிகள்

கீழ்க்காணும் பழமொழிகளை கற்றுக் கொள்ளுங்கள்.

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

2. அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை.
3. அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.
4. ஐந்திலே வளையாதது ஐம்பதிலே வளையாது.
5. அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயம் எல்லாம் பேய்.
6. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
7. அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவுவார்களா?
8. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
9. அடியாத மாடு படியாது.
10. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி.
11. அழுதும் பிள்ளை அவளே பெற வேண்டும்.
12. அழுத பிள்ளை பால் குடிக்கும்.
13. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு
14. அறையிலாடியென்றோ அம்பலத்தில் ஆட வேண்டும்.
15. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
16. அன்னமிட்டவர் வீட்டில் கன்னம் இடலாமா?
17. அறிவுடையாரை அரசனும் விரும்புவான்.
18. அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்.
19. அன்பான நண்பனை ஆபத்தில் அறி.
20. ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்க வேண்டும்.
21. ஆசை வெட்கம் அறியாது.
22. ஆடு நனைகிறதென்ற ஓநாய் அழுகிறதாம்.
23. ஆடத் தெரியாத தேவடியாள் முற்றம் கோணல் என்றாளாம்.
24. ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்.
25. ஆபத்துக்குப் பாவமில்லை.
26. ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு.
27. ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி
28. ஆலையில்லா ஊருக்க இலுப்பைப்பூ சக்கரை
29. ஆழமறியாமல் காலை விடாதே.
30. ஆறின கஞ்சி பழங்கஞ்சி
31. ஆறு கடக்கிற வரையில் அண்ணன் தம்பி, அப்புறம் நீ யார்? நான் யார்?
32. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு
33. ஆனைக்கும் அடி சறுக்கும்.
34. ஆனைக்கொரு காலம், பூனைக்கொரு காலம்.
35. ஆனை வரும்பின்னே மணிஓசை வரும் முன்னே.

36. ஆனை செத்தாலும் ஆயிரம் பொன்

37. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை

38. இரக்கப் போனாலும் சிறக்கப் போ

39. இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவான்.

40. இரு தோணியில் கால் வைக்காதே.

41. இளமையில் கல்வி சிலையில் எழுத்து.

42. இனம் இனத்தை சேரும்.

43. ஈட்டி எட்டின மட்டும் பாயும் பணம் பாதாள மட்டும் பாயும்.

44. உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.

45. உயர உயர பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?

46. ஊர்வாயை மூட உலை மூடி இல்லை

47. உடையவன் பாரா வேலை ஒரு முழம் கட்டை.

48. உண்மையே உயர் தந்திரம்

49. உப்பிட்டவரை உள்ளவும் நினை.

50. உப்பு சமைந்தால் தெரியும் உப்பின் அருமை அப்பன் மாண்டால் தெரியும் அப்பன் அருமை.

51. உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா?

52. ஊசி போன இடம் தெரியாது. உலக்கை போன இடம் தெரியும்.

53. ஊமையார் சபையில் உளறுவாயன் மகா வித்துவான்.

54. ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்.

55. ஊருக்கொரு தேவடியாள் யாருக்கென்று ஆடுவாள்.

56. எட்டி பழுத்தென்ன ஈயாதார் வாழ்ந்தென்ன.

57. எய்தவன் இருக்க அம்பை நோவதேன்

58. எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விட்டென்ன?

59. எலிவளையானாலும் தனிவளை வேண்டும்.

60. எறும்பு ஊரக் கற் குழியும்.

61. ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்.

62. ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்கு கோபம்

63. ஏற்ற முண்டானால் இறக்கம் உண்டு.

64. ஐந்திலே வளையாதது ஐம்பதில் வளையுமா?

65. ஐயர் வரும் வரையில் அமாவாசை காக்குமா?

66. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

67. கடுகு போன இடம் தெரியாது மிளகு போன இடம் தெரியும்.

68. கடுகு சிறிதானாலும் காரம் பெரிது

69. கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்.
70. கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டுமா?
71. கல்வி என்னும் பயிருக்கு கண்ணீர் எனும் மழை வேண்டும்.
72. கரும்பு இனிக்கிறதென்று வேரோடு பிடுங்காதே.
73. கழுதை அறியுமா கற்பூர வாசனை?
74. காகம் திட்டி மாடு சாகுமா?
75. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.
76. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
77. கண்கெட்ட பிறகு சூரிய வணக்கமா?
78. கிட்ட இருந்தால் முட்டப் பகை.
79. கிட்டாதாயின் வெட்டென மற.
80. குறை குடம் தழும்பும் நிறை குடம் தழும்பாது.
81. குப்பையில் போட்டாலும் குன்று மணி மங்காது.
82. குரைக்கிற நாய் கடியாது.
83. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.
84. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை
85. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை.
86. கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளையிலே தெரியும்.
87. கேடு வரும் பின்னே மதி கெட்டுவரும் முன்னே.
88. கைக்கெட்டியது வாய்க்கு எட்டவில்லை.
89. கையில் வெண்ணெயிருக்க நெய்க்கு அலைவானேன்.
90. கொஞ்ச இடம் கொடுத்தால் மிஞ்ச இடம் பிடிப்பான்.
91. கோவில் பூனை தேவருக்கு அஞ்சாது.
92. சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும்.
93. சந்திரனைப் பார்த்து நாய் குரைத்தால் என்ன?
94. சிறிய பாம்பானாலும் பெரிய தடி கொண்டடி.
95. சிறு துளி பெரு வெள்ளம்.
96. சுகமும் துக்கமும் சுழலும் சக்கரம்
97. சுண்டங்காய் காற்பணம் சுமை கூலி முக்காற்பணம்.
98. சும்மா இருந்த அம்மையாருக்கு அரைப்பணத்துத் தாலி போதாதா?
99. சுவாமி வரங் கொடுத்தாலும் பூசாரி வரங் கொடான்.
100. சூடு கண்ட பூனை அடுப்படியை நாடாது.
101. செல்வம் என்பது சிந்தையின் நிறைவே.
102. தன்னைப் புகழாத கம்மாளன் இல்லை.
103. தன்வினை தன்னைச் சுடும்.

104. தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தாற் தெரியும்.
105. தருமம் தலை காக்கும்.
106. தன்னுயிர் போல மன்னுயிரையும் நினை.
107. தாரமும் குருவும் தலைவிதிப்படி.
108. தானம் கொடுத்த மாட்டின் பல்லைப் பிடித்துப் பார்க்காதே.
109. தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதித்தவன் வினை அறுப்பான்.
110. திக்கற்றவனுக்கு தெய்வமே துணை.
111. தீராக் கோபம் போராய் முடியும்.
112. துணை போனாலும் பிணை போகாதே.
113. துரும்பும் பல்லுக் குத்த உதவும்.
114. துறவிக்கு வேந்தன் துரும்பு.
115. தூரத்துப் பச்சை கண்ணுக்கு குளிர்ச்சி
116. தேசத்தோடு ஒத்து வாழ்
117. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்
118. நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்.
119. நாய் குரைத்தால் நமக்கென்ன குறை
120. நத்தை வயிற்றிலே முத்து பிறக்கும்.
121. நாயைக் கண்டால் கல்லைக் காணோம், கல்லைக்கண்டால் நாயைக் காணோம்
122. நரிக்கு கொண்டாட்டம் நண்டுக்கு திண்டாட்டம்.
123. நாய்க்கு வேலையுமில்லை நடக்க நேரமுமில்லை.
124. நாய்க்கேன் போர்த் தேங்காய்.
125. நிழலின் அருமை வெய்யிலில் தெரியும்.
126. நிறை குடம் தளும்பாது
127. நிலவுக்கு அஞ்சி பரதேசம் போகலாமா?
128. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
129. பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும்
130. பணம் இல்லாதவன் பிணம்.
131. பந்திக்கு முந்து படைக்கு பிந்து.
132. பல எலி கூடினால் புற்று எடுக்காது.
133. பல நாள் திருடன் ஒரு நாளைக்கு அகப்படுவான்.
134. பழகப் பழக பாலும் புளிக்கும்.
135. பள்ளிக் கணக்குப் புள்ளிக்கு உதவாது.
136. பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சுமா?
137. பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல்.

138. பன்றிக்கு பின் போன கன்றும் மலம் தின்னும்.
139. பாத்திரமறிந்து பிச்சையிடு. கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு
140. பால் தொட்டுப் பால் கறக்க வேண்டும்.
141. பானையில் உண்டானால் அகப்பையில் வரும்.
142. புதுமைக்கு வண்ணான் கரைகட்டி வெளுப்பான்.
143. பூனைக்கு கொண்டாட்டம், எலிக்கு திண்டாட்டம்.
144. பொய் சொன்ன வாய்க்கு பொரியும் கிடையாது.
145. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து.
146. மருந்தும் விருந்தும் மூன்று வேளை.
147. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
148. வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்.
149. விளையும் பயிரை முளையில்தெரியும்.

கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக.

1. நிதர்சனமான ஓர் உண்மையை நிறுவுவதற்கு எதுவும் தேவையில்லை; எனும் பொருளை புலப்படுத்தும் பழமொழி.

1. இமைக் குற்றம் கண்ணுக்குத் தெரியாது.
2. ஊர் வாயை மூட உலை மூடி இல்லை.
3. அள்ளாதது குறையாது, இல்லாதது பிறவாது
4. கைப்புண்ணுக்கு கண்ணாடி வேண்டுமா? (.................................)

2. கண்ட பாவனையிற் கொண்டை முடிவதா? எனும் பழமொழிக்கு பொருத்தமான பழமொழி.

1. கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா?
2. இரவற் புடவையிலே இது நல்ல கொய்யகமாம்.
3. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை
4. புலியை பார்த்த பூனை குறி சுட்டதாம். (.................................)

3. ஆழமறியாமல் காலை விடாதே என்னும் பழமொழியின் பொருள்,

1. கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா?
2. ஆழமற்றது கால் வைத்தால் அபாயம் இல்லை.
3. எக்கருமத்தையும் எண்ணித் துணிதல் நன்று
4. அவசர புத்தி ஆபத்தை உண்டாக்கும். (.................................)

4. துன்பம் நேரிலும் தத்தம் கருமங்களைத் தாமே செய்தல் வேண்டும்; என்னும் பொருளை

விளக்கும் பழமொழி.

1. தலையிடியும் காய்ச்சலும் தனக்குத் தனக்கு வந்தால் தெரியும்.
2. மயிலே மயிலே என்றால் இறகு போடுமா.
3. முடவர் கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா?
4. அழுதாலும் பிள்ளை அவளே பெற வேண்டும். (..................................)

5. ஒருவன் செய்யும் தீமைகள் அவனையே வந்து சாரும் என்ற கருத்தைத் தெரிவிக்காத பழமொழி எது?

1. கெடுவான் கேடு நினைப்பான்.
2. தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்.
3. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
4. தன்வினை தன்னைச் சுடும். (..................................)

6. சந்தர்ப்பம் கிடைக்கும் போது அதனை தக்கபடி பயன்படுத்திக்கொள்ள வேண்டும்; என்ற பொருளைத் தரும் பழமொழி.

1. சுவரை வைத்துக் கொண்டு சித்திரம் வரைய வேண்டும்.
2. சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும்.
3. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.
4. மனமுண்டானால் இடமுண்டு (..................................)

7. நடந்து முடிந்த தொன்றைப் பற்றி சிந்திப்பதிற் பயனில்லை; என்னும் பொருள் தரும் பழமொழி,

1. ஆகும் காலம் ஆகும் போகுங் காலம் போகும்.
2. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.
3. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
4. கண் கெட்ட பிறகு சூரிய வணக்கமா? (..................................)

8. ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம்; எனும் பழமொழியின் கருத்து,

1. எந்தச் செயலையும் அவதானமாக செய்தல் வேண்டும்
2. விஷம் சிறிதானாலும் அதனால் வரும் தீமை பெரியது.
3. ஒரு பெருஞ் செயல் சிறியதொரு பிழையால் கெட்டு விடும்.
4. எந்த செயல் செய்யும் போதும் சோர்வு அடையக் கூடாது. (..............................)

## 15.5 சுருக்கக் குறியீடுகளை வாசித்து விரித்துக் கூறல்

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் - கூ. மொ. வி. நி.
இலங்கை மின்சார சபை - இ. மி. ச

கல்விப் பொது தராதரப்பத்திரப் பரீட்சை - க.பொ.த
இலங்கை போக்குவரத்துச் சபை - இ.போ.ச
இலங்கை வீடமைப்புத் திட்டம் - இ.வீ.தி
பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் - ப.நோ.கூ.ச
இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் - இ.ரு.கூ
இலங்கை ஒலிப்பரப்புக் கூட்டுத்தாபனம் - இ.ஒ.கூ
தேசிய சேமிப்பு வங்கி - தே.சே.வ

மேற்கூறிய சுருக்கக் குறியீடுகளை அறிந்து கொண்டீர்கள். உங்களுக்குத் தெரிந்த சில சுருக்கக் குறியீடுகளைத் தாருங்கள்.

## 15.6 சொல்லாக்க விளையாட்டுக்கள், குறுக்கெழுத்துப் போட்டி கட்டங்களை நிரப்புதல், புதிர்களை விடுவித்தல்.

கீழ்க்காணும் சொற் சிலம்பத்தைப் பூர்த்தி செய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | |
| 5 | | 6 | 7 | 8 |
| 9 | | 10 | | |
| 11 | 12 | 13 | 14 | 15 |
| | | | 16 | |

1. 1) இடமிருந்து வலம் - ஒரு பறவை ..........................................
2. 6) இடமிருந்து வலம் - கனிவிற்கு ஒரு சொல் ..........................................
3. 11) இடமிருந்து வலம் - கண்ணிற்கு ஓர் உவமானம் ..........................................
4. 1) மேலிருந்து கீழ் - மனித பண்பு ஒன்று ..........................................
5. 6) மேலிருந்து கீழ் - நீர் நிறைந்த இடம் ..........................................
6. 14) மேலிருந்து கீழ் - பொருளின் பெறுமதி ..........................................

ஒவ்வொரு வரியிலுமுள்ள எழுத்துக்களை உரிய முறையில் ஒழுங்கு படுத்தினால் அடைப்புக்குள் இருக்கும் கருத்தைத் கொடுக்கும் ஒரு சொல் உண்டாகும். அச்சொல்லைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.


7. ம், ப, ழ, ட, ம், தோ (ஒரு பழத்தின் பெயர்) ..........................................
8. லை, ண, ம, தி, கோ, ரு (இயற்கை துறைமுகம்) ..........................................
9. றை, கா, கே, ங், ச, ன், து (சீமெந்து உற்பத்தி செய்யும்இடம்) ..........................................


10. ளை, ந், த, க. ப், ப (இலங்கையின் மிகக் குளிர் கூடிய இடம்) ..................................
11. வ, த், ர், ன. த, ஜெ, பு. ய, ர, ம் (இலங்கையின் தலை நகரம்) ..............................


## சொல்லாக்கம்


| அ | | ஆ | |
|---|---|---|---|
| பதவி | வி | சிறி | = பதவி, விசிறி |
| கவி | தை | மாதம் | = கவிதை, தை மாதம் |
| சுரு | தி | கதி | = சுருதி, திகதி |
| கரு | வி | கடகவி | = கருவி, விகடகவி |
| பொதி | கை | மாறு | = பொதிகை, கைமாறு |

கீழ்க்காணும் சொல்லாக்கப் பயிற்சியை மாணவர்கள் செய்தல் வேண்டும்.




பின்வரும் கூட்டிலுள்ள வெற்றுச் சதுரங்களில் பொருத்தமான எழுத்துக்களைக் கொண்டு சொற்களை ஆக்கி எழுதுக. அவ்வாறு சொற்களை ஆக்குவதற்காக கீழே தரப்பட்டுள்ள விளக்கக் குறிப்புக்களைப் பயன்படுத்துக.

இடமிருந்து வலம்

1. பிள்ளைகளுக்கு விருப்பமான செயல்.
2. மண்ணாலாக்கப்பட்ட ஒரு பொருள்.
4. உயிருக்கு ஒத்த கருத்துள்ள சொல்.
5. வெயிலுக்கும் மழைக்கும் உதவும் ஒரு பொருள்.
6. விலங்குகளின் உறைவிடம்.
7. கப்பல் செல்லும், கடலுமல்ல, கையால் தொடும் பொருளுமல்ல அதுதான் இது.
10. இன்றைக்கு மறுநாள் 'நாளை' என்பது போல, இன்றைக்கு முதல் நாள்
11. இது கடலின் எல்லையாக அமைகிறது.

மேலிருந்து கீழ்

1. எரி பொருள்களுள் ஒன்று
2. எல்லோருக்கும் முகத்தில் மூக்கு உண்டு இதற்குக் கையில் மூக்கு உண்டு
3. மயில் என்ன செய்யும்.
6. நமது உடலுக்கு இப்படியொரு பெயருண்டு
8. இது இல்லாத இடமே இல்லை எனலாம்.
9. பாதியை இப்படியும் கூறுவார்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வி 1 | | 2 | | டு | |
| | பா 3 | | | 4 | வி |
| 5 | | | கா 6 | | |
| | 7 | கா 8 | | ம் | |
| | | | | | 9 |
| 10 | று | | | 11 | |

பின்வரும் நொடிகளை விடுவியுங்கள்.

1. நன்னுவார் தின்ன மாட்டார் அவர் யார்? ........................................................
2. முத்துக்குள்ளே முப்பத்திரண்டு பழங்கள் அது என்ன? ........................................................
3. குடும்பிக்காரன் சமையலுக்கு வீரன் அவர் யார்? ........................................................
4. வெள்ளைக்காரனுக்கு கறுப்புத்தொப்பி அது யார்? ........................................................
5. செம்பு நிறைய முத்து அது என்ன? ........................................................
6. காய்ப்பார், பூப்பார், கலகலப்பார், காகம் இருக்கக் கொப்பில்லை அது யார்?
........................................................

7. தொப்பென்று விழுந்தான் தொப்பி கழன்றான் அது யார்? ..........................................
8. பூமியில் பிறந்தவன் புகையாகிப் போவான் அவன் யார்? ..........................................
9. ஒரு குப்பியில் இரண்டு நிறங்கள் அது என்ன? ..........................................
10. அள்ளலாம் கிள்ளமுடியாது அது என்ன? ..........................................
11. கையில் தவழும் பையில் உறங்கும் - அது என்ன? ..........................................
12. செப்பு நிறைய மாணிக்கம் - அது என்ன? ..........................................
13. வெயிலில் மலரும் காற்றில் உலரும் - அது என்ன? ..........................................
14. நாலு கால் உண்டு நடுவில் உடல் இல்லை - அது என்ன? ..........................................
15. மணியடித்தால் மலைப்பாம்பு நகரும் - அது என்ன? ..........................................
16. பச்சை வீட்டிற்கு சிவப்பு வாசல் - அது என்ன? ..........................................
17. அகன்ற காட்டின் நடுவே ஒரு பாதை - அது என்ன? ..........................................
18. ஒன்பது பிள்ளைக்கும் ஒரே குடும்பம் - அது என்ன? ..........................................
19. ஓட்டம் நின்றால் ஆட்டம் போச்சு - அது என்ன? ..........................................
20. வால் நீண்ட குருவிக்கு வாயுண்டு வயிறு இல்லை - அது என்ன? ..........................................

## 16. எழுத்து

## கருத்துக்களை பொருத்தமாக அமைத்து எழுதுதல்.

### 16.1 சொற்கள், சொற்றொடர்களை வைத்து வாக்கியம் அமைத்தல்

| | | | |
|---|---|---|---|
| 1. | எங்கள் வீடு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளது. | - வீடு | - இல்லம் |
| 2. | அரசன் நாட்டைப் பாதுகாக்க கடமையுடையவன். | - அரசன் | - மன்னன் |
| 3. | கடவுள் எம்மைக் காப்பாற்றுவார். | - கடவுள் | - இறைவன் |
| 4. | மாமிசம் சாப்பிடுதலை தவிர்க்க வேண்டும். | - மாமிசம் | - இறைச்சி |
| 5. | தீயாரின் நட்புக் கொள்ளக் கூடாது. | - தீயார் | - கெட்டவர் |
| 6. | நாம் எப்போதும் உண்மையே பேச வேண்டும் | - உண்மை | - மெய் |
| 7. | அப்பா நேற்று கண்டிக்குச் சென்றார் | - சென்றார் | - போனார் |
| 8. | பரீட்சைக்காக சிரமப்பட்டு படித்தான். | - சிரமம் | - கஷ்டம் |
| 9. | இலங்கை மாங்காய் வடிவமான நாடாகும். | - இலங்கை | - ஈழம் |
| 10. | தர்மம் செய்வது எமது கடமையாகும். | - தர்மம் | - கொடை |
| 11. | நான் பயப்படாமல் துணிந்து மலையில் ஏறினேன் | - மலை | - குன்று |
| 12. | ஆசிரியர் எனக்கு பேனை ஒன்றைப் பரிசாகத் தந்தார் | - பரிசு | - அன்பளிப்பு |
| 13. | அந்தச் சிறுவன் குளிரில் நடுநடுங்கினான். | - சிறுவன் | - பையன் |

14. அந்தச் சீமான் மிகமிக நல்ல மனிதர். - சீமான் - பணக்காரண்
15. வானத்தில் மின்னல் மின்னியது. - வானம் - ஆகாயம்
16. அவள் இனிமையாக பாட்டுப் பாடுவாள். - பாட்டு - பாடல்
17. பூமியில் அநேக பயிர்கள் உண்டாகின்றன - பூமி - பார்
18. எலி வளையானாலும் தனி வளை வேண்டும். - வளை - புற்று
19. ராஜி மிக அழகானவள். - அழகு - வனப்பு
20. இந்த உணவு மிகவும் இனிப்பானது. - இனிப்பு - மதுரம்

## 16 . 2 சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியங்கள் அமைத்து எழுதுதல்.

பின்வரும் சொற்களை சரியாக ஒழுங்குபடுத்தி வசனமாக எழுதுக.

1. புலவர், சின்னத்தம்பி, ஒரு, சிறந்த

.......................................................................................................................

2. மரங்கள், விழுந்தன, காற்றால், புயல்

.......................................................................................................................

3. கண்ணன், ஏறினான், மரத்தில்

.......................................................................................................................

4. நேற்று, இரவு, பெய்தது. மழை

.......................................................................................................................

5. சென்றனர், இராமனும், காட்டிற்கு, சீதையும்,

.......................................................................................................................

6. உதிக்கும், கிழக்கு, சூரியன், திசையில்

.......................................................................................................................

7. பூ, கட்டினோம், மாலை, நாங்கள்

.......................................................................................................................

8. அரசன், மிருகங்களின், சிங்கம், தீயது.

.......................................................................................................................

9. எறிந்து, நாங்கள், விளையாடினோம், பந்து

.......................................................................................................................

10. குடித்தது, பிள்ளை, பால், அழுத

.......................................................................................................................

11. தம்பி, எழுந்தான், நித்திரைவிட்டு, காலையில்

.....................................................................................................................................................

12. காற்று, வீசியது, வேகமாக, மிகவும்

.....................................................................................................................................................

13. தோன்றினான், காலையில், சூரியன், கிழக்கில்

.....................................................................................................................................................

14. கமால், போனான், நேரத்துடன், பாடசாலை

.....................................................................................................................................................

15. காலத்தில், மழைக், பெய்யும், மழை

.....................................................................................................................................................

## ஒத்த சொற்கள் எழுதுக

1. ஈகை - .....................................................................
2. தவறு - .....................................................................
3. மிடிமை - .....................................................................
4. ஔடதம் - .....................................................................
5. வினாவுதல் - .....................................................................

## எதிர்ச்சொல் எழுதுக

1. நடனம் - .....................................................................
2. வானம் - .....................................................................
3. பிரியம் - .....................................................................
4. பார் - .....................................................................
5. அடவி - .....................................................................

## பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக

1. வாழை + பழம் - .....................................................................
2. பாவை + பிள்ளை - .....................................................................
3. போர் + களம் - .....................................................................
4. பல் + பொடி - .....................................................................
5. மூன்று + தமிழ் - .....................................................................

பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

1. அறுசுவை - ..............................

## 18.2 தொனி வேறுபாடுகளை அனுசரித்துப் பேசுதல்

மாணவர்கள் சொற்களை உச்சரிக்கும் போது அசிரியர் அதனை நன்கு கேட்டுப் பிழைகளைத் திருத்த வேண்டும். சரியான உச்சரிப்பைப் பெறுவதற்கு பின்வரும் வாக்கியங்களைப் பலதடவைகள் உச்சரியுங்கள். வாக்கியங்களில் பிழை விடும் இடங்களை

மீண்டும் மீண்டும் உச்சரிக்க வழி செய்தல் வேண்டும்.

1. கடற்கரையில் உரல் உருளுது, புரளுது, தத்தளிக்குது, தாளம் போடுது.
2. கிணறும் நிறை கிணறு - கெளிறும் நிறை கெளிறு
3. கண்ட புளிக்குத் தொண்டை கறுப்பு.
4. வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும் முரமுரவெனவே புளித்த மோரும்.
5. ஒரு கிளை நரியிலே ஒரு நரி கழி நரி முதுகிலே ஒரு பிடி நரை மயிர்
6. தாளம் போட்டான் ஏழைக்கிழவன். வாழைப்பழத்தில் வழுக்கி விழுந்தான்.
7. "கந்தனே வந்திடு சந்ததம் தந்திடு, அண்ணா, கன்னா மன்னா, தென்னா"

பின்வரும் சொற்களை உச்சரித்து வாசியுங்கள்.

1. தைப்பொங்கல் 2. சூரியன் 3. உழவர் 4. மக்கள் 5. சிற்றப்பா 6. நன்றிக்கடன்

## 18.3 மெய்ப்பாடுகளுடன் உணர்வு வெளிப்பட பேசுதல்.

கீழ்க்காணும் படங்களை அவதானித்து அவற்றின் உணர்ச்சி பாவங்களை எழுதுக.




1. .......................................... 2. ..........................................




3. .......................................... 4. ..........................................




5. .......................................... 6. ..........................................



7. ..........................................

# கற்றலுக்கான வாசிக்குந் திறனை விருத்தி செய்தல்.

## 19.1 மாணவர்கள் காண்பவற்றை தாமே வாசித்து கிரகித்தல்.

மாணவர்கள் வீதியில் செல்லும்போது தென்படும் விளம்பரங்கள், பெயர்ப் பலகைகள், சுவரொட்டிகள், முதலியவற்றை வாசிக்கப் பழகுதல் வேண்டும்.

இடைவெளிகளில் ஏற்ற சொல்லை வைத்து நிரப்புக.

1. உண்டி .......................................... பெண்டிர்க்கழகு.
2. ஏவாமக்கள் .......................................... மருந்து.
3. ஆலயம் .......................................... சாலவும் நன்று.
4. ஐயப் புகினும் .......................................... செய்.
5. அன்னையும் பிதாவும் .......................................... தெய்வம்.

இரு பொருள் தரும்படி வாக்கியம் அமைக்குக.

நாடு
1. ..........................................................................................
2. ..........................................................................................

பால்
1. ..........................................................................................
2. ..........................................................................................

வீடு
1. ..........................................................................................
2. ..........................................................................................

ஆடு
1 ..........................................................................................
2. ..........................................................................................

ஓடு
1. ..........................................................................................
2. ..........................................................................................

அன்னம்
1. ..........................................................................................
2. ..........................................................................................

## 19.2 குறித்தவொரு தேவைக்காக வாசித்தல் - பாடநூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள்.

கீழ்க்காணும் பத்திரிகைச் செய்தி மூலம் நீங்கள் அறிந்து கொண்டது யாது என எழுதவும்.

# சுற்றாடலை பாதுகாக்க ஒத்துழைக்குமாறு கோரிக்கை

வவுனியா,

"ஷொப்பிங் பேக்" என அழிக்கப்படும் பொலித்தீன் பைகளின் பாவனையைக் குறைத்து சூழல் பாதுகாப்புக்கு ஒத்துழைக்க முன்வரவேண்டும். நாளாந்தம் மூன்று நான்கு பொலித்தீன் பைகளைப் பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்துகின்ற நாம் அவற்றை பொறுப்பற்ற முறையில் வெளியில் எறிந்து விடுவதனால் அவை சூழலில் மாசு ஏற்படுத்தி நுளம்புகளைப் பெருக்கி கேடு விளைவிக்கின்றன. இதனைத் தவிர்ப்பதற்கு அனைவரும் முயற்சிக்க வேண்டும் என வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற சூழல் பாதுகாப்பு தினவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றிய வன்னி எம். பி. எஸ். சண்முகநாதன் வலியுறுத்தினார்.

வவுனியா நகரசபைத்தலைவர் ஜீ. ரி. லிங்கநாதன் தலைமையில் விழா நடைபெற்றது.

அங்கு பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது.

எமது சூலைப் பாதுகாப்பதில் பெரும் பங்கு வகிக்கின்ற காடுகள் 25 வீதமளவில் பேணிப் பாதுகாக்கப்படவேண்டும். அதன் அவசியத்தை உணர்ந்து காடுகளை அழிக்கும் நடவடிக்கைகளை நிறுத்தி சூழல் பாதுகாப்பு முயற்சிகளுக்குத் துணை புரிய வேண்டும்.

வீட்டுக் குப்பைகளை பொறுப்பற்ற முறையில் வாய்க்காலில் வீசியெறிந்து சூழலை பலர் கெடுக்கின்றனர். வவுனியா நகரசபை பல வித கஷ்டங்களுக்கும் சிரமங்களுக்கும் மத்தியிலேயே சேவையாற்றி வருகின்றது. எனவே சூழல் பாதுகாப்பில் அதிகாரிகளுக்கு உதவி செய்து சூழல் மாசடைவதனால் ஏற்படுகின்ற பலதரப்பட்ட பாதிப்புகளில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும் இது எமது சமுதாய பொறுப்பு என்பதை உணர்ந்து கொள்வது நல்லது.

அரச அதிபர்

அரசாங்க அதிபர் கே. கணேஷ் பேசுகையில் தெரிவித்ததாவது.

புறச்சூழலைச் சுத்தமாக வைத்திருக்கும் அதேவேளை மரம் நடுகையிலும் மரங்களை வளர்ப்பதிலும் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். பிள்ளைகளுக்கும் பெரியவர்களுக்கும் பிறந்த நாள் கொண்டாடும் போது கேக் வெட்டுவது போல மரக்கன்று நடுவதையும் வழக்கத்தில் கொள்ள வேண்டும். மரம் நட்டு வளர்ப்பதன் மூலம் நாமும் பயனடைந்து பிறரையும் பயனடையச் செய்யலாம்.

குழாய் கிணறுகள் போன்ற பொது நீர் நிலைகளைத் தகுந்த முறையில் பராமரித்து இயற்கையின் பொதுவளமாகிய நீரைச் சிக்கனமாகவும் பாதுகாப்பாகவும் பயன்படுத்த வேண்டும்.

நகரசபைத் தலைவர்

'நகரசபைத் தலைவர் தமது தலைமை யுரையில் தெரிவித்ததாவது.

வவுனியா நகரைப் பொறுத்தமட்டில் சூழல் சுத்ததிற்கு ஏற்படுகின்ற பாதிப்புகளோடு நகர நிருமாண ஒழுங்கு முறைகளை மீறிச் செயற் படுபவர்களினாலும் பாதிப்பு ஏற்படுகின்றது. இங்கு ஏற்பட்டுள்ள சனத்தொகை அதிகரிப்பு, வாகன நெரிசல் என்பனவும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. எனவே கட்டிட அமைப்பு தொடர்பாக விதிமுறைகளுக்கு அமைய பொது நன்மைக்காகவே நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தனிப்பட்ட எவருக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் நோக்கத்தில் எடுக்கப்படுவதில்லை.

.........................................................................................................................................................
.........................................................................................................................................................
.........................................................................................................................................................
.........................................................................................................................................................
.........................................................................................................................................................
.........................................................................................................................................................
.........................................................................................................................................................
.........................................................................................................................................................

## 19.3 ஒருவிடயம் தொடர்பாக பலவற்றை வாசித்தல்.

உங்கள் ஆசிரியர் உங்களுக்கு ஏதாவது ஒரு விடயத்தை கற்பித்தால், அவ்விடயத்தைப் பற்றிய மேலும் விபரங்களை நீங்களாகவே பல்வேறு நூல்களிலும் தேடிக் கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் ஊரில் வாசிகசாலை, நூல்நிலையம் என்பன உள்ளனவா? உங்கள் பாடசாலை நூல் நிலையத்தை உபயோகிக்க கற்றுக் கொள்ளுங்கள். நூல்நிலையத்தில் இருக்கும் நூலகர் உங்களுக்கு இதில் உதவி செய்வார். "கண்டதும் கற்கப் பண்டிதனாவான்" என்னும் பழமொழியை நீங்கள் அறிவீர்களல்லவா? இயலுமானவரை பாடப்புத்தகங்களை மட்டுமல்லாது, ஏனைய புத்தகங்களையும் வாசிக்க முயற்சி செய்யுங்கள்.

சில பழமொழிகளையும் கருத்துக்களையும் பார்ப்போம்.

1. அடாது செய்தவன் படாது படுவான்.
   தீயவை செய்தோர் துன்புறுவர்.

2. ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு
   கோபம் அறிவைக் கெடுக்கும்.

3. ஆறிலும் சாவு நூறிலும் சாவு
   வாழ்வு நிலையற்றது.

4. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
   ஒற்றுமை நலம் தரும்.

5. சிறு துளி பெரு வெள்ளம்.
   சிறுகச் சேமித்தால் பெரும் பணம் வரும்.

## 19.4 தகவல்களைத் திரட்டுவதற்காக வாசித்தல்.

வாசிக்கும் பழக்கம் தகவல்களைத் திரட்ட உதவியாக இருக்கும். உதாரணமாக உங்களது ஆசிரியர் விளையாட்டுகளைப் பற்றி கற்பிக்கும் போது உலகில் நடக்கின்ற பெரும் விளையாட்டு போட்டிகளைப் பற்றிய விபரங்களை அறிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள்.

உதாரணம்:- ஒலிம்பிக் விளையாட்டு போட்டி
சாவ் விளையாட்டு போட்டி
உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி

## 19.5 குறிப்பிட்ட விடயத்தின் குறைவு நிறைவுகளை அறிவதற்காக வாசித்தல்

கீழ்க்காணும் இரண்டு செய்யுள்களையும் வாசித்து அவற்றிலுள்ள விடயங்கள் பற்றிய உங்களது விமர்சனத்தை கீறிட்ட இடத்தில் எழுதுக.

**1. சாதி இரண்டு ஒழிய வேறில்லைச் சாற்றுங்கால்**
**நீதி வழுவா நெறி முறையில் - மேதினியினில்**
**இட்டார் பெரியார் இடாதார் இழிகுலத்தோர்**
**பட்டாங்கி லுள்ள படி.**

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

**2. ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்**
**மாண்டார் வருவரோ மாநிலத்தீர் - வேண்டா**
**நமக்குமது வழியே நாம் போமளவும்**
**எமக்கென்னென் றிட்டுண்டிரும்.**

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

## 19.6 அகராதியைப் பயன்படுத்தும் பழக்கத்தை ஏற்படுத்துதல்

சில புதிய சொற்களை இனங்கண்டு அட்டவணைப்படுத்துங்கள்.

| | | |
|---|---|---|
| மன்னிப்பு | பாசறை | போர்த்துக்கீசர் |
| நன்கொடை | அறிவாளி | பொதுச்சொத்து |
| வரவேற்பு | ஓடியற்கூழ் | தொண்டு |
| விருந்துபசாரம் | அமைச்சர் | தொழிற்சாலை |
| தலைவாசல் | கானகம் | பொல்லாங்கு |
| நஷ்டஈடு | சேய்மை | தானதருமம் |
| காப்புறுதி | மரப்பொந்து | மருத்துநீர் |
| காற்றோட்டம் | ஐரோப்பா | கைவிசேடம் |

மேலே காணப்படும் சொற்களின் பொருளை அறிய வேண்டுமாயின் தமிழ் அகராதியில் பார்த்து அறிந்து கொள்ளலாம். அகராதிகள் பல உள்ளன. சொற்களை அகர வரிசைப்படி ஒழுங்குபடுத்தி அகராதிகள் ஆக்கப்படுகின்றன. அகராதியொன்றின் சில பகுதிகள் கீழே உள்ளன.

### கழகத் தமிழ் அகராதி

அகசை     உ.     அகண்டம்

அகங்கரித்தல் - அகங்காரங் கொள்ளுதல், கர்வங் கொள்ளல். [த்தல்.
அகங்களிப்பு - மனவெழுப்பு, அகங்களி
அகங்களித்தல் - மனமகிழ்தல், மனமதர்த்தல். [உள்ளின்பம்.
அகங்களிப்பு - மனமகிழ்வு, உட்களிப்பு,
அகங்காரக்கிரந்தி - சமுசாரபந்தம், ஆணவமறைப்பு, மாயாபாசம், மும்மலத் தொடக்கு.
அகங்காரசைதன்னியவாதி - விஷயவியாபாரமாயிருக்கும் பிராணாதிகளையுக் கின ஆன்மாவென்னும் ஞானத்தினுலே அதனையறிந்து அத்தத்துவமடைதலே மோக்ஷமென்னும் மதத்தன்.
அகங்காரதத்துவம் - முப்பத்தாறு தத்துவங்களில் ஒன்று.
அகங்காரத்திரயம் - முக்கிய அகங்காரம், அமுக்கிய அகங்காரம், முக்கியாமுக்கிய அகங்காரம் என மூன்று.
அகங்காரம் - அகந்தை, உட்கரணம் நான்கினுள் ஒன்று, கர்வம், பிறவிக்குமூலம் அல்லது வித்து. [வாதிப்பவன்
அகங்காரவாதி - மனமே ஆன்மாவென்று
அகங்காரவிர்த்தி - யானென்னும் வடிவு ஞானம்.
அகங்காரான்ம ஞானம் - அகங்காரமே ஆன்மாவெனக்கொள்ளும் அறிவு.
அகங்காரான்மவாதி - அகங்காரத்துவமே ஆன்மாவென்று வாதிக்குமொரு சேதனன்.
அகங்காரி - செருக்குடையவன், கர்வி.
அகங்காழ் - அகக்காழ்.
அகங்கிரகத்தியானம் - சொரூபத்தைத் தனக் கபேதமாகச் சிந்தித்தல்.
அகங்கிரகோபாசனை - தானே தெய்வமென்று பாவித்துச்செய்யுமுபாசனை.
அகங்கிருதன் - அகங்காரமுடையவன், கர்வமுடையவன்.
அகங்கிருதி - அகவிகாரம், அகங்காரத்துவம், செருவம், செருக்கு.
அகங்கை - உள்ளங்கை.
அகசன் - கேது.
அகசியக்காரன் - விதூஷகன்.
அகசியக்கூத்து - பகடிக்கூத்து.
அகசியம் - ஆசியம், வேடிக்கை.
அகசு - பகல், பொழுது.
அகசை - பார்வதி, மலையிற்பிறந்தவள்.

அகச்சதநாதுவித்தசமாதி - ஆறு சமாதிகளில் ஒன்று.
அகச்சந்நானுவேதம் - அகச்சந்நானுவித்தசமாதி, அறு சமாதிகள் ஆதியொன்று. [ம்.
அகச்சமயம் - சைவசமயத்தினுட்சமய
அகச்சுட்டு - சொல்லகத்துறுதனிலையாயமைந்து நிற்குஞ் சுட்டு. [னம்.
அகச்சுவை - காடகரசத்தொன்று, ஞா
அகடச்சக்கரம் - உதரபந்தனமென்னு மணி. [ஸ்ரங்கு.
அகடம் - அநீதி, வித்தியாகரணம், பொல்
அகடவிகடம் - அபாயம், இரண்டகம், தட்டொற்று, வஞ்சகம், குறும்பு.
அகடனம் - கேடு, செய்யப்படாதது.
அகடன் - அவ்விடன், நீதியில்லாதவன்.
அகடிதகடனா - மாயாசரீரஞ்செய்தல்.
அகடிதகடனாசமர்த்தன் - செய்தற்கரியதைச் செய்ய வல்லவன்.
அகடிதம் - கைகூடுவதற்கரியது.
அகடியம் - அநீதி.
அகடு - உள்ளீர், நடுப்பக்கம், பொல்லாங்கு, மேடு, வயிறு. [மை.
அகடூரம் - கொடுமையின்மை, சோறு
அகடேரி - பாம்பு.
அகட்டுத்தே - விநாயகன்.
அகணம் - கணியாதது, இலகு.
அகணி - உள், தடுக்காய், சுக்கிரப்புராணி நஞ்சு, தெங்கு, பனை முதலியவற்றின் நார், நஞ்சை, மருதநிலம், வயல்.
அகணித பஞ்சாங்கம் - அலகிடாது சொல்லும் பஞ்சாங்கம்.
அகணிதபஞ்சாங்கி - கணியாதபஞ்சாங்கஞ்சொல்வோன். [ணிதம்.
அகணிதம் - கணிக்கப்படாதது, மனக்க
அகணை - அருகு.
அகண்டகம் - முள்ளில்லாதது.
அகண்டசுருதி - விரிவாய்ப்பொருளுணர்த்தும் வேதம்.
அகண்டஞானம் - பரிபூரணஞானம்.
அகண்டத்துவம் - எதனுலும்பின்னப்படாதிருக்குந்தன்மை.
அகண்டபதம் - பிரமபதம், பரமபதம்
அகண்டபரிபூரணம் } எங்கும் நிறைந்
அகண்டபூரணம் } திருத்தல்.
அகண்டம் - அபின்னம், எல்லாம், கண்டிக்கப்படாதது, சால தேசகால்வஸ்துவி

## 20. கேட்டல்

**வினாக்களுக்கு விடை எழுதுந்திறனை பெறுதல்.**

### 20.1 ஒத்த கருத்துச் சொற்கள், எதிர்க் கருத்துச் சொற்கள் முதலியன.

சில ஒத்த கருத்துள்ள சொற்களை அறிந்து கொள்ளுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| உழவர் | - கமக்காரர் | சொண்டு | - உதடு |
| வைத்தியர் | - மருத்துவர் | பாணம் | - அம்பு |
| அரசர் | - மன்னர் | பிரயோசனம் | - பயன் |
| ஆசிரியர் | - உபாத்தியாயர் | வணக்கம் | - தொழுகை |
| முனிவர் | - தவத்தோர் | சூரியன் | - ஆதவன் |
| பெற்றோர் | - ஈன்றோர் | வீடு | - மனை |
| நண்பர் | - தோழர் | நகைப்பு | - சிரிப்பு |
| அலுவலர் | - ஊழியர் | உண்மை | - மெய் |
| இளைஞர் | - வாலிபர் | மாதம் | - திங்கள். |
| கணவர் | - புருஷர் | ஆகாயம் | - வானம் |
| மாதா | - தாய் | நிலா | - மதி |
| ஆணை | - கட்டளை | ஆசனம் | - இருக்கை |
| ஆவி | - உயிர் | குடிகள் | - பிரஜைகள் |
| இன்னல் | - துன்பம் | எளியவர் | - வறியவர் |
| உறக்கம் | - நித்திரை | உறவினர் | சொந்தக்காரர் |
| கானகம் | - காடு | களித்திடுவார் | - மகிழ்ந்திடுவார் |
| சங்கதி | - சமாச்சாரம் | சூரியன் | - தினகரன் |
| அடர்த்தி | - செறிவு | சோகம் | - துயரம் |
| அரசன் | - மன்னன் | சிந்தனை | - நினைவு |
| ஈகை | - கொடை | தழும்பு | - அடையாளம் |
| களங்கம் | - மாசு | தாரகை | - நட்சத்திரம் |
| கனிகள் | - பழங்கள் | துயில் | - நித்திரை |
| முதல் | - தொடக்கம் | பண்ணை | - தோட்டம் |
| உத்தியோகத்தர் | - அலுவலர் | பாவை | - பெண் |
| மதலை | - குழந்தை | வண்ணம் | - அழகு |
| மனை | - வீடு | புனிதம் | - தூய்மை |
| அச்சம் | - பயம் | விலங்கு | - மிருகம் |

சில எதிர்ப்பொருட் சொற்களை அறிந்துகொள்ளுங்கள்.

| | |
|---|---|
| இன்பம் | - துன்பம் |
| ஒற்றுமை | - வேற்றுமை |
| குற்றவாளி | - சுத்தவாளி |
| கோழை | - வீரன் |
| உறக்கம் | - விழிப்பு |
| அண்மை | - சேய்மை |
| இரகசியம் | - பரகசியம் |
| முதல் | - இறுதி |
| நண்பர் | - பகைவர் |
| சிறிய | - பெரிய |
| நன்மை | - தீமை |
| கேள்வி | - பதில் |
| மரியாதை | - அவமரியாதை |
| அன்பு- வன்பு | கொந்தளிப்பு |
| மத்தியில் | - ஓரத்தில் |
| சோம்பல் | - சுறுசுறுப்பு |
| தலைவன் | - தலைவி |
| நடிகன் | - நடிகை |
| சேவகன் | - சேவகி |
| அரசன் | - அரசி |
| சாதகம் | - பாதகம் |
| சிலர் | - பலர் |
| சோம்பல் | - சுறுசுறுப்பு |
| மயக்கம் | - தெளிவு |
| தொடக்கம் | - முடிவு |
| தோழன் | - தோழி |
| ஏழை | - செல்வன் |
| பொய் | - மெய் |
| துன்பம் | - இன்பம் |

| | |
|---|---|
| ஏழை | - செல்வர் |
| நல்லவர் | - கெட்டவர் |
| இளமை | - முதுமை |
| இகழ்தல் | - புகழ்தல் |
| ஏற்றம் | - இறக்கம் |
| ஐயம் | - தெளிவு |
| குற்றவாளி | - சுத்தவாளி |
| உயரம் | - பதிவு |
| மூடி | - திறந்து |
| வாழ்க | வீழ்க |
| எழுந்தார் | - இருந்தார் |
| பென்னம்பெரிய | - சின்னஞ்சிறிய |
| முதல் | - கடைசி |
| | - அமைதி |
| சிலர் | - பலர் |
| செல்வன் | - செல்வி |
| முட்டாள் | - புத்திசாலி |
| விருப்பு | - வெறுப்பு |
| வெற்றி | - தோல்வி |
| நீதி | - அநீதி |
| ஞாபகம் | - மறதி |
| திரவம் | - திண்மம் |
| நீதி | - அநீதி |
| நம்பிக்கை | - அவநம்பிக்கை |
| அமைதி | - குழப்பம் |
| பாட்டன் | - பாட்டி |
| இல்லை | - உண்டு |
| காலை | - மாலை |
| வந்தது | - போனது |

## 20.1 ஒரு பொருள் தரும் பல சொற்கள், பல பொருள் தரும் ஒரு சொல்

ஒரு பொருள் தரும் பல சொற்கள்:

ஒரே பொருளைத் தரும் பல சொற்கள் உள்ளன. உதாரணமாக அம்மா சோறு சமைத்தாள் என்பதை தாய் சோறு சமைத்தாள் என்றும் மாதா சோறு சமைத்தாள் என்றும்

அம்மா அன்னம் ஆக்கினாள் என்றும் எழுதலாம். இவ்வாறு ஒரே பொருளைத் தரும் பல சொற்களுள் சிலவற்றை பார்ப்போம்.

| | | |
|---|---|---|
| அம்புலி | - | நிலா, சந்திரன், மதி |
| சூரியன் | - | கதிரவன், வையோன், பகலவன், ஞாயிறு |
| உடம்பு | - | உடல், தேகம், சரீரம், மெய் |
| குற்றம் | - | தவறு, பிழை |
| அரசன் | - | மன்னன், கோன், காவலன் |
| தந்தை | - | பிதா, அப்பா, தகப்பன் |
| கட்டளை | - | ஆணை, ஏவல், சட்டம் |
| பணி | - | கடமை, தொண்டு, ஊழியம் |
| பாடல் | - | பாட்டு, கீதம், கானம் |
| பூமி | - | பார், உலகம், ஞாலம் |
| மகிழ்ச்சி | - | சந்தோசம், இன்பம், குதூகலம் |
| கவலை | - | துன்பம், துயரம், வேதனை |
| அன்பு | - | இரக்கம், கருணை, பாசம் |
| ஆசிரியர் | - | குரு, உபாத்தியாயர், ஆசான் |
| கோபம் | - | சீற்றம், ஆத்திரம், சினம் |
| அணி | - | ஆபரணம், பணி, இழை |
| ஆகாயம் | - | விசும்பு, விண், வானம் |
| நூல் | - | புத்தகம், ஏடு, பனுவல் |
| மகளிர் | - | பெண், அரம்பை, தையல் |
| வயல் | - | களனி, செறு, பழமை |
| வேதம் | - | மறை, சுருதி, |

பல பொருள் தரும் ஒரு சொல்

| | | |
|---|---|---|
| அளி | - | வண்டு, கொடு |
| அறை | - | வீட்டின் ஒருபகுதி, அடி (கன்னத்தில் அடி) |
| அணை | - | வரம்பு, அணைத்தல் |
| அரவம் | - | பாம்பு, ஒலி (சத்தம்) |
| ஆடு | - | ஒரு மிருகம், (நடனம்) ஆடுதல் |
| ஆடி | - | ஒரு மாதம், கண்ணாடி |
| ஆணை | - | ஆட்சி, கட்டளை |
| ஆறு | - | ஓரெண், நதி |
| ஆசனம் | - | இருக்கை, மூலம் |

| | | |
|---|---|---|
| இழை | - | ஆபரணம். (பாய்) முடைதல் |
| இரை | - | உணவு, ஒலி செய் |
| இறை | - | கடவுள், (நீர்) இறைத்தல் |
| இமை | - | கண்ணிமை, கண்ணை மூடித் திறத்தல் (இமைத்தல்) |
| இசை | - | புகழ், உடன்படு |
| உடை | - | ஆடை, தகர்த்தல் |
| உடல் | - | உடம்ப, கோபி |
| உலை | - | உலைக்களம், வருத்து |
| உரம் | - | பசளை, வலிமை |
| ஊர் | - | கிராமம், நகர்ந்து செல் |
| ஊறு | - | கசிதல், காயம், கெடுதல் |
| ஊண் | - | சாப்பாடு, இறைச்சி |
| எள் | - | இகழ், தானியம் |
| ஏறு | - | எருது, மேலே செல் |
| ஒளி | - | வெளிச்சம், மறைதல் |
| ஒற்று | - | உளவு, ஒற்றியெடு |
| கரி | - | யானை, அடுப்புக்கரி |
| கடி | - | விரைவு, பல்லாற்கடித்தல் |
| கல் | - | மலை, படி, தோண்டு |
| கனி | - | பழம், இளகு |
| கா | - | சோலை, காவல் செய் |
| குடி | - | குலம், பருகு |
| கூடு | - | பறவைக் கூடு, சேர் |
| கேள் | - | உறவு, வினவு |
| பாடு | - | துன்பம், பாடு |
| மடி | - | சோம்பல், பசுவின் மடி, இறத்தல் |
| ஆடி | - | ஒரு மாதம், ஆடினாள், கண்ணாடி |
| மறை | - | வேதம், மறைத்து வை |
| வஞ்சி | - | ஒரு கொடி, வஞ்சனை செய் |

## 20.3 சொற்களைச் சேர்த்தும் சொற்றொடர்களைப் பிரித்தும் எழுதுதல்.

சேர்த்து எழுதுதல். உச்சரித்து வாசியுங்கள்.

1. ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று
2. இரண்டு + இரண்டு = இவ்விரண்டு

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | மூன்று | + மூன்று | = | மும்மூன்று |
| 4. | அ | + உயிர் | = | அவ்வுயிர் |
| 5. | எ | + உயிர் | = | எவ்வுயிர் |
| 6. | நீ | + அறி | = | நீயறி |
| 7. | எ | + நாடு | = | எந்நாடு |
| 8. | மா | + காய் | = | மாங்காய் |
| 9. | ஒரு | + இடம் | = | ஓரிடம் |
| 10. | மணி | + ஓசை | = | மணியோசை |
| 11. | பனை | + ஓலை | = | பனையோலை |
| 12. | பல் | + பொடி | = | பற்பொடி |
| 13. | பலா | + பழம் | = | பலாப்பழம் |
| 14. | இருப்பு | + இடம் | = | இருப்பிடம் |
| 15. | பொன் | + மணி | = | பொன்மணி |
| 16. | ஆதி | + ஒருவன் | = | ஆதியொருவன் |
| 17. | கல் | + தூண் | = | கற்றூண் |
| 18. | மூன்று | + தமிழ் | = | முத்தமிழ் |
| 19. | எட்டு | + கால் | = | எட்டுக்கால் |
| 20. | வெற்று | + இடம் | = | வெற்றிடம் |

பின்வருவனவற்றைச் சரியாகச் சேர்த்து எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| வயிறு | + பெரிது | = | ........................................ |
| கிழக்கு | + கடல் | = | ........................................ |
| பொன் | + தீது | = | ........................................ |
| வாழை | + குலை | = | ........................................ |
| பற்றை | + காடு | = | ........................................ |
| பூ | + சொரியும் | = | ........................................ |
| கிளி | + அலகு | = | ........................................ |
| துயர் | + அறிந்து | = | ........................................ |
| பதில் | + அளித்த | = | ........................................ |

பின்வரும் சொற்கள் பிரித்து எழுதப்பட்டிருக்கும் முறையைப் பாருங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | எலிக்குஞ்சு | = எலி | + குஞ்சு |
| 2. | எந்தக்கடை | = எந்த | + கடை |
| 3. | பனையோலை | = பனை | + ஓலை |
| 4. | பூவிதழ் | = பூ | + இதழ் |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | ஆற்றுவழி | = ஆறு | + வழி |
| 6. | முட்புதர் | = முள் | + புதர் |
| 7. | எட்டுக்கால் | = எட்டு | + கால் |
| 8. | பலாப்பழம் | = பலா | + பழம் |
| 9. | கற்றூண் | = கல் | + தூண் |
| 10. | பொன்னணி | = பொன் | + அணி |
| 11. | தென்னையடி | = தென்னை | + அடி |
| 12. | மேனாடு | = மேல் | + நாடு |
| 13. | மண்ணரிப்பு | = மண் | + அரிப்பு |
| 14. | மெய்யுரை | = மெய் | + உரை |
| 15. | மரக்கிளை | = மரம் | + கிளை |
| 16. | முட்செடி | = முள் | + செடி |
| 17. | கற்பாறை | = கல் | + பாறை |
| 18. | சோற்றுப்பானை | = சோறு | + பானை |
| 19. | புற்றரை | = புல் | + தரை |
| 20. | கடற்கரை | = கடல் | + கரை |

பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

மிளகாய்ச்செடி
வண்டிச்சக்கரம்
புதுப்பானை
நீளக்கயிறு
குளிர்காலம்
அறநெறி
நாயொடியது
பசுக்கன்று

## 20.4 பந்தி, பாடல், கதை ஒன்றினை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுதல்.

பின்வரும் பந்தியை வாசித்து கீழேயுள்ள வினாக்களுக்கு விடை தருக.

கரஆண்டு பங்குனி மாதம் 16ம் நாள் (அஃதாவது 1892ம் ஆண்டு மார்ச் மாதம் 29ம் திகதி) ஆண்குழந்தை ஒன்று பிறந்தது. அதற்கு அவர்கள் மயில்வாகனன் எனப் பெயரிட்டார்கள். இக்குழந்தை வளர்ந்து கல்வியில் சிறந்த தேர்ச்சி பெற்று மக்களுக்குத் தொண்டு செய்வதற்காக துறவியாக மாறியது. அக்கழந்தையே விபுலானந்த அடிகள் அவார்.

1. விபலானந்த அடிகளின் இளமைப் பெயர் யாது?

.....................................................................................................................

2. அவர் பிறந்த ஊர் எது?

.....................................................................................................................

3. அவரின் பெற்றோர்களின் பெயர்கள் யாவை?

.....................................................................................................................

4. இவர் பிற்காலத்தில் எவ்வாறு விளங்கினார்?

.....................................................................................................................

5. இவர் பிறந்த ஊர் எம் மாகாணத்தில் அமைந்துள்ளது?

.....................................................................................................................

பின்வரும் பாடலை வாசித்து கீழேயுள்ள வினாக்களுக்கு விடை தருக.

**மாமணியோ முத்தோ**
**மரகதமோ மன்னவர்தம்**
**தாமு முடிமீது**
**தயங்கும் வயிரமதோ**

**கற்கண்டு சீனி**
**கனியுங் கனிந்தொழுகு**
**சொற்கொண்டு எமக்குச்**
**சுகமளிக்கும் பூங்குயிலோ**

1. மரகதமும் முத்தும் யாருக்கு உவமையாகக் கூறப்பட்டது?

.....................................................................................................................

2. கற்கண்டு, சீனி என்பன எதிலிருந்து உண்டாக்கப்படுகின்றன?

.....................................................................................................................

3. மன்னவர் என்ற சொல்லிற்கு வேறு இரண்டு சொற்கள் தருக.?

.....................................................................................................................

4. 'கனி' என்பதன் எதிர்ச்சசொல்லைத் தருக?

.................................................................................................................................

5. இப்பாடலைப் பாடுபவர் யார்?

.................................................................................................................................

## கதைகள், கட்டுரைகள், உரைநடைப்பகுதிகள்

கதை

### புத்திமான் பலவான்

கோபாலன் புத்தி உள்ள சிறுவன். அவன் ஒரு நாள் கடற்கரையில் விளையாடினான். அப்போது கடலில் ஒரு சிறிய சாடி மிதந்து வந்தது. அதைக் கோபாலன் எடுத்தான். அதன் மூடியை ஆவலோடு திறந்தான். உள்ளிருந்து உருவம் ஒன்று வெளியே வந்தது.

அந்த உருவம் வளர்ந்து வளர்ந்து பெரிய அரக்கன் ஆனது. கோபாலன் வியப்பு அடைந்தான். "நீ யார்"? என்று கேட்டான். அரக்கன், "நான் உன்னை விழுங்க வந்தேன்" என்று சொல்லிக்கொண்டு கிட்ட நெருங்கினான்.

கோபாலன் அஞ்சாமல், "அடே, இவ்வளவு பெரியவனான நீ இந்தச் சிறிய சாடிக்குள் எப்படி இருந்தாய்? ஒரு முறை இருந்து காட்டு பார்ப்போம்" என்றான். அரக்கன் சிறியவனாகிச் சாடியினுள் நுழைந்தான். உடனே கோபாலன் அதனை இறுக்கி மூடிக் கடலில் எறிந்தான்.

### சுப்பிரமணிய பாரதியார்

தென்னிந்தியாவிலுள்ள எட்டய புரத்திலே சுப்பிரமணிய பாரதியார் பிறந்தார். அவருடைய தந்தையாரின் பெயர் சின்னச்சாமி ஐயர். தாயாரின் பெயர் இலக்குமி அம்மாள். பாரதியார் இளமையிலேயே தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்தி ஆகிய மொழிகளைக் கற்றார். இம்மொழிகளுள் அவருக்குத் தமிழிலேயே மிக விருப்பம் இருந்தது.

இவரின் திறமையைக் கண்டு சமஸ்கிருத புலவர்கள் இவருக்கு "பாரதி" என்ற பட்டத்தைச் சூட்டினார்கள். இவர் ஓர் சிறந்த புலவரானார். இவர் எத்தனையோ வகையான பாடல்களைப் பாடினார். ஓடி விளையாடு பாப்பா, அச்சமில்லை அச்சமில்லை என்ற பாடல்கள் அவற்றுள் சிலவாகும்.

பாரதியார் மெலிந்த உருவம் உடையவர். தடித்த மேற்சட்டையும், தலைப்பாகையும் அணிந்திருப்பார்.

1. பாரதியார் பிறந்த ஊர் எது?

....................................................................................................

2. அவரது பெற்றோர் யார்?

....................................................................................................

3. பாரதியார் கற்ற மொழிகள் எவை?

....................................................................................................

4. பாரதியார் எத்தகைய உருவம் உடையவர்?

....................................................................................................

5. அவர் பாடிய பாடல்கள் 2 தருக?

....................................................................................................

பயிற்சி

தடித்த எழுத்திலுள்ள சொல்லுக்கு ஒத்தகருத்துள்ள சொல்லின் கீழ்க் கோடிடுக.

1. இன்று அதிகாலையில் **சூரியன்** உதித்தது.
   (சந்திரன், ஆதவன், வைரவன்)

2. நாம் எப்போதும் **தோழர்களாக** இருப்போம்.
   (தவத்தோர், சிநேகிதர், அன்பர்)

3. எமது **தாய்** எம்மைக் கண் போலக் காப்பார்.
   (பிதா, நல்லவர், மாதா)

4. குழந்தைகள் **களங்கம்** இல்லாதவர்கள்.
   (அசுத்தம், மாசு, களவு)

5. அந்தப் **பெண்** மிகமிக நல்லவள்.
   (பாவை, அரவை, அம்மா)

பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துள்ள சரியான சொல்லைத் தருக.

1. பகைவன் - ..........................................................................

2. ஊழியர் - ..........................................................................

3. நேரம் - ..........................................................................

4. பூமி - ..........................................................................

5. மலை - ..........................................................................

6. கொடை - ..........................................................................

7. பழம் - ..........................................................................

8. செறிவு - ..........................................................................

பின்வரும் சொற்களுக்கேற்ற ஒரு சொல்லை எழுதுக

சில்லு, வட்டம் - ..........................................................................

காலணி, மலை - ..........................................................................

மதில், மறியல் - ..........................................................................

கறையான், போ - ..........................................................................

ஒளி, ஆராய்ந்து பார் - ..........................................................................

ஆட்டுக் கடா, உடைத்து விடு - ..........................................................................

தண்டு, வெட்டு - ..........................................................................

விலங்கு, பாசம், கட்டுதல் - ..........................................................................

விளக்கின் (திரி), அலைந்து செல் - ..........................................................................

உடுக்கை, மனம் பதை - ..........................................................................

துணிவு, ஆடை - ..........................................................................

புகழ், வெட்டு - ..........................................................................

மாதம், தை - ..........................................................................

அணிகலன், சிரி - ..........................................................................

நேசம், தேடு - ..........................................................................

முனை, கூர்ந்து நோக்கு - ..........................................................................

மூங்கில், கொழு - ..........................................................................

ஆசை, பிடி - ..........................................................................

திங்கள், அளவீடு - ..........................................................................

கோடு, மலை - ..........................................................................

பலம், நேர் - ..........................................................................

பாதை, வழிதல் - ..........................................................................

நாமம், பெயர்ந்துசெல் - ..........................................................................

பிரித்தெழுதுக.

மரஞ்செடி

முட்செடி

அவித்துக் கொடுத்தாள்

கோயில் மணி

ஆறரை

பதிலளித்த

துயரறிந்து

தாழம்பூ

மணியோசை

போர்த்தேங்காய்

பின்னேரம்

தாளம்பூ

பந்தாட்டம்

ஒவ்வொன்று

நெடுந்தூரம்

இனிப்புப்பண்டம்

கற்றீது

கோலாட்டம்

அடிச்சுவடு

திரைச்சீலை

கற்பூரச்சட்டி

சிலந்திவலை

மலைக்குகை

பேரென்ன

வாலையாட்டியது

பாலன்னம்

பல்லுடைந்தது

துயரறிந்து

அவரல்லவா

நாடகமாடி

மற்றொரு

தவக்கோலம்

சேர்த்தெழுதுக.

ஆல் + இலை - ..........

பேர் + என்ன - ..........

வால் + ஆட்டியது - ..........

ஓடி + பிடித்து - ..........

குப்பை + கூடை - ..........

உனக்கு + தெரியும் - ..........

அழுக்கு + துணி - ..........

துலா + கொடி - ..........

போர் + களம் - ..........

கங்கை + கரை - ..........

ஆணை + இட்டான் - ..........

பாவை + பிள்ளை - ..........

வெண்மை + தாமரை - ..........

பட்டு + பாவாடை - ..........

ஆறு + மணல் - ..........

நீதி + அற்றது - ..........

கூழை + கலக்கி - ..........

எஞ்சி + உள்ளது - ..........

மருந்து + அடிக்கு - ..........

எங்கு + எங்கு - ..........

பொம்மை + கடை - ..........

படை + தலைவன் - ..........

பத்து + ஆறு - ..........

மலை + பகுதி - ..........

படை + பளம் - ..........

போர் + களம் - ..........

ஆடு + குட்டி - ..........

21. கேட்டல்

**தகவல்களைத் திரட்டுவதற்காக செவிமடுத்தல்.**

## 21 . 1 செவிமடுக்கும் விடயக்கூறுகள் மூலம் பல்வேறு தகவல்களைத் திரட்டுதல்.

பிள்ளைகளே, உங்கள் வகுப்புத் தமிழ்ப் பாடத்தில் வரும் சிறு உரையாடலின் ஒரு பகுதியைப் பாருங்கள்.

அப்பா - "என்ன பாலா, வரம்பிலே சறுக்கி விழுந்து விட்டாயா?"

பாலா - "ஆம் அப்பா"

அப்பா - "இவை உயரமான வரம்புகள், கவனமாக நடந்து வா"

பாலா - "ஏன் அப்பா, இப்படி உயரமாக வரம்புகளைக் கட்டியிருக்கிறார்கள்? உயரம் இல்லாமல் அகலமாகக் கட்டினால் என்ன? அகலமாகக் கட்டினால், கண்ணை மூடிக்கொண்டு ஓடிப் போகலாமே!"

அப்பா - "வயல் வரம்புகளை அகலமாகக் கட்டுவதில்லை, இப்படி உயரமாகத்தான் கட்ட வேண்டும் அப்பொழுதுதான் வயலில் நீர் நிறைந்து நின்று நெல் செழித்து வளரும்."

பாலா - "அப்படியா அப்பா?"

அப்பா - "ஆம் பாலா; ஔவைப் பாட்டியும் அப்படித்தான் சொல்லியிருக்கிறார்".

பாலா - "ஔவைப் பாட்டியா? அப்பா அவர் என்ன சொல்லியிருக்கிறார்?"

அப்பா - ஔவைப்பாட்டி ஒரு சிறந்த புலவர் அவர்தான் வரம்பை உயரமாகக் கட்டச் சொல்லி இருக்கிறார்.

### பாட்டுக்கொரு புலவன்

**பாட்டுக்கொரு புலவன் பாரதியடா - அவன்**
**பாட்டை பண்ணோடொருவன் பாடினானடா**
**கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனேயடா அவன்**
**கிறுக்கில் ஊறும் மொழி பொறுப்பாயடா.**

**தேனும் தினையும் பாலில் உண்ணலாமடா**
**திக்திக்கும் முக்கனியும்உண்ணலாம்டா**
**கானக் குழலிசையும் கேட்கலாமடா**
**உந்தன் கவி பாடுவதையும் கேட்கலாமடா**

**உள்ளம் தெளியும் ஒரு பாட்டிலேயடா**
**மிக ஊக்கம் பிறக்கும் ஒரு பாட்டிலேயடா**
**கள்வெறி கொள்ளுமோர் பாட்டிலேயடா**
**மிக்க கண்ணீர் தந்திடுமோர் பாட்டிலேயடா**

## நாம் சோதரர்

**அல்லா யேசு சிவன் மால் புத்தர்**
**அனைத்தும் ஒரு பொருளே - எமைப்**
**படைத்தவன் திருப்பெயரே**
**எல்லா உயிரும் இறைவனின் சேய்கள்**
**எனின் நாம் சோதரனே**
**இலை இனி ஓர் வேற்றுமையே.**

## நாட்டுப்பாடல்

ஆண் :- வெங்காயக் கூடு தூக்கி வீதிவழி போற பெண்ணே
சிங்கார நடை நடந்து சிரித்துக் கொண்டு போவதென்ன?

பெண் :- சங்கத்திலே நான் குடுத்து சல்லிக்காசு சம்பாதித்தேன்
தங்கத்திலே வளையல் வாங்கி என் கரத்தில் நான் அணிவேன்

ஆண் :- நைலோனும் வாங்கித் தாறன் நைலேசும் வாங்கித் தாறேன்.
கைலேஞ்சி வாங்கித் தாறேன் கால்சிலிப்பர் வாங்கித்தாறேன்.

பெண் :- அப்பன் அறிந்தால் உன்னை அடித்து நொருக்கிடுவான்.
முப்பத்திரண்டு பல்லை முழுசாகக் கட்ட வைப்பான்.

ஆண் :- ஆச்சியின்ரை அண்ணையெல்லோ ஆசையான உன்ரை தேப்பன்
நாச்சியார் உன்ரை ஆச்சி நல்ல மாமி எனக்குமல்லோ?

பெண் :- உண்ணானப் போகாதே உன்ரை ஆச்சியறிய
கண்ணானை எனக்குமல்லோ கலியாணம் பேசுகினம்.

ஆண் :- எங்கையடி பேசுகினம் எவனையடி பேசுகினம்
மங்களமாய் தாலிகட்ட மாப்பிள்ளை நானிருக்க.

பெண் :- அப்பன் ஏசினாலென்ன ஆச்சி ஏசினாலென்ன?
துப்பல் வரும் நேரத்துக்கே தூக்கிக்கொண்டு போயிடுவான்

ஆண் :- வெங்காயக் கூடு விற்க சங்கத்துக்குப் போகவேணும்
அங்கை பார் ஆச்சி வாறா இஞ்சாலை நானும் போறன்.

## குப்பத்துப் பெண்

**ஓ.......ஓ.......**
**கூடை மேலே கூடை வைச்சு**
**குப்பத்துக்குப் போற பெண்ணே**
**குப்பத்திலே பேஞ்ச மழை**
**யென் கண்ணே ரத்தினமே**
**கூடை நனையல்லே யென்**
**கண்ணே ரத்தினமே.**

**மத்தங்காப் பில்லு வெட்டி**
**மலையோரம் போற பெண்ணே**
**மலை மேலே பேஞ்ச மழை என்**
**கண்ணே ரத்தினமே உன்**
**மேனி நனையலேயே என்**
**கண்ணே ரத்தினமே**

**கோடரிக் கொண்டை போட்டு**
**கோயிலுக்குப் போற பெண்ணே**
**கோயிலிலே பேஞ்ச மழை என்**
**கண்ணே ரத்தினமே - உன்**
**கொண்டை நனையலேயே என்**
**கண்ணே ரத்தினமே.**

## 21.2 தொடர்பாடல் மூலம் தகவல்களைத் திரட்டுதல்.

ஒரே பாடசாலையில் கண்ணனும், மதனும் படிக்கிறார்கள். அவர்கள் இருவரும் சந்திக்கிறார்கள்.

கண்ணன் - ஹலோ மதன் இன்று பாடசாலைக்குச் சென்றாயா?

மதன் - ஆம், நீர் ஏன் பாடசாலைக்கு வரவில்லை?

கண்ணன் - எனக்கு சற்று வயிற்றுளைவு, அதனால்தான் வரவில்லை.

மதன் - அப்படியா? இப்போது சுகமா?

கண்ணன் - ஆம். வைத்தியரிடம் மருந்து எடுத்தேன். இப்போது சற்று சுகம்.

## 21.3 பொது நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதன் மூலம் தகவல் திரட்டுதல்.

மாணவர்களே, உங்களது பாடசாலையில் நடந்த விழாக்கள், கூட்டங்கள் ஆகியவற்றில் நடந்தேறிய விடயங்களை முறைப்படி அறிக்கைகளாக தயாரித்து பழகுங்கள். அவ்வாறே உங்கள் ஊரிலுள்ள மன்றங்களிலும் உங்களது பங்களிப்பைச் செலுத்துங்கள். அந்த நிகழ்ச்சிகளின் தகவல்களை மற்றொருவருக்கும் எடுத்துக் கூறுங்கள்.

## 21.4 மக்கள் தொடர்புச் சாதனங்கள் மூலம் தகவல்களைத் திரட்டுதல்.

தொடர்பு சாதனங்களான பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி ஆகியன வழங்கும் சமய நற்சிந்தனைகள், விழாக்கள் சம்பந்தமான நேர்முக வர்ணனைகள், சிறுவர்களுக்கான ஒலி - ஒளிபரப்புக்கள், கல்விச் சேவை ஒலி - ஒளிபரப்புக்கள், அறிவியல் தொடர்பான ஒலி - ஒளிபரப்புக்களை அவதானியுங்கள். அவற்றை மீண்டும் மீண்டும் நினைவு படுத்தி மற்றவர்களுக்குக் கூறுங்கள். இதன் மூலமும் கிரகித்தலை விருத்தி செய்யலாம்.

நீங்கள் தொலைக்காட்சியில் சுதந்திர தின நிகழ்ச்சிகள், கார்ட்டூன் படங்கள், சிறுவர் நாடகங்கள் போன்றவற்றைப் பார்த்திருப்பீர்கள் அல்லவா? இவை பற்றி ஏனையோருக்கும் விபரித்துக் கூறுங்கள், நீங்கள் கூறுபவற்றை அவற்றின் கருத்தும், உணர்வும் நன்கு தெளிவாகும் வகையில் தேவையான இடங்களில் சொற்களுக்கு அழுத்தம் கொடுத்தும், தரித்து நின்றும், தொனியை ஏற்றி இறக்கியும், முகபாவம், அபிநயம் என்பன காட்டியும், இசையுடன் பாடியும் செவிமடுத்தலை சுவை மிக்கதாக்குங்கள்.

மாணவர்கள் கேட்ட, பார்த்த, படித்த விடயங்களிலிருந்து தகவல்களைத் திரட்டுமாறு ஆசிரியர் அவர்களுக்குக் கூறினார். மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் எதுகை, மோனையும், ஓசை நயமும் பொருந்திய பாடல்களை பாடிக் காட்டி அவற்றை திருப்பி ஒப்புவிக்குமாறு கூறினார்.

பிள்ளைகளே, பின்வரும் பாடலை ஒருமுறை பார்த்துப் பாடுங்கள். பின்னர் மீண்டும் அதனை பார்க்காமல்பாடுங்கள்.

**சின்னச் சின்ன எறும்பு**
**சிங்கார எறும்பு**
**என்னை நீ விரும்பு**
**இதோ கையில் கரும்பு**

பின்வரும் கதையை படியுங்கள், பின் அக்கதையை உங்கள் மொழிநடையில் கூறுங்கள்.

**பூனைக் குட்டிகளின் ஏமாற்றம்**

ஒரு நாள் இரண்டு பூனைக்குட்டிகள் சண்டையிட்டுக்கொண்டு நின்றன. அப்பொழுது அந்தவழியால் நாய் ஒன்று வந்தது. அது "நீங்கள் ஏன் சண்டை செய்கிறீர்கள்?" என்று கேட்டது. அதற்குப் பூனைக் குட்டிகள் "எம்மில் எவர் வீரர் என்று அறியச் சண்டை செய்கின்றோம்" என்றன. "வீரனுக்கு என்ன பரிசு கிடைக்கும்? என்று நாய் கேட்டது. "இந்தப் பந்து எங்கள் அம்மா தந்தது. யார் வீரரோ, அவருக்கே இது உரியது" என்று அவை கூறின.

"ஓகோ, அதற்கு ஏன் சண்டை? இங்கிருந்து அந்த மரம் நிற்கும் இடம்வரை ஓடுங்கள் வென்றவருக்குப் பந்து உரியது" என்ற நாய் சொன்னது. பூனைக் குட்டிகள் அதன் சொல்லை நம்பி ஓடத் தொடங்கின.

நாய் பந்தைக் கௌவிக் கொண்டு மறு பக்கமாக ஓடியது. பூனைக் குட்டிகள் ஏமாற்றமடைந்தன.

## 22 பேசுதல்

**புதிய சொற்களை கையாண்டு சொற்களஞ்சியத்தை விருத்தி செய்தல்**

### 22.1 பரீட்சயமான சொற்களைப் பயன்படுத்திப் பேசுதல்.

1. கீழேயுள்ள இடைவெளிகளில் தரப்பட்ட சொற்களில் பொருத்தமானவற்றை நிரப்பி பந்தியை பூர்த்தியாக்குக.

மாணவர்கள், மீதிப்பேர், அக்கறை, கற்பிக்கின்றனர், ஆசிரியர்கள், ஒவ்வொரு, அமைந்துள்ளது, கலவன், மதிப்பும், கலந்துரையாடுவர்

எனது பாடசாலை தருமபுரம் என்னும் அழகிய ஊரில் 1........................................................... இது ஆண்களும், பெண்களும் பயிலும் ஓர் 2 ........................................................ பாடசாலை ஆகும். இதில் ஆண்டு ஒன்றுமுதல் ஆண்டு பத்து வரை வகுப்புக்கள் உண்டு. இங்கு மொத்தம் எண்ணூற்றி மூன்று 3 ........................................................ கல்வி பயில்கின்றனர். இதில் நானூற்றி அறுபது பேர் ஆண்களாவர். 4 ........................................................ பெண்களாவர். பாடசாலையில் ஓர் அதிபர், உப அதிபர், பதினொரு 5 ........................................................ கல்வி கற்பிக்கின்றனர். இவர்கள் எமது நலனில் மிகுந்த 6 ........................................................ கொண்டவர்கள். எமக்காக மிகவும் சிரமம் எடுத்துக் 7 ........................................................ நாமும் எமது அதிபர், ஆசிரியர்கள் மீது மிகுந்த

8 ..................................................... மரியாதையும கொணடுளளோம. 9 .......................................................
மாதமும் பெற்றோர் - ஆசிரியர் கூட்டம் நடைபெறும். எமது முன்னேற்றம் பற்றி பெற்றோரும் ஆசிரியர்களும் 10 ......................................................

2. கீழே காணப்படும் சொற்களில் உள்ள ஒத்த கருத்துச் சொற்களையும், எதிர்க்கருத்துச் சொற்களையும் வகைப்படுத்தி இட்டவணையை நிரப்புக

மறம், சுடுநீர், மூப்பு, உறக்கம், இளமை, வேகமாக, சிறமை, பிறப்பு, பன்னீர், உள்ளம், பொதுவாக, புறம், தண்ணீர், மரணம், சுறுசுறுப்பாக

| | ஒத்தசொல் | எதிர்ச்சொல் |
|---|---|---|
| 1. அகம் | ................................. | ................................. |
| 2. இறப்பு | ................................. | ................................. |
| 3. விரைவாக | ................................. | ................................. |
| 4. வெந்நீர் | ................................. | ................................. |
| 5. முதுமை | ................................. | ................................. |

வானம், உதயம், பூமி, காடு, வெளிச்சம், நிசப்தம், நாடு, கழி, வெறுப்பு, இருள் மாலை, குழப்பம், பயம், புஸ்பம், மதியம்

| | ஒத்தசொல் | எதிர்ச்சொல் |
|---|---|---|
| 6. வனம் | ................................. | ................................. |
| 7. காலை | ................................. | ................................. |
| 8. ஆகாயம் | ................................. | ................................. |
| 9. ஒளி | ................................. | ................................. |
| 10. அமைதி | ................................. | ................................. |

நேயம், தொன்மை, உலோபி, அழகிய, பிடி, சுத்தம், கொடையாளி, புதுமை, செழுமை, வன்பு, கஷ்டம், நட்பு, அசுத்தம், செல்வம், கோழை

| | ஒத்தசொல் | எதிர்ச்சொல் |
|---|---|---|
| 11. வறுமை | ................................. | ................................. |
| 12. பழமை | ................................. | ................................. |
| 13. அன்பு | ................................. | ................................. |
| 14. வன்மை | ................................. | ................................. |
| 15. தூய்மை | ................................. | ................................. |

## எதிர்ப்பொருட் சொற்கள்

அகம் - புறம்
அன்பு - வன்பு
அசல் - நகல்
அடி - முடி
அணுகல் - விலகல்
அண்மை - செய்மை
அந்தம் - ஆதி
அமைதி - குழப்பம்
அருமை - பெருமை
அடைப்பு - திறப்பு
ஆக்கம் - அழிவு
ஆசை - நிராசை
ஆண்டான் - அடிமை
ஆதரவு - நிராதரவு
ஆரம்பம் - முடிவு
இகம் - பரம்
இணக்கம் - பிணக்கம்
இம்மை - மறுமை
இயற்கை - செயற்கை
இலாபம் - நட்டம்
இளமை - முதுமை
இன்சொல் - வன்சொல்
ஈதல் - ஏற்றல்
ஈரம் - வரட்சி
ஈவார் - ஈயார்

உண்மை - பொய்
உதயம் - அஸ்த்தமனம்
உம்பர் - இம்பர்
உயர்வு - தாழ்வு
உருவம் - அருவம்
எரிதல் - அவிதல்
ஏறு - இறங்கு
ஐது - செறிவு
ஒருமை - பன்மை
ஒளி - இருள்
ஒற்றுமை - வேற்றுமை
ஒறுப்பு - மலிவு
கதி - நிர்க்கதி
கனவு - நனவு
கீர்த்தி - அபகீர்த்தி
குறுக்கு - நெடுக்கு
குறை - நிறை
கேடு - ஆக்கம்
சகுனம் - அபசகுனம்
சத்தம் - நிசத்தம்
சிறப்பு - இழிவு
சுமங்கலி - அமங்கலி
சுவர்க்கம் - நரகம்
சேய்மை - அண்மை
தெளிவு - கலக்கம்

பின்வருவனவற்றிற்கு எதிர்ப்பொருட் சொற்களை எழுதுங்கள்.

உயர்வு - 
வெண்மை - 
இன்சொல் - 
சூரியன் - 
தூரம் - 
தாளும் - 

உபகாரம் - 
உறவு - 
இயக்குதல் - 
ஏறுதல் - 
கடினம் - 
மாளிகை - 

| | | | |
|---|---|---|---|
| தூற்றுதல் | - | முடிவு | - |
| தோல்வி | - | ஆசிரியன் | - |
| ஒற்றுமை | - | ஏர் | - |
| தொன்மை | - | சுறுசுறுப்பு | - |
| இயற்கை | - | நாகரீகம் | - |
| மிடிமை | - | மெய் | - |
| ஈகை | - | கேட்டார் | - |
| ஊண் | - | தோழர் | - |
| பெருமை | - | பசு | - |
| கொடியவள் | - | நடனம் | - |
| தோல்வி | - | வானரம் | - |
| புதுமை | - | கிழவன் | - |
| கோழை | - | வெளியூர் | - |
| தூய்மை | - | புகழ் | - |
| பிரியம் | - | நியாயம் | - |
| சத்தம் | - | முதுமை | - |

### எதிர்ப்பாற் சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆண் | - | பெண் | ஆண் | - | பெண் |
| அடியான் | - | அடியாள் | கூனன் | - | கூனி |
| அப்பன் | - | அம்மை | குறவன் | - | குறத்தி |
| அரக்கன் | - | அரக்கி | சங்கரன் | - | சங்கரி |
| அழகன் | - | அழகி | தம்பி | - | தங்கை |
| ஆசிரியன் | - | ஆசிரியை | தந்தை | - | தாய் |
| ஆடவர் | - | பெண்டிர் | சேவகன் | - | சேவகி |
| இடையன் | - | இடைச்சி | சிற்றப்பன் | - | சின்னம்மை |
| ஆயன் | - | ஆய்ச்சி | தபுதாரன் | - | விதவை |
| இயக்கன் | - | இயக்கி | தம்பி | - | தங்கை |
| இரவலன் | - | இரவலள் | தாத்தா | - | பாட்டி |
| ஈஸ்வரன் | - | ஈஸ்வரி | திருடன் | - | திருடி |
| உத்தமன் | - | உத்தமி | திருவாளன் | - | திருவாட்டி |
| எஜமான் | - | எஜமாட்டி | தோழன் | - | தோழி |
| உழவன் | - | உழத்தி | நிபுணண் | - | நிபுணை |
| ஐயன் | - | ஐயை | பாணன் | - | பாடினி |
| ஒருவன் | - | ஒருத்தி | பாடகன் | - | பாடகி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கணவன் | - | மனைவி | பிதா | - | மாதா |
| அரசன் | - | அரசி | புத்திரன் | - | புத்திரி |
| கிழவன் | - | கிழவி | புதல்வன் | - | புதல்வி |
| கள்வன் | - | கள்ளி | புனிதன் | - | புனிதை |
| குமரன் | - | குமரி | பெருமான் | - | பெருமாட்டி |
| குயவன் | - | குயத்தி | பேரன் | - | பேத்தி |
| குருடன் | - | குருடி | மகன் | - | மகள் |
| குரு | - | குருத்தினி | மைத்துனன் | - | மைத்துனி |
| வேடன் | - | வேடுவிச்சி | வீரன் | - | வீராங்கனை |

## 22.3 தேவைகளுக்கேற்ப புதிய சொற்களைப் பயன்படுத்தல்.

தெளிவாகவும், சுவைபடவும் எழுதவும், பேசவும் இணைமொழிகள் பயன்படுத்தப்படுகின்றன அவற்றில் சிலவற்றைப் பார்போம்

| | |
|---|---|
| அக்கம் பக்கம் | அடக்கவொடுக்கம் |
| அரை குறை | அல்லும் பகலும் |
| அன்பும் அருளும் | ஆடல் பாடல் |
| ஆடிப்பாடி | ஆடி அசைந்து |
| ஆண்டான்அடிமை | ஆய்ந்தோய்ந்து |
| ஆற அமர | இசகு பிசகு |
| இடக்கு முடக்கு | இன்ப துன்பம் |
| இயலும் செயலும் | இசைவு பிசைவு |
| இளைத்துக் களைத்து | ஈகை இரக்கம் |
| ஈடும் எடுப்பும் | ஈயெறும்பு |
| ஈவிரக்கம் | உடை நடை |
| உயர்வு தாழ்வு | உயர்விழிவு |
| உருட்டும் புரட்டும் | உருண்டு திரண்டு |
| ஊண் உடை | உண் ஊக்கம் |
| ஊரும் பேரும் | எக்கச்சக்கமாய் |

## 22.4 முதல், நடு, இறுதி எழுத்துக்களை முதலெழுத்தாகக் கொண்டு சொற்களை உருவாக்கிப் பேசுதல்.

கீழே உதாரணத்தில் காட்டியவாறு, தரப்பட்ட சொற்கூட்டங்களின் முதல் எழுத்துக்கள், நடு எழுத்துக்கள், இறுதி எழுத்துக்கள் ஆகியவற்றை பயன்படுத்தி "அமைதி" என்னும் சொல்லை ஆக்குங்கள்.

| அ | மை | தி |
|---|---|---|
| அன்பு | மைனா | திரும்பு |
| அருகு | மையம் | திசை |
| அருமை | மைதிலி | திணை |
| அவை | மை | திகை |
| அசை | ................ | திகில் |
| அணை | ................ | திங்கள் |
| அலை | ................ | தியாகம் |
| அடை | ................ | திண்ணம் |
| அருள் | ................ | திக்கு |
| அமர் | ................ | திரிபு |
| அமைதி | ................ | திண்மை |
| அறை | ................ | திட்டம் |
| அறி | ................ | திடம் |
| அணி | ................ | திரு |
| அடவி | ................ | திலகம் |

கீழ்க்காணும் சொற்களின் முதல், நடு, இறுதி, எழுத்து என்பவற்றை கொண்டு சொற்கள் சிலவற்றை அமைக்குக.

**கொந்தளிப்பு உடற்பயிற்சி கல்வியறிவு சிரிப்பு**

............................ ............................ ............................

............................ ............................ ............................

............................ ............................ ............................

## 22.5 புதிய சொற்களை அட்டவணைப்படுத்திப் பேசுதல்.

நீங்கள், எதாவது புதியதொரு சொல்லை அறிந்து கொண்டால் அந்தச் சொல்லை உபயோகித்து உங்கள் நண்பர்களுடன் பேச முயற்சி செய்யுங்கள். அதனால் உங்களுக்கு மட்டுமல்ல உங்களது நண்பருக்கும் மிகுந்த நன்மை உண்டாகும். நீங்கள் அறியும் சொல்லைப் பற்றிய மேலும் விளக்கங்களைப் பெறுவதற்கு உங்களுடைய ஆசிரியரின் உதவியை நாடுங்கள்

# வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துதல்

## 23.1 பொதுத் தொடர்பு அறிவித்தல்களை சுயமாக வாசித்தல் – பெயர்ப்பலகைகள், விளம்பரங்கள், சுவரொட்டிகள்

கீழ்க்காணும் விளம்பர வரிகளுள் கீறிட்ட இடங்களை நிரப்புக.

1. பற்களின் வளத்தைப் பேணவும், பற்சூத்தை, வாய் நாற்றம் என்பவற்றிலிருந்து விடுபடவும் சிக்னல் .................................... பாவிக்கவும்.

2. நங்கையர் விரும்பும் நகைகளுக்கு லலிதா ............................ மாளிகைக்கு விஜயம் செய்யுங்கள்.

3. விபுலானந்த மகா வித்தியாலய பழைய மாணவர் ...................... கூட்டத்திற்கு ஞாயிறு காலை 10.00 மணிக்கு சமூகம் அளிக்கவும்.

## 23.2 இரசனைக்காக வாசித்தல்

கீழ்க்காணும் வினாக்களுக்கு விபுலானந்த அடிகள் என்னும் பாடத்தை படித்து விடை அளிக்கவும்.

1. விபுலானந்த அடிகளின் இயற்பெயர் யாது?

   ..................................................................................................................................

2. விபுலானந்தர் படித்த மொழிகள் எவை?

   ..................................................................................................................................

3. இவரை எப்போது விபுலானந்த அடிகள் என அழைத்தனர்?

   ..................................................................................................................................

4. விபுலானந்தர் எழுதிய மிகச் சிறந்த நூல் எது?

   ..................................................................................................................................

5. விபுலானந்தரின் தாய் தந்தையர் பெயர் யாது?

   ..................................................................................................................................

## ஆக்காண்டி !........ ஆக்காண்டி !....................

இராகம் : ஹரிகாம்போதி தாளம் : ஏகம்

ஆக்காண்டி ஆக்காண்டி எங்கெங்கே
முட்டை வைத்தாய்? கல்லைப் பிளந்து
கடலருகே முட்டை வைத்தேன்.
வைத்ததுவோ மூன்று முட்டை பொரித்ததுவோ
இரண்டு குஞ்சு, மூத்த குஞ்சுக் கிரைதேடி
மூன்று மலை சுற்றி வந்தேன் இளைய குஞ்சுக்
கிரைதேடி ஏழு மலையும் ஒரு மலையாய் சுற்றி வந்தேன்
மாயக்குறத்தி மகன் வழி மறித்து கண்ணி குத்த
நான் அழுத கண்ணீரும் என் குஞ்சழுத கண்ணீரும்
வாய்க்கால் நிரம்பி வழிப்போக்கர் கால் கழுவி
குன்று நிரம்பி குதிரை குளிப்பாட்டி
இஞ்சிக்குப் பாய்ந்த இலாமிச்சைக்கு வேரொட்டி
மஞ்சளுக்குப் பாய மறுக்குது காண் அம்மனே.

## சிறுவர்கள் நாம்

சிந்தை தன்னில் தெளிவு கொண்ட
சிறுவர்கள் நாம் - ஒழுக்க
சீலர்களாய் வாழ வேண்டும்.
உலகினில் நாம்
தந்தை தாயைப் பேணி வாழும்
சிறுவர்கள் நாம் - இந்தத்
தரணி போற்ற வாழ வேண்டும்
உயர்வுடன் நாம்

நல்ல கல்வி நாடி நாளும்
பயின்றிடுவோம் - ஈன்ற
நாடு செழிக்க உழைத்து நாளும்
மகிழ்ந்திடுவோம்.
வல்லவராய் உலகில் என்றும்
திகழ்ந்திடுவோம் - நல்ல
வரலாற்றில் இடம்பிடிக்க
முயன்றிடுவோம்.

முன்னை வாழ்ந்த வான்றோர்
மொழியைப் போற்றிடுவோம் - உலகம்
முழுதும் இன்பம் காணப் பணிகள்
ஆற்றிடுவோம்.
அன்னை தந்தை பெருமை எய்த
வாழ்ந்திடுவோம் - எங்கு
அநீதி நேர்ந்த போதும் அதனைச் சாடிடுவோம்

## வானில் பறக்கும் பறவைகள்

வானில் பறக்கும் பறவைகள் பார்
வகை வகையான பறவைகள் பார்
தேனீச் சிட்டு காகங்கள்
திரிந்து திரிந்து பறக்குது பார்.

கூ கூ என்றே குயில் கூவும்
குயிலுடன் நாமும் கூவிடுவோம்
ஆகா அழகாய் மயில் ஆடும்
அதனுடன் நாமும் ஆடிடுவோம்.

பச்சைக் கிளியைப் பார்த்திடுவோம்
பறக்கும் போதே கீச்சிடுதே
இச்சையாக சேவலதும்
என்றும் காலையில் கூவிடுமே
மரத்தைக் கொத்தும் குருவியைப் பார்
மரங்கொத்தியென நாம் அழைப்போம்
அரத்தின் கூர்மை அலகுகளால்
அவை மரங்களையே கொத்திடுமே.

## இலங்கைத் தாயின் சேய்கள்

ஒன்று சேர்ந்து வாழுவோம் - இந்த
உலகை அன்பால் ஆளுவோம்.
நன்று நாடு செழிக்கவே உண்மை
நலங்கள் யாவும் செழிக்கவே.

பேதம் இனிமேல் இல்லையே
எம்முள் பிரிவு காணல் தொல்லையே
நீதி, நேர்மை நிலைக்கவே இந்த
நிலத்தில் அமைதி விளைக்கவே.

இலங்கைத் தாயின் சேய்கள் நாம்
எங்கள் இதயம் யாவும் ஒன்றேயாம்
துலங்கு தார்மீக வழியிலே வாழ்வே
தொடர்வோம் சத்திய நெறியிலே.

## நல்ல நல்ல மரங்களை

நல்ல நல்ல மரங்களை
நாங்கள் கூடி நாட்டுவோம்
நல்ல இறைவன் அருளினால்
வளர்ந்து மரங்கள் பயன் தரும்

ஆளுக்கொரு மரத்தினை
ஆசையொடு நாட்டினால்
நல்லதொரு சூழலை
நாட்டில் நாங்கள் ஆக்கலாம்.

பண்படுத்தி பசளை போட்டு
பக்குவமாய் நீரும்விட்டு பகலிரவு காவல் காத்து
பயன் பெறுவோம் வாருமே
வாருமே வாருமே.

ஸஸஸஸஸஸஸஸஸ

ஒட்டுக்கேட்டு இரகசியம்
ஊரில் எங்கும் சொல்லுதல்
கெட்ட குணத்தில் ஒன்றடா
கேட்பாய் இன்னும் கூறுவேன்

வேறு ஒருவர் பெயருக்கு
விலாசமிட்ட கடிதத்தை
யாரும் அறியா வேளையில்
எடுத்துப் பார்த்தல்கெடுதலாம்.

நண்பன் குற்றம் செய்திடில்
நயந்து கூறித் திருத்தலாம்
புண்படுத்தும் முறையிலே
போதித்திடுதல் கெடுதலாம்

ஆட்டம் தன்னில் தோற்றிடின்
ஆத்திரம் நீ கொள்வதேன்
வாட்டமாக முகத்தினை
வைத்துக் கொள்ளல் கெடுதலாம்.

## கை கொடடா

புயலடிக்குது வானம் கறுக்குது புறப்படுவோமே
பயந்துகிட்டுப் பதுங்கி வாழப் பிறக்கல்ல நாமே

வலை எடுப்போம் வாகாய் பாய் விரிப்போம்
அலைகடல் மீதிலே அஞ்சாமல் தொழில் புரிவோம்
சிலுவை நீயும் ஓடி வா சின்ன மேரிக்குட்டிக்கு
கல்யாணம் செய்யனும் காசு நிறைய சேர்க்கனும்

வானம் கறுக்குது மழையிருளுது வேணாமே மச்சான்
போன புயலை நினைக்க மனசு புண்ணாய் நோகுது
மலையைப் போல போன மைக்கல் மாண்டு போனானே
அலையினுள் அமிழ்ந்து அந்தோணி அழிந்து போனானே

மழை காற்றென்ன செய்யும் வாடா மச்சான் நீ
மானத்தோடு வாழ்வதென்றால் வழி இந்தக் கடல் தான்
கைகொடடா படகிதனைக் கடலில் தள்ளுவோம்.
கையெடுத்தே வணங்கிடுவோம் கடல் தெய்வம் காக்கும் என,

ஏலே ...................................

## சேற்றில் தாமரை

மனிதர் வெறுக்கும் சேற்றிலே
மலர்ந்து நிற்கும் தாமரை,
புனித மான கடவுளைப்
பூசை செய்ய உதவுதே

அழுக்கடைந்த சீப்பினில்
அழகு முகத்தைக் காணலாம்.
கழுத்தில் நல்ல மாலையாய்க்
கட்டி மகிழ உதவுதே!

கன்னங் கரிய குயிலிடம்
காது குளிரும் கீதமாம்.
இன்பம் இன்பம் என்று நாம்
இன்னும் கேட்கச் செய்யுதே!

விடத்தில் மிக்க பாம்பிடம்
விலையுயர்ந்த ரத்தினம்.
அட்டா, அந்த ரத்தினம்
அரசருக்கும் கிட்டுமோ!

ஊசி போன்ற முள்ளிலே
உணர்ந்த ரோஜா மலருதே
வீசி நல்ல மணத்தினை
விரும்பி அணியச் செய்யுதே!

மோசமான இடத்திலும்
மிகவும் நல்ல பொருளுண்டு
யோசிக்காமல் எவரையும்
ஏளனம் நீ செய்வதேன்!

## 24. எழுத்து

**பொருத்தமான இடங்களில் குறியீடுகளை இட்டு எழுதுதல்**

### 24.1 நிறுத்தற் குறியீடுகள் - முற்றுப் புள்ளி, முக்காற் புள்ளி, அரைப் புள்ளி, காற்புள்ளி.

முற்றுப் புள்ளி (.) முற்றுப்புள்ளியை வினாவும் மெய்ப்பாடுமல்லாத எல்லா வாக்கியங்களில் முடிவிலும் இட வேண்டும்.

உதாரணம் :-

1. அஸ்மின் பந்தை அடித்தான்.
2. மாலதி சோறு சாப்பிட்டாள்.
3. கோவிலில் மணி ஓசை கேட்டது.

முக்காற் புள்ளி (:) பிரதான விடயத்திற்கு பின்வரும் விடயம் விளக்கமாக அமையுமிடத்துப் பிரதான விடயத்தின் பின் முக்காற் புள்ளி இடப்படும்.

உதாரணம் :-

1. தோட்டம் நீண்ட காலம் பயன்படாமல் கிடந்தது: அங்கே புதர்கள் வளர்ந்து காடாகக் கிடந்தன.
2. நாட்டுப்புற வாழ்க்கையே இயற்கையான வாழ்க்கை: அங்கேயே ஒருவர் உண்மையான நட்புறவைக் காணலாம்.

அரைப் புள்ளி (;) தொடர் வாக்கியத்தில் ஒத்த அல்லது ஏறத்தாழ ஒத்த முதன்மையுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட உட்தொடர்களை இணைப்பதற்கு அரைப்புள்ளி இடப்படும்.

உதாரணம் :- 1. மின்சாரம் விளக்கேற்றுகின்றது; நீரிறைக்கின்றது; காற்று வீசுகின்றது; சமையல் செய்கின்றது; மாவரைக்கின்றது; அச்சடிக்கின்றது; இன்னும் எத்தனையோ தொழில்களைச் செய்கின்றது.

2. ஆண்டியும் இறக்கின்றான்; அரசனும் இறக்கின்றான்.

காற்புள்ளி (,) ஒரு தொடராக வரும் சொற்களையும், சொற்றொடர்களையும் துணை வாக்கியங்களையும் தனித்தனியாகப் பிரித்துக் காட்டுவதற்கு பயன்படுத்தப்படுகின்றது.

உதாரணம் :- 1. கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய ஐந்து நகரங்களிலும் பரீட்சை நடைபெறுகிறது.

2. நட்புக்கு குகனும் இராமனும், யூகியும் உதயணனும், கர்ணனும் துரியோதனனும் சிறந்த எடுத்துக் காட்டுக்களாகத் திகழ்கின்றனர்.

## 24.2 ஏனைய குறியீடுகள் ~ வினாக் குறி (?) வியப்புக் குறி (!) மேற்கோட் குறி ('....') அடைப்புக் குறி (.......)

வினாக் குறி (?) வினா வாக்கியத்தின் இறுதியில் இக்குறி பிரயோகிக்கப்படும்.

உதாரணம் :- 1. அது என்ன?

2. நீ எப்படிச் செய்தாய்?

3. அவன் வந்தானா?

வியப்புக் குறி (!) வியப்பு, விருப்பம், இரக்கம், நோய், துன்பம், உற்சாகம். அருவருப்பு, வெறுப்பு, கட்டளை, மடமை போன்ற அதீத உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் இடைச் சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்கள் ஆகியவற்றுக்குப் பின்னர் இக்குறி பிரயோகிக்கப்படும்.

உதாரணம் :- 1. ஆகா! அந்தி வானத்தின் அழகுதான் என்னே!

2. சீ! போ வெளியே!

3. ஐயோ! குழந்தை இறந்து விட்டதே!

மேற்கோட் குறி ("......") ஒருவரது கூற்றை அப்படியே மேற்கொண்டு எடுத்தாளுமிடத்து மேற்கோட் பகுதியை வேறுபடுத்திக் காட்டுவதற்கு மேற்கோட் குறி இடப்படுகின்றது.

உதாரணம் :- 1. ''இன்று சிறுகதை எழுதுவது பற்றிக் கற்போம்'' என்று மாணவர்களுக்கு ஆசிரியர் கூறினார்.

2. ஆனந்தன் நண்பனை நோக்கி "நாங்கள் படம் பார்க்கப் போவோமா?" என்று கேட்டான்.

அடைப்புக்குறி (....) இடைச்செருகலாகவோ, குறிப்புரையாகவோ வரும் பகுதியை வேறுபடுத்திக் காட்டுவதற்கு இக்குறி இடப்படும்.

உதாரணம் :- 1. பிள்ளைகளுக்கு எண் கற்பித்தலுக்கு எண்சட்டம் (மேலே படம் 1ஐப் பார்க்க) பயன்படுகிறது.

## 24.3 குறியீடுகளின் பயன்பாடு பற்றி அறிதல் ~ கருத்துத்தெளிவு, உணர்ச்சி வெளிப்பாடு, அவகாசம்.

பொருத்தமான இடங்களில் பொருத்தமான குறியீடுகள் இடப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்.

1. அபூநவாஸ் துள்ளி எழுந்தான். "நான்தான் முதலில் இறந்தேன். அரசே, காசைத் தாருங்கள்." என்றான்.
2. 'இல்லை, இல்லை; நான் தான் முதலில் இறந்தேன், அரசே, காசை எனக்குத் தாருங்கள்'' என்று மனைவியும் எழுந்தாள்.
3. "இப்படியா கோமாளித்தனம் செய்வது? செலவுக்குக் காசு வேண்டும் என்று கேட்டால் நாங்களே தந்திருப்போமே!" என்று அரசன் செல்லமாகக் கோபித்தான்.
4. "ஓ! மகாராசாவே, என் மனைவி இறந்து விட்டாள்," என்ற கதறினான்.

பயிற்சி

பின்வருவனவற்றுக்குச் சரியான நிறுத்தக் குறிகளை இடுங்கள்.

1. நுளம்பாரே நீர் குற்றவாளியா சுத்தவாளியா

   ........................................................................................................................

2. யார் நீர் பழக்கவழக்கம் தெரியாதவர் நீதி மன்றத்தை அவமதிக்கிறீர்

   ........................................................................................................................

3. அதோ பார்த்தாயா எவ்வளவு இலையான்கள் சீச்சீ இப்படி இலையான் மொய்த்த வடைகளைச் சாப்பிடலாமா

.................................................................................................................................................

4. கிருமிகள் என்றால் என்ன அப்பா பூச்சியா புழுவா

.................................................................................................................................................

5. அபூநவாஸின் மனைவியும் அரசியிடம் போனாள் தலைவிரிகோலமாக நின்றாள் அழுது புலம்பினாள் ஓ இராணியே என் கணவர் இறுந்து விட்டார்.

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

6. ஏன் அப்பா வரம்புகளை உயரமாகக் கட்டுகிறார்கள் அகலமாகக் கட்டினால் கண்ணை மூடிக் கொண்டு ஓடலாமே.

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

7. எலி பூனையைப் பார்த்து பூனையாரே நீங்கள் பெரியவர் நான் சிறியவன் தயவு செய்து என்னை விட்டு விடுங்கள் என்ற கெஞ்சியது.

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

8. அதோ பரதன் ஸ்ரீராமபிரானைக் கொல்ல படை கொண்டு வருகிறான். என் உயிர் உள்ளவரை அவன் இந்த கங்கைக் கரையை கடந்து போக முடியுமா என்பதைப் பார்க்கிறேன்.

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

# 25. பேசுதல்

**பல்வேறு வகையான பேச்சுத்திறன்களை விருத்தி செய்தல்.**

## 25.1 பேச்சு வழக்கும் மேடைப் பேச்சும்

மாணவர்களே, கீழே தரப்பட்டுள்ள தலையங்கங்களில் ஒன்றைத் தெரிந்தெடுத்து உங்களது வகுப்பில் பேச வேண்டுமாயின், நீங்கள் எவ்வாறு பேசுவீர்கள் என்பதை ஒரு கதட்டுரையாக எழுதிக் காட்டுங்கள்.

1. ஒரு வண்டிக்காரண் 2. சுத்தம் பேணல் 3. ஒற்றுமையாக இருத்தல்

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

## 25.3 பாத்திரமேற்றுப் பேசுதலும், நாடகத்தில் நடித்துப் பேசுதலும்

கீழே தரப்பட்டவற்றுள் ஏதாவது ஒன்றாக நீங்கள் மாறினால் எவ்வாறிருக்கும் என்பதைப் பற்றி கற்பனை செய்து கட்டுரை ஒன்றை வரைக.

1. நான் ஒரு வண்ணத்துப்பூச்சியானால்.........
2. நான் ஒரு சமாதானப் புறாவானால்.........
3. நான் ஒரு கடை வியாபாரியானால்.........
4. நான் ஒரு தபாற்காரனானால்.........
5. நான் ஒர சாத்திரக்காரியானால்.........

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

ஔவையாரின் புலமை, நல்ல தீர்ப்பு, ஒருவழக்கு ஆகிய நாடகங்களில் ஏதாவது ஒரு பாத்திரத்தை ஏற்று நீங்கள் நடித்த அனுபவத்தை விளக்குக.

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

## 25.4 விவாதித்தல், விமர்சித்தல்

2. கீழ்க்காணும் கருத்துக்களில் ஒன்றை ஆதரித்து அல்லது எதிர்த்து கட்டுரை வரைக.
   1. பாடசாலை ஒரு நேரம் நடத்தப்படுவதா. இரண்டு நேரங்களாக நடத்தப்படுவதா நல்லது?
   2. மாணவர்கள் தொலைக்காட்சி பார்க்கலாமா, பார்க்ககூடாதா?

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

# ஆக்கி எழுதுந் திறனை விருத்தி செய்தல்

## 26.1 ஒரு பொருள் பற்றி விளக்கி எழுதுதல்.

### தைப் பொங்கல்

தைப் பொங்கல் திருநாளை தமிழ் மக்கள் கொண்டாடுவர். உழவர்கள் தமக்கு நன்மை செய்த சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் நாளாக தை மாதத்தின் முதல் நாளை கருதி பொங்கலிட்டுக் கொண்டாடுவர். தைப் பொங்கலன்று அம்மா கோலமிட்டு விளக்கேற்றி கும்பிடுவார். பாலெடுத்து பொங்கலுக்குப் பானை வைப்பார் அப்பா. பொங்கல், பழங்கள், கரும்பு, இளநீர் ஆகியவற்றை சூரிய பகவானுக்கு நிவேதனம் செய்து பொங்கல் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடுவர்.

மாணவர்களே, நீங்களும் உங்கள் பாடாசலை, உங்கள் நாடு, உங்கள் செல்லப் பிராணி போன்றவற்றைப் பற்றி விளக்கி எழுதுங்கள்.

### எமது பாடசாலை

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

### எமது நாடு

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

**எனது செல்லப் பிராணி**

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

## 26.2 அனுபவத்தை வெளிப்படுத்தி எழுதுதல்

**நான் கடற்கரைக்குப் போனேன்.**

நான் எனது அம்மாவுடன் நேற்றுப் பின்னேரம் கடற்கரைக்குப் போனேன், பால் போன்ற மணலில் கால் புதையப் புதைய நடந்தேன். அந்த மணலில் சிப்பிகளைக் கண்டேன், அழகான சிப்பிகள் சிலவற்றைப் பொறுக்கி எடுத்தேன். கடல் ஆரவாரம் செய்து கொண்டிருந்தது. அலைகள் அடுத்தடுத்து வந்து கரையில் மோதின. கடல்காற்று ஜில்லென்று உடல் மீது இதமாகப் பட்டது. என்னைப் போன்ற சிறுவர்கள் சிலர் கடற்கரையில் பட்டம் பறக்க விட்டுக் கொண்டிருந்தார்கள்.

**எனது பிரயாணம்**

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

### எங்கள் பாடசாலை விளையாட்டுப் போட்டி

### நான் பார்த்த கலைவிழா

## 26.3 ஒரு பொருள், ஒரு சம்பவம் பற்றி வர்ணித்து எழுதுதல்.

### எங்கள் வீட்டுப் பூனையின் குட்டிகள்.

எங்கள் வீட்டில் ஒரு பூனை இருக்கின்றது. அது இன்று அதிகாலையில் பல குட்டிகளை ஈன்றது. அது அறையின் மூலையிலிருந்த கடகப் பெட்டியினுள்ளே தனது குட்டிகளை ஈன்றது. அக்குட்டிகள் பல நிறங்களில் இருந்தன. இரு குட்டியின் நிறம் பால் போன்ற வெள்ளை. மற்றொரு குட்டி நல்ல பிறவுண் நிறம். மற்றக்குட்டி வெள்ளையும்.

சாம்பலும கலநத நிறம். இன்னொரு குட்டியின் நிறம் கறுப்பும், சாம்பலும், வெள்ளையும் கலந்து இருந்தது. அவை கண்களைத் திறக்காமல் தத்தித்தத்தி தாயிடம் பாலைக் குடித்தன. நான் அவற்றைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தேன்.

இவ்வாறான பல நிகழ்ச்சிகளை, விபத்துக்களை, அதிசயங்களை நீங்கள் கண்டிருப்பீர்கள். அவற்றை வர்ணித்து எழுதுங்கள்.


**நாயும், பூனையும் சண்டையிட்ட நிகழ்ச்சி**

.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................

**தெருவில் கண்ட ஒரு சிறு விபத்து**

.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................

பிள்ளைகளே, நீங்கள் எத்தனையோ பொருட்களைப் பார்த்திருப்பீர்கள், படத்தில் காணப்படுவது வாழை மரம் ஆகும். அதனைப் பற்றி பந்தி எழுதப்பட்டுள்ள முறையைப் பாருங்கள்.



**வாழை மரம்**

வாழை மரத்தின் அருகே இரண்டு குட்டிகள் இருக்கின்றன. குட்டிகள் மிகச் சிறியவை. வாழை மரம் ஒரு குலை ஈன்றிருக்கிறது. குலையின் நுனியில் வாழைப் பூ இருக்கின்றது. வாழைக் குலை பழுத்ததும் அதனை வெட்டி எடுத்துக் கொண்டு தாய் மரத்தை வெட்டி எறிந்து விடுவார்கள்.

பிள்ளைகளே, இதே போல் பின்வரும் படத்தைப் பார்த்து ஒரு பந்தி எழுதுக.



.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

## 26.4 கடிதம், அழைப்பிதழ் எழுதுதல்

**கடிதம் எழுதும் சில முறைகள்:**

நண்பனுக்கு எழுதும் கடிதம்

சென்மேரி வீதி,
யாழ்ப்பாணம்.
11.5.96

அன்புள்ள நண்பா,

நான் நலம், நீயும் நலமாயிருக்க வேண்டுகிறேன். நாங்கள் புதிதாக கட்டிய வீட்டின் புதுமனைப் புகுவிழா வருகிற 15.5.96 இல் நடைபெற உள்ளது. அதற்கு நீயும் உனது பெற்றோரும் கண்டிப்பாக வரவேண்டும். உன் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

வணக்கம்.

இப்படிக்கு,
அன்பு நண்பன்
கோகுல்

அப்பாவிற்கு எழுதும் கடிதம்.

மாணவர் விடுதி,
இந்துக் கல்லூரி,
மட்டக்களப்பு.
12.7.96

அன்புள்ள அப்பா,

இறைவன் அருளினாலும், தங்கள் ஆசிர்வாதத்தினாலும் நான் நலமேயுள்ளேன். அவ்வாறே தங்களதும், அம்மாவினதும், தங்கை, அண்ணா ஆகியோரதும் நலத்துக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்.

ஆண்டிறுதிப் பரீட்சை இன்னும் மூன்று வாரங்களில் ஆரம்பமாகவுள்ளது. எனக்குத் தேவையான செயல்நூல்கள் சிலவற்றை வாங்குவதற்கு சிறிது பணம் தேவைப்படுகிறது. ஆகையால் தயை கூர்ந்து ரூபாய் 150/= அளவில் அனுப்பி வைப்பீர்களென நம்புகின்றேன். நன்றி. வணக்கம்.

அன்பு மகன்
ஷஜா.

ஆசிரியரிடம் வேண்டுகோள் விடுத்தல்

15.9.96

கனம் வகுப்பாசிரியர் அவர்கட்கு,

எனக்கு வயிற்றுவலி அதிகமாக உள்ளது. தயவு செய்து வீட்டுக்குச் செல்ல என்னை அனுமதிக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றேன். நன்றி.

இப்படிக்கு
பணிவுள்ள மாணவன்
ம. சுரேஷ்.

**அழைப்பிதழ்**

பிறந்த நாள் அழைப்பிதழ்

20.6.96

அன்புள்ள நண்பா,

எதிர்வரும் புதன்கிழமை 22.6.96 அன்று எனது பிறந்த நாள் கொண்டாட்ட நிகழ்ச்சி சிறப்புற நடைபெறவிருப்பதால், அத்தருணம் வருகை தந்து விருந்துபசாரத்தில் பங்கு கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

அன்புள்ள நண்பன்
எம். அஸ்மின்

இவ்வாறான சில அழைப்பிதழ்களையும் கடிதங்களையும் எழுதுங்கள்

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

## 26.6 கதை, கவிதைகளை ஆக்கி எழுதுதல்.

### ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும்....

கண்ணன் ஆண்டு நான்கில் கல்வி கற்கும் மாணவன். அவனுக்கு அப்பா இல்லை. அவனது அம்மா அவனைக் கஷ்டப்பட்டுப் படிப்பித்தார். கண்ணனும் தாய் சொல்லைத் தட்டாது நன்றாகப் படித்தான். அவனது சிந்தையில் தான் ஒரு டாக்டராக வேண்டுமென்று அவா எப்போதும் இருந்து வந்தது. அவ்வாறே, அவன் படித்து ஒரு டாக்டராக வந்தான். அவன் டாக்டரானதைப் பார்த்து அவன் தாய் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். கண்ணன் தான் சிறுவயதில் பட்ட கஷ்டத்தை நினைத்து ஏழைகளுக்கு இலவசமாக வைத்தியம் செய்தான். எல்லோரும் கண்ணனை வாழ்த்தினார்கள். அவனும் தாயாரும் பெருமை அடைந்தார்கள்.

பிள்ளைகளே, இதே போல நீங்களும் உங்களை ஒரு பொருளாக அல்லது ஒரு பிராணியாக அல்லது ஒரு உயர்ந்த பதவி வகிக்கும் மனிதராக பாவனை செய்து எழுதுங்கள்.

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

பின்வரும் பந்திகளைத் தொடர்ந்து எழுதுங்கள்.

நான் ஒரு தபால்காரர். எனது வேலை தபால் நிலையத்திலிருந்து தபால்களை எடுத்துச் சென்று உரியவர்களிடம் ஒப்படைப்பதாகும். ..................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

நான் ஒரு பொலிஸ்காரர். எனது வேலை பொலிஸ் நிலையத்தினூடாக மக்களுக்குச் சேவையாற்றுவதாகும். வீடுகளிலும், ஊர்களிலும் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்தல், கள்வர்களைப் பிடித்தல், வழக்குகளை விசாரித்தல். ..................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

## 26.6 உரையாடல் எழுதுதல்.

உமது பாடசாலையில் உம்முடன் படித்த வசந்தன் என்னும் மாணவன் தனது தந்தையாரின் தொழில் காரணமாக வேறொரு பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றிற்கு அனுமதி பெற்றுச் செல்கின்றான். உமது நண்பன் அமீரும், நீரும் வசந்தனை வழியனுப்ப புகையிரத நிலையத்துக்குச் செல்கின்றீர்கள். உங்களிடையே நடைபெறும் உரையாடலை எழுதுக.